


உங்கள் நாவல
ரூ.10/-
மாத இத
பாலகுமாரன்
பாலகுமாரன்
பதில்கள்
கடிதம்
ஜீவநதி


ஜீவநதி
பாலகுமாரன்



"வருங்கால முதல்வர் வாழ்க, வருங்கால முதல்வர் வாழ்க'' - காருக்குள் ஏறி அமர்ந்ததும், தொண்டை கிழிய சூழ்ந்துள்ள நானூறு பேரும் கூவினார்கள். அந்த நடுநிசியில் அந்த கூச்சல் கேட்டு காக்கைகள் சிறகடித்துப் பறந்து, மறுபடியும் கிளைகளில் அமர்ந்தன. தெருநாய்கள் விழித்துக் கொண்டு நாலா பக்கமும் ஓடின. வீட்டுக்குள் தூங்கிக் கொண்டிருந்த பெண்களும், மற்றவர்களும் அடித்து, உதைத்தது போல் எழுந்து தெருவுக்கு ஓடிவந்தார்கள். போலீஸ்காரர்கள் கூட்டத்தை சரிசெய்வது போல் பாவனை செய்தார்கள். அவர்களால் எவரையும் நகர்த்த முடியவில்லை. எவரும் நகர சித்தமாகவில்லை. டக்கென்று காருக்குள்ளிருந்து அவர் வெளியே வந்தார். ''நிறுத்துங்கடா'' என்று கத்தினார்.



எதிரே நின்றவன் சட்டையைப் பிடித்து, ''இன்னொரு தரம் சொன்னே, பல்லு மேலேயே போடுவேன். எத்தினி தரம் சொல்லியிருக்கேன், இந்த மாதிரி பேசாதீங்க, அப்படின்னு''

''இது எங்க ஆசை, தலைவரே... நீ வந்து தமிழ்நாட்டு முதல்வரா உட்காரணும். நாங்கல்லாம் வந்து உனக்கு மாலை போடணும். இது எங்க இருபது வருஷத்து கனா. என்னிக்கு உன் காலாண்ட வந்து சேர்ந்தனோ, அன்னையிலேர்ந்து நீ எப்ப சி.எம். ஆகப்போறன்னுதான் காத்திக்கிட்டிருக்கேன்.'' - ஒரு முதிர்ந்த மனிதர் கரகரத்த குரலில் பேச, காரிலிருந்து வெளியே வந்தவர் அவர் தோள் மீது கை வைத்தார். மெல்ல நெருங்கி அவரை அணைத்துக் கொண்டார்.

தலைவர் சற்று முன் கோபப்பட்டது சும்மா ஒரு பாவ்லாவுக்கு. அவருக்கு 'வருங்கால முதல்வர் வாழ்க' என்று கோஷமிட்டது பிடித்திருக்கிறது என்று தெரிய கூட்டம் சுதாரித்துக்கொண்டது. மறுபடியும் 'ஓ'வென்று கத்தியது. ''வருங்கால முதல்வர்'' என்று எவனோ மறுபடியும் குரல் கொடுக்க, கூட்டம் 'வாழ்க' என்று சொல்லலாமா, வேண்டாமா என்பது போல் திகைத்துப் பார்த்தது. அவர் சத்தமிட்டவனைப் பார்த்து 'உஷ்' என்று அதட்டினார்.

''உங்க மனசிலிருக்கிறது எனக்கு என்னான்னு தெரியும். நீங்க என்ன சொன்னாலும், செய்யறதுக்காகத் தான் நான் இருக்கேன். நம்ம ஊர் நல்லா இருக்கணும். நம்ம ஊர் ஜனங்க நல்லா இருக்கணுங்கிறதுதான் என்னுடைய கனவு. அதுக்குத்தான் நான் உழைக்கிறேன். நம்ம தமிழ்நாடே தகதகன்னு ஒரு காலத்துல மின்னணும்ங்கிறது என்னுடைய எண்ணம். அதெல்லாம் நேரம், காலம் நெருங்கினதும் நடக்கும். சாரங்கபாணி கோயிலுக்குப் போய் அய்யா, எனக்கு தெரிஞ்சவன் ஒருத்தன் சுகாதார அமைச்சரா இருக்கான். அவனை மெல்ல, மெல்ல மேலேத்தி விடு, அப்படின்னு கேளுங்க. கும்பேஸ்வரர் கோயில்ல போய் நின்னு ஒரு அபிஷேக ஆராதனை பண்ணி, அவன் நல்லபடியா இருக்கணும், நாட்டுக்கு உதவி செய்யணும் அப்படின்னு கேளுங்க. இன்னிக்கு நான் அமைச்சரா இருக்கிறது இவங்க ரெண்டு பேரும் கொடுத்த

பிச்சை. அவனின்றி ஒரு அணுவும் அசையாது. நாம நமக்கு சேர்ந்தவங்களுக்கு நன்மை செய்யறதுக்காகத்தான் பிறந்திருக்கோம். அதை வாயைத் திறந்து சொல்ல வேணாமேன்னு சொல்றேன். புரியுதுங்களா...'' - பிரியமும், ஆசையும் கலந்து வழிய பேசினார். சிறிய மூசசு கூட விடாமல் அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டனர். அந்த நடுவீட்டிலே சுற்றியிருந்து நாநூறு பேர்களுக்கும் அவர் குரல் தெளிவாகக் கேட்டது.

''அதனால நான் கிளம்பற போது வெறுமனே வாழ்க அப்படின்னு சொல்லுங்க போதும். மத்ததெல்லாம் கும்பேஸ்வரர், சாரங்கபாணி பார்த்துப்பாங்க. அதுக்கு மேல ஒண்ணும் சொல்ல வேணாம். அப்ப நான் வரட்டுமா... டேய்... வரேன்டா...'' - சட்டையைப் பிடித்து மிரட்டியவனை அன்போடு அழைத்து, அவன் முகத்தைத் தடவி மறுபடியும் கார் நோக்கி நகர்ந்தார்.

''எங்ககிட்ட சொல்லாம போறது நல்லால்லே...'' - இருபதடி தொலைவில் உள்ள வீட்டிலிருந்து ஒரு பெண் குரல் கேட்டது.

யார் அது என்பது போல் திரும்பிப் பார்த்தார்.

''எந்தவாட்டி அவர் உங்களாண்ட சொல்லிட்டுப் போயிருக்கார், இந்தவாட்டி உங்களாண்ட சொல்லிட்டு போறதுக்கு? வழக்கம் போல வந்தாரு, சாப்பிட்டாரு, படுத்துத் தூங்கினாரு... கார்ல ஏறி போய்க்கினே இருந்தாரு. வாசல்ல நிக்கிற போதுதான் நாம பார்க்க முடியும்.'' இன்னொரு பெண்மணி குரல் கொடுத்தவளை நோக்கிப் பேசினாள். தொலைதூரத்தில் அவரது சித்தியும், சித்தியின் மகனும் நின்றிருந்தார்கள். அவர் கூட்டத்தைப் பிளந்து நடந்து போனார்.

''என்ன வேணும் சொல்லு?'' என்று லேசான அதட்டலோடு கேட்டார்.

''ஒண்ணும் வேணாப்பா... உன்னைக் கிட்டப் பார்க்கணும். தூரத்துலேர்ந்து இதோ போறான், இதோ போறான்னு சொல்றாங்களா... எனக்கு கண்ணு தெரிய மாட்டேங்குது. நீ ஏன்னமோ நிழலாட்டம் போறே. நிழலாட்டம் வரே. கிட்ட நின்னு உன் மூஞ்சியை உத்துப்



பார்க்கணும். அதான் பொண்ணுகிட்டே கேட்டேன். அதெல்லாம் பார்க்கக் கூடாது. அது தப்பு அப்படின்னு சொல்றா. பெத்தவ புள்ளையைப் பார்க்கக் கூடாதா ப்பா'' என்று குரல் தழுதழுக்கக் கேட்டாள்.

''சரி, பார்த்துக்கோ... என்ன இப்போ?'' என்று அவர் மெல்ல அவள் கையைப் பிடித்து தன் தலையில் வைத்துக் கொண்டார்.

கூட்டம் 'ச்சு, ச்சு...' என்று நெகிழ்ந்து சூள் கொட்டியது.

''ஃபேமிலியிலே ரொம்ப அட்டாச்மெண்ட்'' என்று அவர் காதுபடவே ஒரு பெரியவர் புகழ்ந்துரைத்தார்.

''எதுனா வேணுமா?'' என்று மறுபடியும் அவர் கேட்க, ''ஒண்ணும் வேணாப்பா! நீ நல்லா இருந்தா போதும்'' என்று கிழவி கை நடுங்க கை கூப்பினாள்.

அவர் புன்சிரிப்போடு திரும்பினார். ஜனங்களை நோக்கி நடைபோட்டார். ''நான் வாசுகிட்ட சொல்லியிருக்கேம்பா.'' - நான்கடி நடந்து போனதும் கிழவி மறுபடியும் குரல் கொடுத்தாள். அவர் திரும்பி மறுபடியும் கிழவியைப் பார்த்தார். சரி என்பது போல் தலையசைத்தார். கூட்டத்தைப் பிளந்துகொண்டு காரில் ஏறி உட்கார்ந்தார். அவர் வண்டியை நோக்கி நகர, ''நானும் வாசுகிட்ட சொல்லியிருக்கேங்க.'' ஒரு முதியவர் காதோரம் சொன்னார்.

திரும்பி அந்த முதியவரைப் பார்த்துவிட்டு, தலைவர் வண்டிக்குள் ஏறி உட்கார்ந்துகொண்டார். ''இன்னும் வேற யார், யாரு வாசுகிட்ட சொல்லியிருக்கீங்க.'' என்று தலைவர் உரத்து குரல் கொடுக்க, ஒரு நான்கைந்து பேர் 'நான், நான்' என்று வந்தார்கள். திரும்பி காருக்குள் முகம் பார்த்தார்கள். எல்லார் முகத்தையும் அவர் உற்றுப் பார்த்தார்.

''சரி, வாசு எங்கே?'' என்று அவர் கேட்டார். வாசு சற்று தொலை தூரம் கும்பலைத் தாண்டி, வண்டி எந்த இடம் கடக்குமோ அந்த இடத்தில் நின்றிருப்பது தெரிந்தது.

''சரி, வண்டியைக் கிளப்பு. வாசுவை ஏத்திக்க.'' - அவர் சீட்டில் நன்கு சாய்ந்துகொண்டார். அவருக்கு தூக்கம் வந்தது.

இருபது கஜ தூரம் நகர்ந்து சற்றுத் தொலைவில் காத்திருந்த வாசுவை ஏற்றிக் கொண்டது. வாசு பின் கதவைத் திறந்து தலைவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். வண்டி சீறிற்று. கூட்டம் பிளந்து வழிவிட வேகம் எடுத்தது. தெருவைத் தாண்டியது. திரும்பியது. கூடவே சைக்கிள் மிதித்து வந்த இளைஞர்களைப் பார்த்து, 'போதும், போதும்' என்று அவர் கையமர்த்தினார். சைக்கிள்கள் பின்தங்கின. வண்டி திரும்பியது. ஊரைவிட்டு வெளியேறும் பாதையை தேர்ந்தெடுத்துக்கொண்டது. மெல்ல, மெல்ல வேகமெடுத்து சென்னைக்குப் போகும் பெரிய பாதையில் கலந்தது.

''நீ என்னடா, என் கூடவா வர்றே?'' - தலைவர் வாசுவைப் பார்த்துக் கேட்டார்.

''இல்லை, சித்தப்பா. நீங்க எங்க இறங்கச் சொல்றீங்களோ... அங்க இறங்கறேன்.''

''அப்படியா... டேய்... இத்தனை ராத்திரிக்கு மேல எங்க வண்டி கிடைச்சி, எப்படி திரும்புவ? என்னடா, ஏகப்பட்ட மனுவா?''

''ஆமா சித்தப்பா, நாப்பத்தேழு மனு இருக்கு.''

''ஒவ்வொரு தடவையும் அம்பது, அறுபதுன்னு கொடுத்துகிட்டே இருக்காங்களே...''

''என்ன பண்றது, சித்தப்பா? வேணான்னு சொல்ல முடியுமா? நீ கொடுத்துடு, நான் பேசிக்கறேன்ங்கிறாங்க.''

''இல்லையில்லை. வாங்காத விடாத. வாங்கி வைச்சுக்க. முக்கியமானது எதுனா இருந்தா சொல்லு.''

வாசு சட்டென்று தோல் பை பிரித்தான். சிறிய காகிதமெடுத்தான்.

''சித்திக்கு கண் ஆப்பரேஷன் செய்யணும். பத்தாயிரம் ரூபாய் தேட்குது.''

''எங்க பண்ணப் போறாங்களாம், ஆப்பரேஷன்? எதுக்குப் பத்தாயிரம்?''

''மெட்ராஸ் வந்து பண்ணணும். மெட்ராஸ் வந்து பண்றதுக்கு இவங்ககிட்ட காசில்லை. உங்ககிட்ட அப்பப்போ காசு கேட்க முடியாது. நீ பத்தாயிரம் கொடுத்தாக்க,



ஆரஞ்சு பழத்துக்கும், ஹார்லிக்சுக்கும் போயிட்டு வர்ற செலவுக்கும் ஆச்சுன்னு சொல்றாங்க.''

''சரி... வந்துட சொல்லு. வந்தவுடனே காசு தர்றேன்னு சொல்லு.''

''இப்ப காசு கொடுத்தாத்தான் ட்ரெய்னுக்கு டிக்கெட் எடுக்கறதுக்கே முடியுமாம்.''

''டேய்... என்னடா கதை அடிக்கிறா, அவ? டிரெய்ன் டிக்கெட் வாங்கிறதுக்கு காசில்லையாமா?''

''இல்லைன்றாங்க, சித்தி.''

''அவங்க புள்ளை சம்பாதிக்கிறதெல்லாம் எங்க போகுது?''

''அவன் வரைக்கும் கவனிச்சிகிட்டு, சித்தியைக் கவனிக்க மாட்டேன்றானாம்.''

''சரி, அஞ்சாயிரம் ரூபாய் கொடு. என் அக்கௌண்ட்லேர்ந்து எடுத்துக் கொடு''

''சித்திப் புள்ளைக்கு மாமனாரு நிலம் சம்பந்தமா ஒரு கோர்ட் கேஸ் இருக்கு. அந்த கோர்ட் கேஸ்ல இவங்களுக்கு எதிரா தீர்ப்பாகும்ங்கிற நிலையில இருக்காங்க. அதை சாதகமாக செய்யணும் அப்படிங்கிறாரு.''

''ஏண்டா, நீதிமன்றத்துகிட்டயெல்லாமா விளையாட முடியும்? இழுத்துக்கிட்டு போறதுக்கு முன்னாடி நம்மகிட்ட சொல்லியிருந்தா எதுனா செஞ்சிருக்கலாம். கேஸுன்னு போயிட்ட பிறகு, அதைப் போய் மாத்து, இதைப் போய் மாத்துன்னா முடியுமா?''

''இல்லை, அது ரொம்ப நல்ல நிலம். நம்ம சொத்தை அவங்க எப்படியாவது பிடுங்கிடணும்ன்னு பார்க்கிறாங்க.''

''யார் அது?''

''பொண்ணு கொடுத்தவங்க''

''நம்ம நிலம் அவங்ககிட்ட எப்படி போச்சு?''

''இவர் பேருக்குப் பிரிச்சுக் கொடுத்த நிலம். புள்ளை பிசினஸ் ஆரம்பிக்கிறேன்னு அந்த நிலத்தை மாமாகிட்டேயே அடமானம் வைச்சு, அந்த அடமானம் மிஞ்சிப்

போச்சு. மாம்னார்தானேன்னு இவரும் பெருசா கண்டுக்கலே. அவரும் கேட்கலை. இப்போ டக்குன்னு நிலம் வேணும்ன்னு கேட்ட போது, அதுவா அது எங்க நிலமாச்சே அப்படின்னு ஒரே வார்த்தையில சொல்லிட்டாரு. இப்படி இவர் பண்ணதே யாருக்கும் தெரியாது.''

''எந்த நிலம்? எனக்குக் கரெக்டா சொல்லு''

''ஆத்தங்கரைக்கும் வாய்க்காலுக்கும் நடுவுல இருக்கிற நிலம். அரச மரமும், பிள்ளையாரும் இருக்கிற இடம். அரச மரத்தை அறுக்கணும்ன்னு சொல்லி ஆளனுப்பிச்சாங்க. ஊர் கூடி சத்தம் போட்ட பிறகு நிறுத்திட்டாங்க. அந்த அரச மர இடத்தையும் வயலாப் பண்ணணும்ன்னு ஆட்டம் போடறாங்க. அவங்களா கரை உயர்த்தி கட்டியிருக்காங்க.''

''அரச மர நிலத்தை இவங்க வாங்கறதா? எப்படி சித்திப் பையனுக்கு அது போச்சு?''.

''உங்கப்பா செய்த வேலை. ரொம்ப ரகசியமா அதை சித்திக்குக் கொடுத்து, சித்தி அதை தன் புள்ளைக்குக் கொடுத்து அந்த புள்ளை, அதை தன் மாமானார்கிட்ட அடகு வைச்சு, இப்படி மூணு கை மாறிடுச்சு. நம்ம யாருக்கும் தெரியலை.''

''அயோக்கியத்தனமா இருக்கு. மத்ததுக்கெல்லாம் வந்து கேட்கறாங்க. இந்தம்மா இந்தக் காரியத்தைப் பண்ணிட்டு வாயே திறக்கலையே. காசு தொடுக்க மாட்டேன்னு சொல்லிடு''

''இல்லைங்க. கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டீங்கன்னா, தப்பாய்டும். அஞ்சாயிரம் கொடுங்க. வந்து மத்தது நீங்க பேசிக்குங்க. இந்த நிலத்துக்கு என்ன பண்ணலாம்ன்னு சொல்லுங்க.''

அவர் யோசித்தார். ''அந்த நிலம் அவங்களுது இல்லை. அந்த நிலம் நம்மளுது. அந்த நிலம் சித்திப் பையனுதும் இல்லை. என் பிள்ளையுடையது. சொல்லி வை. அந்த நிலத்துல, எவனாவது கை வைச்சா, கொலை விழும்ன்னு சொல்லு'' - தலைவர் உறுமலோடு பேசி முடித்தார்.



இரண்டாவது பெயரை வாசு பளிச்சென்று சிகப்பு இங்க்கால் அடித்தான். மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என்று பல கோரிக்கைகள் காரில் போகும்போது சொல்லப்பட்டன. அடுத்த ஊர் எல்லையில் கார் நின்றது. சில செக்குகளில் கையெழுத்து போட்டார். ''உனக்கெதுனா காசு வேணுமாடா..? மத்தவங்களுக்கு வாங்கிக்கறே... உனக்கொண்ணும் வாங்கிக்க மாட்டேங்கிற.''

''எனக்கெதுக்கு காசு? நான் வைச்சிக்கிட்டு என்ன பண்ணப் போறேன்? ரெண்டு லட்சம், மூணு லட்சம், நாலு லட்சமா நீங்க கொடுத்த பதினெட்டு லட்ச ரூபா தனியா இருக்கு. அதுல வர்ற வட்டியை வைச்சிக்கிட்டுத் தான் நான் குடித்தனம் பண்றேன். அதுவே எனக்கு ஜாஸ்தி. ஆமா சாரங்கபாணி கோயிலுக்கும், கும்பேஸ்வரர் கோயிலுக்கும் உங்களுக்காக போகணுமா?''

''இல்லையே... ஒண்ணும் போக வேணாமே. வீட்டு வாசல்ல ஜனங்க கிட்ட சொன்னீங்களே அதுனால கேட்டேன்.''

''அவனுக்கு எதுனா வேலை கொடுக்க வேணாமா?

> “அடுத்த தடவை அவனைப் பார்க்கிற போது, வாடா கண்ணு, சாரங்கபாணி கோயிலுக்குப் போனியா, அப்படின்னு சொன்னா போதும். கண்ணுல ஜலம் வந்துடும் அவனுக்கு.”

எனக்காக வேண்டிக்குங்கடா, அப்படின்னா, ரொம்ப மெனக்கெட்டு ஒரு கும்பலா போயிட்டு வருவான். நம்பளை நினைச்சுக்குவான். யார், யார் போறான்னு நமக்கும் வந்து சொல்வாங்க. அவன் நினைப்பு நம்ம மனசிலேயும் பதியும். அடுத்த தடவை அவனைப் பார்க்கிற போது, வாடா கண்ணு, சாரங்கபாணி கோயிலுக்குப் போனியா, அப்படின்னு சொன்னா போதும். கண்ணுல ஜலம் வந்துடும் அவனுக்கு. கூடவே இருப்பான். நாலு பேரை விசாரிக்கிறதுக்காகத்தான் அவனை நாலு பக்கமும் அனுப்பறது''

''அப்ப நான் போக வேணாமா?''

''டேய்... உனக்கு இங்கே ஏகப்பட்ட வேலை இருக்குடா. ஒரு ருவா காசு கூட கொடுக்காத, உன்னை ஏகமாக வேலை வாங்கறோமேன்னு கவலையா இருக்கு. நீ என்ன இங்க போகட்டுமா, அங்க போகட்டுமான்னு கேட்டுக்கிட்டிருக்கே.''

''உங்க காசுலதானே நான் சாப்பிட்டுக்கிட்டிருக்கேன். அப்புறம் என்னா?''

''உன் பொண்டாட்டி எப்படியிருக்கா?''

''நல்லாயிருக்கா''

''கண்ணுலேயே காணோம்.''

''அதான் வந்தவுடனேயே விழுந்து கும்பிட்டோமே... மறந்து போச்சா?''

''ஹாங்... பார்த்தேன், பார்த்தேன். பட்டுப் புடவை கட்டியிருந்தா இல்லை? ஏதோ கால் விந்தி நடந்தாப் போல இருந்தது?''

''ஆமா, ஆமாம். படி தப்பா வைச்சு கொஞ்சம் பிசகிப் போச்சு. இப்ப பரவால்லை''

''குழந்தைங்க நல்லா படிக்கிறாங்களா..? பெரியவங்கிட்டேயிருந்து லெட்டர் வருதா?''

''ஆம்... இது இரண்டாவது வருஷம். போன வாரம் தான் காலேஜ் திறந்தது. போய் வந்து சேர்ந்தேன்னு லெட்டர் போட்டான். உங்களை மெட்ராஸ்ல ஒரு தடவை போய் பார்க்கப் போறேன்னு சொல்லியிருந்தான். வந்தா கூட



உட்கார வைச்சு சாப்பாடு போடுங்க. அவனுக்கு சந்தோஷமா இருக்கும்.''

''போட்டுடலாம். அடுத்த பையன் ப்ளஸ் டூ வா''

''ஆமாம். கஷ்டப்பட்டு படிக்கிறான். அவனுக்கும் டாக்டராவணும்னு ஆசை.''

''சுமாரா படிக்கச் சொல்லு. டாக்டர் சீட்டு நான் வாங்கித் தரேன்.''

''அவன் ரோஷக்காரன். டாக்டர் சீட்டு உனக்கென்னடா, கிடைச்சிடும்னு ஊர்ல எல்லாரும் பேசறாங்களாம். அதுனால நல்ல மார்க் வாங்கி, டாக்டர் சீட் வாங்குவேன் அப்படின்னு ஊருக்கு நிரூபிச்சிக் காட்டணுமாம். அதுக்காக மூணு டியூஷன் வைச்சு, ராத்திரி பகலா படிக்கிறான்.''

''டியூஷனுக்கெல்லாம் காசு இருக்குல்ல?''

''நிறைய இருக்குப்பா. நீங்க ஏன் காசு, காசுன்னு என்னைப் பார்த்துக் கேட்டுக்கிட்டிருக்கீங்க? காசில்லைன்னா உங்கக்கிட்ட கேட்கமாட்டேனா?''

''ஒவ்வொருத்தன் எதுவுமே பண்ணாத என்கிட்டேயிருந்து காசு பிடுங்குறான். நீ இத்தனை செய்துட்டு காசு வேணாங்கிறியே..? எப்படி திரும்பிப் போவ?'' - தலைவர் கவலையோடு கேட்டார்.

''இந்த ஊர்ல மார்க்கெட்டாண்ட இறக்கிவிட்டுடுங்க. பஸ் வரும்''

''மணி பன்னண்டேமுக்கால் ஆச்சேடா. பஸ் இருக்குமா?''

''லாரி வரும். நான் போயிடுவேன்.''

''ஒண்ணு செய்யறேன். வண்டியைத் திருப்புடா. மறுபடியும் ஊர் எல்லையில இறங்கிக்கோ.''

''போற வண்டி திரும்பக் கூடாது. நல்லதில்லை. உங்களுக்கு மெட்ராஸ் போனா, ஆயிரம் வேலை இருக்கும். இப்ப போனீங்கனாத்தான் காலையில நாலரை மணிக்குப் போய் சேருவீங்க. போய்க் கொஞ்சம் தூங்கினாத்தான் காலையில மத்த வேலை பார்க்க முடியும். நீங்க என்னை இறக்கி விடுங்க. அங்க எனக்கு ஆயிரம்

ஆளுங்க இருக்கு. எவனையாவது எழுப்பி, போயிடுவேன்.''

''நிச்சயம் ஊருக்கு போயிடுவியா?''

''அந்தக் கவலையே வேணாம். நான் போயிடுவேன். நீங்க போங்க.''

வண்டி ஆளில்லாத மார்க்கெட்டில், நடுநிசியில் நின்றது. வாசு கதவு திறந்தான். இறங்கினான். மறுபடியும் மூடினான். ''அப்ப, போயிட்டு வாங்க, சித்தப்பா'' என்று கைகூப்பினான். தலைவருக்கு அவனை வெறுமே அனுப்புவதில் இஷ்டமில்லை. காலின்கீழ் இருந்த தோல் பைய்ய எடுத்தார். பிரித்தார். ஒரு ஐந்தாயிரம் கட்டை எடுத்து வாசுவின் கைகளில் கொடுத்தார். ''வச்சுக்கோ.. எதுனா செலவு பண்ணு. துணிமணி வாங்கி பொண்டாட்டிக்குக் கொடு.'' என்று கைநீட்டி பிரியத்துடன் வாசுவின் தலையில் கைவைத்து, மறுபடியும் ''வரட்டுமா?'' என்று சாய்ந்து கொண்டார்.

''சரி'' என்று வாசு தலையசைக்க, வண்டி மெல்லக் கிளம்பியது. நடுரோடுக்கு நகர்ந்தது.

அணைக் கரைச் சாலையில் அவர் நின்று கொண்டிருந்தார். இடது பக்கம் காவிரி நதி சுழலாய் நகர்ந்துகொண்டிருந்தது. ஊதற்காற்று சுழன்றடித்தது. கையில் உள்ள நோட்டுக் கற்றையை இடுப்பில் சொருகிக் கொண்டார். தோளில் பையைப் போட்டுக் கொண்டார். மெல்ல பஸ்ஸ்டாண்ட் நோக்கி நடந்தார்.

'இங்க செல்வம் வீடு எங்க இருக்கு? டீக்கடை தாண்டிப் போனோம்னா செல்வத்தை எழுப்பலாம். செல்வம் இல்லேன்னா; மாணிக்கத்தை எழுப்பலாம். மாணிக்கம் இல்லேன்னா நடராஜனை எழுப்பலாம். யாரை எழுப்பினா, டக்குன்னு ஊருக்குப் போக முடியும். யார்கிட்டே நல்ல வண்டி இருக்கு?'' என்று யோசித்தார்.

ஊதற் காற்றினால் உடம்பு குளிராக, அவர் காவிரிக் கரையோரம் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு, சிறிது நேரம் குத்திட்டு உட்கார்ந்தார். சுகமாய் நீர் பிரிந்தது. தோளில் பையைப் போட்டபடி, ஆறு பார்த்தபடி அணைக்கரையை நிதானமாகத் தாண்டினார். வானம்



துல்லியமாக இருந்தது. பாதி நிலவு பளீரென்று வீசிக் கொண்டிருந்தது. நான்கு நாரைகள் தெற்கு நோக்கிப் பறந்து கொண்டிருந்தன.

அணைக்கரையைத் தாண்டினா, சாமிநாதய்யர் தோட்டம் இருக்கும். இல்லை, முனுசாமியினுடைய டீக்கடை இருக்கும். கிருஷ்ணமூர்த்தியினுடைய பட்சணக் கடை இருக்கும். எங்கேயாவது உட்கார்ந்து இளைப்பாறி விட்டு அதுக்கப்புறம் போகலாம் என்று தோன்றியது. அணைக் கரையைத் தாண்டி இறங்க, செக் போஸ்ட் கம்பு போட்டு மறிக்கப்பட்டிருந்தது. கம்பைச் சுற்றிக் கொண்டு போகிற போது, செக் போஸ்ட் கூரைக்குள்ளிருந்து ''யாரது?'' என்று அதட்டலாய்க் குரல் வந்தது. அவர் செக் போஸ்ட் நோக்கி நடந்தார். அதட்டிய ஆள் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்.

''யாருங்க அது? இந்த நேரம் தனியாப் போறீங்க?'' - அதட்டியவன் எழுந்து நின்றான். தலையில் மப்ளரும், உடம்பில் காக்கிச் சட்டையுமாய் குடந்தை ரிசர்வ் போலீஸ் என்று பார்த்தவுடனேயே தெரிந்தது.

''என் பேரு வாசுதேவன்ங்க. கும்பகோணம் எனக்கு''

''இங்க என்ன பண்றீங்க?''

''திரும்பி ஊருக்குப் போய்க்கிட்டிருக்கேன்.''

''நடந்தா போகப் போறீங்க?'' - அவன் அடையாளம் தெரியாது கேட்டான். வேறொரு ஆள் தரையில் படுத்துக் கொண்டிருந்தவன், சட்டென்று குரல் கேட்டு எழுந்து உட்கார்ந்து, மலங்க, மலங்க முழிக்க, இவர்கள் இருவரும் எழுந்து உட்கார்ந்தவனைப் பார்த்தார்கள்.

''எங்க சித்தப்பா மெட்ராஸ் போறாருங்க. போற போது வழியில பேசிட்டே போனோம். என்னை அணைக் கரையாண்ட இறக்கிவிட்டுட்டாங்க. நான் திரும்ப ஊருக்குப் போறேங்க. பேசறதுக்காக, நான் வண்டியில இவ்வளவு தூரம் வந்தேங்க. மத்தபடி வேறொண்ணும் இல்லீங்க'' என்று பணிவாகச் சொன்னார்.

படுத்திருந்தவன் திடுக்கிட்டு எழுந்தான். உற்றுப் பார்த்தான். ''ஐயா... நீங்களா..?'' பளிச்சென்று சல்யூட் அடித்தான்.

''டேய்... அறிவிருக்காடா உனக்கு? யாரைப் பார்த்துக் கேட்கறே..? நம்ம தலைவர் அண்ணன் மகன். வாசுதேவமூர்த்தின்னு பேரு. அவரைத் தெரியாதா உனக்கு? கும்பகோணம் முழுக்க குழந்தைகளைக் கேட்டாக் கூட சொல்லுமேடா... ஐயா, தெரியாத கேட்டுட்டான். அவன் இடத்துக்குப் புதுசு. மன்னிச்சிக்கணும்.'' - மறுபடியும் சல்யூட் அடித்தான்.

''அதனால பரவாயில்லீங்க. நான் போலாங்களா?'' என்று வாசுதேவன் பணிவாகக் கேட்டார்.

''நல்லா கேட்கறீங்க, போங்க... நான் துணைக்கு வரேன் கும்பகோணம் வரைக்கும். வரட்டுங்களா..?''

''அதெல்லாம் வேணாம். ஒரு டீ சாப்பிட்டுட்டுப் போகலாம். வரீங்களா..?''

''இங்கேயே உட்காருங்களேன். நான் டீக்கு ஏற்பாடு பண்றேன்.''

''இல்லையில்லே... நாம போய் சாப்பிடலாம், வாங்க.''

''ஏம்ப்பா... நீ பார்த்துக்கோ''

''ஐயா, மன்னிக்கணும்...''.- கேள்வி கேட்டவன் வந்து நிற்க, ''அதெல்லாம் ஒண்ணுமில்லே, தம்பி... உங்க வேலையைக் கரெக்டா செய்தீங்க. எனக்குப் பரம சந்தோஷம்.'' என்று கேள்வி கேட்டவனை நிற்க வைத்து விட்டு, படுத்திருந்த காவலரோடு மெல்ல நடந்து, முனுசாமி டீக்கடைக்கு வாசுதேவமூர்த்தி போனார். உட்கார்ந்து கொண்டார். டீக்கடை சட்டென்று விழித்துக்கொண்டது. 'ஐயா, வாங்க, வாங்க' என்று கைகூப்பியது.

டீக்கடையில் புத்தகம் படித்துக்கொண்டிருந்த இன்னொரு ஆள், புத்தகத்தை கீழே போட்டுவிட்டு, லுங்கியைத் தழைய விட்டு கைகட்டி நின்றான்.

''அடுப்பு அணைச்சிட்டீங்களா... இல்லை இருக்கா?''

''மூட்டிப் போட்டுத் தரேங்க... என்ன வேணும், சொல்லுங்க.''

''அணைச்சிட்டீங்கன்னா, தொந்தரவு பண்ண வேணாம்.''



''இல்லையில்லை. இப்பதான் அணைச்சேன். சூடு குறையலை. என்ன வேணும்னு சொல்லுங்க. வெந்நீர் இருக்கு.''

''எதுனா குடிக்கிறதுக்கு சூடா இருந்தா கொடேன். டீயாயிருந்தாலும் சரி.''

''ஹார்லிக்ஸ் சாப்பிடுவீங்களா..?'' - கடைக்காரன் பவ்யமாகக் கேட்டான்.

''ரெண்டு ஹார்லிக்ஸ் போடணும். முடியுமா?''

''நல்லா போட்டுத் தரேன்.''

''கொஞ்சம் பால் கலந்து, திக்காவே போட்டுக்குங்க. கொஞ்சம் பசியாத்தான் இருக்கு'' - வாசுதேவமூர்த்தி இதமான குரலில் பேசினார்.

''நிச்சயம் போட்டுத் தரேங்க...'' - அவன் பால் காய்ச்சுவதற்கு அடுப்பு மூட்டினான். கேஸ் அடுப்பு பக்கென்று பற்றிக்கொண்டது.

''எப்பேர்பட்ட குடும்பம். எவ்வளவு சிம்பிளா மர பெஞ்சுல உட்கார்ந்துகிட்டு, ஹார்லிக்ஸ் இருக்குமான்னு கேட்கறீங்க. உங்களைப் பார்க்கிறதுக்கு பெரிய மனுஷாள் தவசு இருக்க, ரொம்ப சர்வ சாதாரணமா போலீஸ்காரனோட நடந்து வர்றீங்களே... உங்க குடும்பமே ஒரு ஆச்சரியமான குடும்பம்ய்யா.'' - போலீஸ்காரர் கைகட்டி, உடம்பு குளிர்ந்து பேசினார்.

வாசுதேவமூர்த்திக்கு ஒட்டுமொத்தமாய் அவர் குடும்பம் பற்றி யோசனை வந்தது.

''இவன் பொறந்த அன்னைக்கு எம்.ஏ. ரிசல்ட். என்னாத்துக்கு எம்.ஏ. படிக்கணும்னு எங்க அப்பா கூவ, நான் படிச்சே ஆகணும்னு சண்டை போட, ஒரு மாதிரி நிறைய காசு கரைச்சு நான் எம்.ஏ. படிச்சேன். காலையில நம்ம ஊருக்குப் பத்து மணிக்குத்தான் ஹிண்டு வரும். ஹிண்டுவுலதான் ரிசல்ட் போட்டிருக்கும். ஏழேகால் மணிக்கு இவுங்கம்மா வலியில துடிக்கிறா. இவங்கம்மாவுக்கு ஆம்பளைக் குழந்தை பிறந்தா நான் பாஸு. பொம்பளைக் குழந்தை பிறந்தா நான் ஃபெயில் அப்படின்னு நினைச்சேன். எட்டுப் பத்துக்கு இவன்

பிறந்துட்டான். ஆம்பளைப்பையன். அப்பாடா, நிச்சயமா பாஸ். மனசுல ஒரு சந்தோஷம். உள்ளேயிருந்து குழந்தை அழுகுரல் கேட்டு, நாம கையில குழந்தையைத் தூக்கிற போது, குழந்தை அழுகையை நிறுத்திரணும். நிறுத்திட்டா, நமக்கு ஃபர்ஸ்ட் கிளாஸ். நிறுத்தலைன்னா செகண்ட் கிளாஸுதான் அப்படின்னு ரெண்டாவதா ஒரு குறி. இருபது நிமிஷம் கழிச்சு, வெளிய கொண்டு வந்து எல்லாருக்கும் குழந்தையைக் காண்பிச்சாங்க. குழந்தை சிணுங்கலா அழுதுக்கிட்டுதான் இருந்தது. நான் கையில வாங்கினேன். டப்புன்னு அழுகையை நிறுத்திடுச்சு. அப்பவே தெரிஞ்சுடுச்சு. நான் ஃபர்ஸ்ட் கிளாஸ் எம்.ஏ பாஸ் பண்ணப்போறேன்னு. இவன் கால் ரெண்டுத்துக்கும் நான் முத்தம் கொடுத்துட்டு, பஸ் ஸ்டாண்ட் ஓடினேன். ஒம்பதேமுக்கால் பஸ்ஸில் முதல் கட்டு ஹிண்டு கொண்டாந்து போட்டான். பட்டுபட்டுன்னு அறுத்துப் பிரிச்சிப் பார்த்தா, முதல் நம்பர் ஃபர்ஸ்ட் கிளாஸ்ல, எம்.ஏ. நான்தான் பாஸ். மத்தது எல்லாமே செகண்ட் கிளாஸ்தான். ஃபெயில் நாலு பேர். எனக்கு எப்படி இருக்கும். அந்த பஸ் ஸ்டாண்டுலேயே கூவி, அலம்பல் பண்ணிட்டேன். என்ன மாதிரி அலம்பல் தெரியுமா?'' - தலைவர் சொல்ல எல்லோரும் வியப்போடு கேட்டுக்கொண்டிருப்பார்கள். அவ்வப்போது வாசுதேவமூர்த்தியைப் பார்த்து சிரித்துக் கொண்டிருப்பார்கள்.

''ரெண்டு கைக்கும் கத்தை, கத்தையா வெத்தலை எடுத்தேன். எவன் வாயெல்லாம் வெத்தலையா இருக்கோ, அவன் மூஞ்சியில பொத்து, பொத்துன்னு ரெண்டு கவுளி, ரெண்டரை கவுளின்னு வெத்தலையைப் போட்டேன். சாப்பிடு... நான் எம்.ஏ. பாஸ் பண்ணிட்டேன். சாப்பிடு... நான் எம்.ஏ. பாஸ் பண்ணிட்டேன். தம்பி, வெறும் வெத்தலை கொடுக்கக் கூடாதுன்னாங்க. நேரே போய் கொத்து, கொத்தாப் பாக்கெடுத்து கையில திணிச்சேன். ரெண்டு பூப்பந்து எடுத்துகிட்டுப் போய், பஸ் ஸ்டாண்டு பிள்ளையார் கோயில் கதவைத் திறக்கச் சொல்லி, அய்யரை மாலை போடச் சொல்லி, பிள்ளையார் கோயில் கதவுக்கெல் லாம் மாலை போட்டாங்க. எனக்கு அன்னையிலிருந்து, வாசுதேவமூர்த்தியைப் பார்த்தாலே ஒரு சந்தோஷம்.



அவன் பக்கத்துல உட்கார்ந்தாலே, ஒரு குதூகலம். மற்றவங்களுக்கு அவன் எப்படியோ, எனக்கு அவன் ரொம்ப ராசியான ஆள். முதன்முதல் தேர்தலில் நிற்க சொல்ல, தேர்தலில் டிக்கெட் கேட்டு லெட்டர் எழுதினது வாசுதேவமூர்த்தி பேனாவுலதான். டெல்லியில உட்கார்ந்துக்கிட்டு குழம்பிக்கிட்டிருக்கேன். தினம் என்ன பண்ணப் போறே? என்ன பண்ணப் போறேன்னு பத்திரிகைக்காரன் புடுங்கி எடுக்கறான். டெலிபோன் பேசி வாசுதேவமூர்த்தியை டெல்லிக்கு அனுப்பச் சொன்னேன். ஏரோப்ளேன்ல வந்து சேர்ந்தான். எல்லாத்தையும் மறந்துட்டு அவனுக்கு ஊர் சுத்திக் காட்டறா மாதிரி, நாலாபக்கமும் அலைஞ்சேன். பத்திரிகைக்காரங்க பின்னாடியே துரத்தறாங்க. அன்னிக்கு ராத்திரி பதினோரு மணிக்கு, எதிர்க்கட்சித் தலைவர் வழியில மடக்கி, வீட்டுக்குக் கூட்டிட்டுப் போனாரு. காலையிலிருந்து எனக்காகத்தானே அலையறே... நான் கேள்விப்பட்டேன். என் கட்சிக்கு வந்துடுன்னாரு. சாமி சத்தியமா நான் அலைஞ்சது வாசுதேவமூர்த்திக்காக. ஆனால், அவன் அதிர்ஷ்டம், நான் அவங்க தலைவரைப் பார்க்கிறதுக்கு அலைஞ்சதாக எதிர்கட்சிக்காரங்க நினைச்சுட்டாங்க. பத்திரிகைக்காரங்க அங்க போய் சொல்லிட்டாங்க. அவங்க தானா வந்து கட்சிக்கு வான்னு சொன்னாங்க. அடுத்த நாள் பத்திரிகையில என்ன நியூஸ் தெரியுமா? 'தமிழ்நாட்டுடைய தங்க வாள் என் கைக்கு வந்துவிட்டது' அப்படின்னு வட இந்தியா முழுக்க என்னைத் திரும்பிப் பார்த்தது. டெல்லியில் இருக்கிற அத்தனை பாலிடீஷியன்களும் யார் இது, யார் இதுன்னு கேட்டாங்க. கொடுத்தா இராணுவம் கொடு, இல்லைன்னா மந்திரி பதவியே வேணாம்னேன். கொடுக்கமாட்டாங்கன்னு நினைச்சேன். கொடுத்துட் டாங்க. சின்ன வயசு ஆளை இராணுவத்துல போடறீயே... இது நல்லா இல்லைன்னு சொன்னாங்க. ஆனா, என் பீரியடுலதான் இராணுவம் பல விதங்களில் புதுசாச்சு.''

வாசுதேவமூர்த்தியின் வீடு தோட்டமும், துறவுமாய், பழங்காலக் கட்டடமாய் இருந்தது. அதன் முகப்பை அப்படியே வைத்துவிட்டு, சித்தப்பா கொடுத்த காசில், பின்பக்கத்தை முற்றிலும் மாற்றினார்கள். சலவைக் கல்

போட்டார்கள். மாடியில் சுவர் முழுவதும் பூக்கள் போட்ட டைல்ஸ் பதித்து, மேடையோடு கூடிய ஹால் அமைத்தார்கள். மேடையையொட்டி இடமும், வலமுமாய் அறைகள் அமைத்தார்கள். அடுத்த பகுதியை திறந்தவெளி முற்றமாய் மாற்றினார்கள். அங்கு திறந்த தொட்டிகள் கட்டி, செடிகள் நிலவு வைத்தார்கள். நிலவு போல் தோற்றமளிக்கும் வட்ட டூம்களைப் பொருத்தினார்கள்.

வாசுதேவமூர்த்தியின் அப்பாவுக்கு குடந்தையைச் சுற்றி நாலாபக்கமும் இருக்கும் நிலங்களைக் கவனிக்கவே நேரம் சரியாக இருந்தது. வீடு கட்டுகிற விஷயத்தை காண்ட்ராக்ட் விட்டுவிடலாம் என்று சொல்ல, மறுத்தார்.

''அண்ணே, அது தப்பு. நமக்கு என்ன வேணும்கிறதை சொல்லிட்டு, நாம சொன்னபடி வருதான்னு பார்க்கிறதுக்கு ஒரு ஆள் வேணும். இல்லேன்னா அவங்க இஷ்டத்துக்கு எதுனா பண்ணிட்டுப் போயிடுவாங்க. பாத்ரூம் வெளிர் நீலம் போடச் சொல்லியிருக்கேன். அவன் கிடைக்கலை, பிங்க் போட்டேன்னுவான். இதைவிட உசத்திக் கல்லுன்னு கதைவிடுவான். காசு செலவழிக்கிறோம். நம்ம இஷ்டத்துக்குத்தான் கட்டடம் வரணும். மேல இந்த உத்தரம் பிரிச்சது எனக்குப் பிடிக்கலை. வீடு வெளிப்பார்வைக்குப், பழமையா இருக்கணும். ஆனால், உள்ளுக்குள்ளே புதுசா இருக்கணும். மறுபடியும் அதேபோல, ஓடு போடச் சொல்லுங்க. இந்த மாதிரி ஓடு கிடைக்காதுன்னு சொன்னா, புண்ணியமில்லை. இதே மாதிரி ஓடு மறுபடியும் பண்ணணும். அதுக்குன்னு அச்சு பண்ணட்டும். அதுக்குன்னு உண்டான மண்ணுல செய்யட்டும். அதுக்குன்னு தனி சூளை போடட்டும். போட்டுக் கொண்டாரலை, எனக்குக் கடும்கோபம் வந்துடும்.'' - தலைவர் நடுவீட்டில் நின்றுகொண்டு கூவினார்.

அவரைச் சுற்றியுள்ளவர்கள் பயந்து கைக்கட்டிக் கொண்டிருந்தார்கள். ''யாரைக் கேட்டுட்டு நீ உத்தரத்தைப் பிரிச்சே?'' என்று அவர் காண்ட்ராக்டரைச் சீற, அவர் கூச்சமின்றி, தலைவரின் தாயாரைக் கைகாட்டினார்.

''இந்த உத்தரத்தைப் பிரிக்கிறதுக்கு வீட்டிலிருக்கிற லேடீஸைக் கேட்பியா? என்ன கொழுப்புடா உனக்கு?



அந்தம்மாவா உனக்கு காண்ட்ராக்ட் கொடுத்தாங்க? அந்தம்மாவைக் கேட்டுட்டு காரியம் பண்ணுன்னா உன் கிட்ட சொன்னேன்? பொறுப்பில்லாத நாயே?'' - பல்லைக் கடித்துக் கொண்டு உஷ்ணமாய் சீறினார். அவர் அவ்வளவு கோபப்பட்டு சுற்றியுள்ளவர் பார்த்ததேயில்லை. சட்டென்று பிரகலாதன் போல், வாசுதேவமூர்த்தி முன்னுக்கு வந்தார்.

''சித்தப்பா, நான் பார்த்துக்கறேன். என்னாண்ட விடச் சொல்லுங்க. என்ன பண்ணணும்ன்னு என்கிட்ட சொல்லிட்டு போங்க. அதை நான் பேப்பர்ல குறிச்சுக்கறேன். அதேவிதமா ரிப்பேர் பண்ணச் சொல்லி நான் சொல்றேன்.''

''வெரிகுட். வா...'' அவனை நோக்கி தலைவர் கை நீட்டினார். அவனை அணைத்துக்கொண்டார். ''வெளியே போ. ரெண்டு நாள் கழிச்சு வந்து பாரு'' என்று காண்ட்ராக்டரைத் துரத்தினார். காண்ட்ராக்டர் பிடறியில் கால்பட ஓடிப் போனார்.

வாசுதேவமூர்த்தி தொட்டதுமே அவர் குழுமையானார். அவனுக்கு அருகில் உட்கார்ந்துகொண்டு, இட்லியும், வடை கறியும் ரசித்து உண்டார். ''காலேஜுக்குப் போயிட்டு, இதையும் பார்த்துக்கிட்டு, எப்படி முடிப்ப?''

''காலேஜ் போறது ஒண்ணும் முக்கியமில்லை, சித்தப்பா. பரீட்சை எழுதறதுதான் முக்கியம். கடைசி நேரத்துல டியூஷன் வைச்சுப் பாஸாயிடுவேன். இந்த வேலை வேற யார் செய்ய முடியும், சொல்லுங்க...''

''கரெக்ட். நான் எதுக்காக வீடு பழசு மாதிரி இருக்கணும்ன்னு சொல்றேன், தெரியுமா..?'' - தலைவர் காதோரம் கிசுகிசுப்பாய்க் கேட்டார்.

''அதுதான் கண்ணை உறுத்தாது, சித்தப்பா. மற்றபடி, மேலெயெல்லாம் இடிச்சி கட்டினோம்ன்னா, எவ்வளவு பெரிய வீடு கட்டிட்டான் பாரு... அப்படின்னு ஜனங்க பேசுவாங்க. நாம அப்படி செய்யக் கூடாது. உள்ளுக்குள்ளே மாத்திக்கணும். வெளியே வீடு பழைய வீடாகவே இருக்கணும். பழைய வீடா இருந்தாத்தான் திருஷ்டி படாது.''

தலைவருக்கு அங்கமெல்லாம் குளிர்ந்தது. எச்சில் கையோடு வாசுதேவமூர்த்தியைத் தழுவிக்கொண்டார். ''விரை ஒண்ணு போட்டா, சுரை ஒண்ணு முளைக்குமா?

ரொம்ப சந்தோஷம். இந்த வேலையை முழுக்க செய்து காமி. நான் உன்னை இன்னும் பெரிய இடத்துக்குக கூட்டிட்டுப் போறேன்.'' - முதுகு தட்டிச் சொன்னார்.

''சித்தப்பா, வேலை வாங்கறதை மட்டும் எங்கிட்டே விட்டீங்கன்னா, நான் சொல்றதை செய்ய மாட்டாங்க.''

''வேற என்ன வேணும்?''

''காசு கொடுக்கறதையும் நானே செய்யணும். காசு தீர்மானம் பண்றதும் நானே தீர்மானம் பண்ணனும்.''

''நிறைய காசு ஆகுமே, அப்ப? ரெண்டரை லட்ச ரூபா பட்ஜெட் நான் போட்டிருக்கேன். அவன் எப்படியும் என்கிட்ட மூன்றரை பிடுங்கிறதுக்குப் பார்ப்பான்.''

''நான் ஏமாறாம இருக்கிறதுக்கு முயற்சி பண்றேன், சித்தப்பா. அப்படியே ஏமாந்தாலும் பரவாயில்லை, எனக்குக் கொஞ்சம் அனுபவம் கிடைக்கும். யாரு எப்படியெல்லாம் ஏமாத்துவாங்கன்னு, நான் கொஞ்சம் கத்துக்கறேன்.''

''ஒண்ணு செய். நான் நாளைக்கு சாயந்திரம்தான் ஊருக்குப் போறேன். இன்னிக்கு வீட்டுக்கு வா. அதுக்குள்ளேயும் அவன்கிட்ட பேசி, இதுவரைக்கும் என்ன செலவாயிருக்குங்கிறதை, கறந்துகிட்டு வா. சரியா தகவல் தரானாங்கிறத ஒரு தடவைக்கு ரெண்டு தடவைக்கு விசாரிச்சுக்கோ. இந்தத் தகவல் உன்னால சரியா வாங்க முடிஞ்சா, நான் உன்னையே இந்தப் பொறுப்புல உட்கார வைக்கிறேன். புரியுதா?'' - பதில் எதிர்பார்க்காமல் இவர் வெளியேறினார். அன்றைக்கும் வாசலில் நாநூறு பேர் இருந்தார்கள்.

வீட்டு வாசலில் அவர் வந்ததும், வாழ்கவென்று கோஷம் போட்டார்கள். அவர் கார் முன்னே போக, பல லாரிகளில், பஸ்களில் ஏறிக் கொண்டு பின்தொடர்ந்தார்கள். தோட்டம் காலியானதும், தொலை தூரத்தில், சிமெண்ட் பெஞ்சில் கால்கட்டி உட்கார்ந்திருக்கிற காண்ட்ராக்டரை வாசுதேவமூர்த்தி பார்த்தான். ஓர் ஆளை அனுப்பி மேலே வரும்படிச் சொன்னான். பத்தொன்பது வயது வாசுதேவமூர்த்தி, ஐம்பத்துநாலு வயது காண்ட்ராக்டரிடம் கேள்விகள் கேட்கத் தொடங்கினான். விதியே என்று அந்தக் காண்ட்ராக்டரும் பதில் சொல்லத் தொடங்கினார்.



''இந்த காண்ட்ராக்ட் இருக்குது, போகுங்கிறது பத்தி முக்கியமில்லை. தொடர்ந்து பல காண்ட்ராக்ட் தலைவரால உங்களுக்கு வரணும். உங்களை அவர் மெட்ராஸ் கூட்டிக்கிட்டுப் போய், நல்ல உயரமான இடத்துல உட்கார வைக்கணும். இதுமாதிரி லட்சியங்கள்லாம் உங்களுக்கு இருந்ததுனாக்க, நான் சொல்றபடி சிலது கேளுங்க. இதுல பெருசா லாபம் பார்க்காதீங்க. இதுல கெட்ட பேர் வாங்கிடாதீங்க. இப்ப இதுல கேட்ட பேர் வாங்கினா, நீங்க என்ன பண்ணினாலும் தலைவர் உங்களைத் திருடன்னு தான் கூப்பிடுவார். தயவு செய்து இந்த பேர் வாங்கிடாதீங்க ஐயா. தலைவர் மேல, மேல போய்க்கிட்டே இருக்கப் போறாங்க. அவரோட நாமளும் போகணும். அதனால சொல்றேன். எவ்வளவு செலவு பண்ணீங்கன்னு எனக்கு சொன்னீங்கன்னா, அதுக்கேத்தபடி, கொஞ்சம் கூட வைச்சு உங்களுக்கு ரெண்டு மூணு காண்ட்ராக்ட் வாங்கித் தரேன்.''

காண்ட்ராக்டருக்கு நம்பிக்கையில்லை. அரை மனதாய் அவனிடம் பேசினார். 'தலையெழுத்து, உங்கிட்டேயெல்லாம் பதில் சொல்ல வேண்டியிருக்கு' என்று முணுமுணுத்தார். வாசுதேவமூர்த்தி கவலைப்படவேயில்லை. அதை அவமானமாய் எடுத்துக்கொள்ளவேயில்லை. துருவி, துருவி, நோண்டி, நோண்டி அவரிடம் சகலமும் வாங்கினான். ஒரு முறைக்கு இரு முறை கேட்டு விஷயங்களைத் தெளிவுபடுத்திக்கொண்டான். அன்று மாலையே வேறு காண்ட்ராக்டரிடம் போய், இதற்கெல்லாம் என்ன செலவாகும் என்று கேட்டு குறித்து வைத்துக் கொண்டான். ''எனக்கு காண்ட்ராக்ட் வாங்கிக் கொடு, தம்பி. நான் இதைவிட பெட்டரா செய்து தரேன்.'' என்று அவர் சொல்ல, ''நிச்சயமாய் வாங்கித் தரேங்க. அதுக்காகத்தான் வந்தேன்'' என்று அவரிடம் சொல்லிவிட்டுத் திரும்பினான்.

இப்போது செய்த காண்ட்ராக்டர் எந்த இடத்தில் தவறு செய்தார் என்பதை, சுட்டிக்காட்ட, அதை வைத்துக் கொண்டு வேலை செய்த காண்ட்ராக்டரிடம் விவரம் கேட்க, அவர் மிரண்டார். ''நீ சிவில் இஞ்சினியரிங் படிக்கிறியா?'' என்று முட்டாள்தனமாய்க் கேட்டார்.

மறுநாள் தலைவர் கிளம்பும் நேரத்திற்கு அவனை அழைத்து, வீடு பற்றி விசாரிக்க, அவன் தான் செய்த செயல்களனைத்தையும் மடமடவென பட்டியலிட்டான். வேறு ஒரு காண்ட்ராக்டரிடம் போய் விவரங்கள் சேகரித்து வந்ததை மறைத்துவிட்டான். இரண்டரை லட்ச ரூபாய் அதிகம். இரண்டு லட்ச ரூபாயிலேயே முடித்துவிடலாம் என்று தெள்ளத்தெளிவாகப் பேசினான். டைல்ஸ் வாங்கவும், சிமெண்ட் வாங்கவும், இரும்புக் கம்பிகள் வாங்கவும், சென்னை வர வேண்டியிருக்கும் என்று சொன்னான். இவைகளைக் காண்ட்ராக்டரிடம் ஒப்படைக்காமல் தானே வாங்கப் போவதாகச் சொன்னான்.

தலைவர் சந்தோஷமானார். "நீ வர்ற நேரத்துக்கு மெட்ராஸ்ல இருப்பேனான்னு தெரியாது. ஆனா உன்னுடைய இன்னொரு சித்தப்பா இருப்பான். அவன் வீட்டுக்குப் போய் தங்கிக்க. அவசியமா இருந்தா அவனைத் துணைக்குக் கூப்பிட்டுக்க. மெட்ராஸ்ல நம்ம கட்சி ஆள் ஒருத்தரு இருக்காரு. அவர் இந்த வேலை தெரிஞ்சவரு. அந்த விலாசமும் தரேன். அவரையும் போய் பார்த்துப் பேசிட்டு வா" என்று விலாசங்கள் கொடுத்தார். கற்றையாய் இரண்டு லட்ச ரூபாய் காசு கொடுத்தார். அவன் தன்னுடைய இரும்பு பீரோவில் வைத்து, அதைப் பூட்டினான். சாவியை உள்பாக்கெட்டில் வைத்துக்கொண்டான். தன் வீடு, தன் பீரோ, தன் காசு, தன் சாவி என்று பத்தொன்பது வயதில் ஒருவன் இருக்க முடியுமானால் அதைவிட வாழ்க்கையில் வெற்றி எதுவுமில்லை. அவனிடம் காசு கொடுத்தது, வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், கும்பகோணத்திலுள்ள மற்ற நண்பர்களுக்கும் தெரிந்தது. ஆச்சரியத்தோடு அவனை எல்லோரும் பார்த்தார்கள். அவனைச் சகலரும் கண்காணிக்கத் தொடங்கினார்கள். அவன் முன்னிலும் ஒழுக்கமானவனாய், எவரோடும் அதிகம் பேசாதவனாய் மாறினான். தானாகப் போய் கடை, கடையாய் ஏறி இரும்புக் கம்பிகளையும், சிமெண்டும், ஒட்டு டைல்சும், மரங்களும் விலை கேட்டு வந்தான். டைரி முழுவதும் கடைப் பேர் எழுதி குறித்துக் கொண்டான். கட்சி நண்பரோடு, "இப்பதாங்க மெட்ராஸ் வரேன். என்னை எங்கனா கடைக்குக் கூட்டிக்கிட்டுப் போங்க." என்று வேண்டினான்



அவர் கூட்டிக்கொண்டு போன கடைகளின் விலையையும் குறித்துக்கொண்டான். "உங்களோட வந்தா கூடுதலா விலை சொல்றாங்கய்யா" என்று மற்ற கடைகளின் விலையைக் குறிப்பிட்டுக் காட்டினான். அசந்துபோனார். நீயே வாங்கிக்கொள் என்று ஒதுங்கிக் கொண்டார்.

"யாருப்பா நீ. அடிக்கடி வந்து கேட்கறே..." - ஒரு மரக்கடைக்காரர் அவனைப் பார்த்துக்கேட்டார். அவன் தன்னுடைய சித்தப்பாவின் பெயரைச் சொன்னான். தலைவர் பெயர் சொன்னதும் அவர் மிரண்டு எழுந்தார். "அப்படியா... கும்பகோணத்திலே எனக்கு வீடு இருக்குது. அவரை வாங்கிக்கொள்ளச் சொல்கிறாயா?" என்று கேட்டார்.

"விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன்" என்று வாக தேவமூர்த்தி சொல்ல, அவர் அவனுக்கு அற்புதமான மரங்களைத் தேர்ந்தெடுத்துக்கொடுத்தார். இரும்புக் கம்பிக்கு தனியாக ஒரு கடை கூட்டிக்கொண்டு போனார்.

"மரத்துல ஏமாத்தலாம். கம்பியில ஏமாத்த முடியாது. கம்பியில குவாலிட்டியெல்லாம் நல்லாதான் இருக்கும். எடையிலதான் கொஞ்சம் முன்ன, பின்ன செய்வாங்க. அது பண்ணாத நான் உனக்கு நல்ல கம்பி வாங்கித் தரேன்" என்று சொல்லி, கம்பியை லாரியில் ஏற்றினார். டைல்ஸ் தனியாக அட்டைப் பெட்டியில் அடுக்கி ஏற்றப்பட்டது. சிமெண்ட் மூட்டைகள் சுற்றி அடுக்கப்பட்டது. ஒண்ணே கால் லட்ச ரூபாய் சாமான்களோடு குடந்தைக்கு வந்து இறங்கி காண்ட்ராக்டரிடம் சாமான்களைக் காட்ட திகைத்துப் போனார்.

கடைசியாய் ஒரு நூறடி நீள மரம் தேவைப்பட்டது. ஆறு, ஏழு துண்டுகளாய் இருக்கலாம் என்று சொல்லப்பட, அதைத் தவிர ஓடுகளுக்கு அடியே போடும் பட்டை ரீப்பர் தேவையாக இருந்தது. வெறும் ரீப்பராகப் போடாமல் வார்னீஷ் அடித்து, பூச்சியிலிருந்து பாதுகாக்கும்படியான நிலையில் அதை மேலே மாட்ட வேண்டியிருந்தது. மறுபடியும் சென்னை கிளம்பினான். உறவினர்கள் வீட்டின் திருமணத்திலும் கலந்துகொண்டான். போய் மரம் வாங்கி,

மரம் ஏற்றிய லாரியிலேயே கும்பகோணம் திரும்ப முடிவு செய்தான்.

''லாரி போகட்டும். நாம பின்னாடியே போவோம். நானும் வரேன், கும்பகோணத்துக்கு'' - மரக்கடைக்காரர் சொன்னார். மரக்கடைக்காரரை வீட்டுக்கு அழைத்து வந்தான். தங்க ஏற்பாடு செய்தான். சாப்பாடு போட்டான். அவரோடு காவிரிக் கரையிலுள்ள அவருடைய பெரிய பங்களாவைப் போய் பார்த்தான். என்ன விலை சொல்கிறார் என்று கேட்டுக் குறித்துக்கொண்டான். கணக்கில் காட்ட வேண்டிய தொகை, காட்டக் கூடாத தொகை என்று பிரித்து எழுதிக்கொண்டான்.

''அடுத்த வாரம் சித்தப்பா கும்பகோணம் வருவார். இல்லை, நான் டெல்லிக்குப் போகும்படியா இருக்கும். எது இருந்தாலும் நான் உங்களைப் பத்தி அவரண்டை பேசறேன். இந்த வீடு அவர் வாங்குவாருன்னு நினைக்கிறேன். இந்த வீட்டைப் பத்தி ஒரு தடவை கார்ல போகும்போது பேசியிருக்கிறார்'' என்று நம்பிக்கை கொடுத்தான்.

வீடு கட்டி முடித்ததும் டெலிபோனில் பேசினான். ''நான் வெளிதேசம் போவேன்னு நினைக்கிறேண்டா கண்ணு. இப்போதைக்கு நான் வர முடியாது. தொடர்ந்து என்ன பண்ணணுமோ, அதை நீ பண்ணிக்கோ.'' சித்தப்பா சொல்லிவிட்டு போன் வைத்துவிட்டார்.

தொடர்ந்து என்ன பண்ண வேண்டும்? கிரகப் பிரவேசம் பண்ணணும். வீடு கட்டியிருக்கே. வீடு கட்டின அளவுக்கு, பெரிய அளவுல கிரகப் பிரவேசம் பண்ண வேணாமா? பெரிய அக்னி குண்டம் வைத்து, ஆளுயர அக்னி வளர்த்து, இருபது அந்தணர்களைக் கூப்பிட்டு, பூஜை செய்யச் சொல்லி, பூஜை செய்கின்ற அன்றே, சுவரில் வெங்கடாஜலபதி படம் தஞ்சாவூர் பெயிண்டிங்காய் வைத்து. எல்லாவற்றையும் போட்டோ எடுக்கச் செய்து, எல்லா வேலையும் முடிந்ததும் காலேஜுக்குப் போனான்.

''ஐயா, வாங்க...'' பிரின்சிபால் அழைத்தார். ''காலேஜுக்கு வராமாதிரி எண்ணம் இருக்கா, இல்லைங்களா?''

''ஐயா, நீங்க வரவேண்டாம்ன்னா வரலை. வரச்சொன்னா வரேன்.'' - அவன் பணிவாகச் சொன்னான்.



''எப்ப உங்களால வர முடியுங்க?''

''அப்பப்ப வர முடியுங்க...'' என்று அவன் சொல்ல, அவனை வியப்போடு பிரின்சிபால் பார்த்தார்.

''கும்பகோணத்துல தலைவருக்கு இருக்கிற வேலையை நான்தான் செய்யணும். இதை விட்டுட்டா பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும். அதனால தயவு செய்து மன்னிச்சிக்குங்க. நீங்க மனசு வைச்சு பரீட்சை எழுதச் சொன்னா, எழுதறேன். இல்லியா, அப்படியே திரும்பிப் போய் பரீட்சை எழுத விடலை, சித்தப்பா, அப்படின்னு சொல்றேன்'' என்று மிருதுவாகப் பயமுறுத்தினான்.

''பரீட்சை எழுதப்பா'' என்று கல்லூரி முதல்வர் அவனை அனுமதித்தார். நண்பர்களோடு ஒன்றாக உட்கார்ந்து கடைசி நிமிடம் படிக்க, படிப்பு என்னவென்று அவனுக்குப் புரிந்தது. எந்தக் கூடத்தில் ஹோமம் நடந்ததோ, அந்தக் கூடத்தில் மாணவர்களை அழைத்துவந்து உரக்கப் படிக்கச்சொல்லி, தானும் கேட்டு, தானும் உரக்கப் படித்து மனதில் பதிய வைத்துக்கொண்டான். மாலையானதும் மாணவர்களோடு மெல்ல நடந்துபோய், கோதுமை அல்வாவும், மசால் தோசையும், டிகிரிக் காப்பியும் விருந்து வைக்க, அழுத்தமாய் ஆறு நண்பர்கள் அவனுக்கு சேர்ந்தார்கள். பரீட்சை முடிந்த பிறகும் அவர்கள் ஒன்று கூடினார்கள். அதில் ஒரு பையன் கர்நாடக சங்கீதத்தை மிக எளிதாக அவனுக்குக் கற்றுக்கொடுத்தான். சினிமா பாடல்களோடு கீர்த்தனைகளைப் பாடி ராகம் தெளிய வைத்தான். அங்குள்ள மற்ற ஆறு பேரும் அந்தப் பையனிடம் பாட்டு கற்றுக்கொண்டார்கள். பாட்டை எப்படி ரசிப்பது என்று கற்றுக் கொண்டார்கள். இன்னொரு பையன் சூரிய நமஸ்காரம் செய்வது எப்படி என்று கற்றுக்கொடுத்தான்.

''சூரியனை எப்படி மத்தியானம் பார்க்கிறோமோ, அது மாதிரி காலையிலேயும், விடிகாலையிலேயும் பார்க்கணும். காலையில நாலரை மணிக்கு உங்க வீட்டுக்கு வரேன். எழுந்து வெளியே வர்றீயா? நாலரையிலிருந்து ஆறு மணி வரைக்கும் நடப்போம். பாலம் தாண்டி மெயின் ரோடுல ஜாகிங் போவோம்'' என்றான்.

அவன் கட்டளைக்கு மற்ற ஆறு பேரும் கீழ்ப்படிய நாலரை மணிக்கெல்லாம் தெருவில் விசுக்விசுக்கென்று

நடக்கின்ற பழக்கம் வந்தது. ஆங்கிலப் புத்தகங்கள் படிக்கிற பழக்கமும், ஹிண்டு பேப்பர் படிக்கிற பழக்கமும் அந்த நண்பர்களால்தான் ஏற்பட்டது.

''நீயா? ஃபர்ஸ்ட் கிளாஸா? என்னடா இது, கும்ப கோணத்துக்கு வந்த சோதனை?'' - கல்லூரி முதல்வர் வாசு தேவமூர்த்தியைப் பாராட்டினார். ''உங்க சித்தப்பாவை காலேஜுக்குக் கூட்டிகிட்டு வாயேன்'' என்று வேண்டு கோள் வைத்தார்.

''சபாஷ், ரொம்ப அற்புதமா பண்ணியிருக்கே. நீயா பண்ணதுதானா? யாருமே துணைக்கில்லையா? யாரோ டேயும் பேசலையா?'' - சித்தப்பா வீடு வந்து சுற்றிப் பார்த்துவிட்டு மகிழ்ந்து போனார். முற்றத்தை நிலவொளி யாய் மாற்றியிருப்பது பார்த்து மிகவும் சந்தோஷப் பட்டார். முற்றத்தில் கொடிகளும், செடிகளும் இருந்து நடுவிலே நீண்ட கயிற்றுக் கட்டில்கள் போடப்பட்டிருப்பது பார்த்து சந்தோஷமானார். நண்பர்களைக் கூட்டிவந்து பெருமை பொங்கக் காட்டினார். வேறு ஹாலில் அமர்ந்து பாட்டு கேட்டு, பகல் முழுவதும் சீட்டாடி, முறுகலான தோசையும், கோழிக் குருமாவும் வீட்டில் செய்து தர, சந்தோஷமாய் சாப்பிட்டார்.

''எவ்வளவு செலவாச்சு? எகிறிட்டிருக்குமே..?'' - கவலையோடு கேட்டார்.

''பத்தாயிரம் ரூபாய் கையில பாக்கி இருக்கு, சித்தப்பா'' - அவன் எடுத்துக்கொண்டு ஆயிரத்து நூற்றி நாற்பது ரூபாய் செலவு போக, மீதிக் காசை அவரிடம் எண்ணி நீட்டினான். அவர் வாங்கிக் கொண்டார். அவனை மிகுந்த காதலோடும், கனிவோடும் பார்த்தார்.

''டெல்லிக்கு வந்துடறீயா?''

''வேணாம்.''

''இங்கே நிறைய விஷயங்கள் நடக்கப் போகுது. நிறைய மாறப் போகுது. நான் உன்னை இந்த இடத்துல வைக்கிறேன். உனக்கொண்ணும் இதுல வருத்தம் இல்லையே...''

''இல்லை சித்தப்பா... எனக்கு இந்த கும்பகோணம் தான் பிடிச்சிருக்கு. டெல்லியில ஒண்ணும் இல்லேன்னு தோணுது, சித்தப்பா''



''சரி, உனக்கு என்ன வேணும்?''

''மோட்டர் சைக்கிள் வேணும், சித்தப்பா''

''டேய்... விழுந்து அடிபடறதுக்கா? கண்மண் தெரியாம ஓட்டுவீங்க. மோட்டர் சைக்கிள் கிடையாது.''

''சரி, சித்தப்பா. நான் பஸ்ஸிலேயே போறேன்.'' - அவன் அமைதியாகப் பின்வாங்கினான்.

சிலநாள் பொறுத்து சென்னையிலிருந்து, ஒரு ராயல் என்ஃபீல்ட் புல்லட் மோட்டர் சைக்கிள் அவன் வீட்டு வாசல் வந்து நின்றது.

''கண்ணு, பட்டீஸ்வரன் கோயிலாண்ட கொண்டு போய் வைச்சுட்டு, அங்கிருந்து வண்டியை எடு.'' - சித்தப்பா டெல்லியிலிருந்து போன் செய்தார். மறுமுறை வரும்போது மரக்கடையார் வீடு பார்க்கிறேன் என்று சொன்னார்.

சித்தப்பா குடந்தை வர மரக்கடைக்காரர் வீடு கூட்டிப் போய் காட்டினார். பார்த்தவுடனேயே அவருக்குப் பிடித்து விட்டது. ஆனால், பதறவில்லை. கல் போல முகத்தை வைத்துக்கொண்டு.. ''பார்த்துட்டேங்க... ரொம்ப சந்தோஷம்.'' என்று காரில் ஏறிவிட்டார்.

''எப்படியாவது இந்த வீட்டை முடிச்சிடணும். நாமதான் வாங்கணும். வேற யாரும் போட்டி போடறதா கூட என் காதுக்கு வரக் கூடாது. அதே சமயம் அவன் சொன்ன விலை ரொம்ப ஜாஸ்தி. படியறமாதிரி விலை வந்தா, இந்த வீட்டை வாங்கிடணும்.'' - கட்டளையிட்டார்.

தானே அதை செய்து முடிப்பதாய் வாசுதேவமூர்த்தி சொன்னதும், அவர் அவனை ஆச்சரியத்தோடு பார்த்தார்.

''என்னால முடியலேன்னா, உங்களைக் கூப்பிட றேன்'' என்று வாசுதேவமூர்த்தி மறுபடியும் பணிவோடு சொல்ல, அவன் தலையைக் கலைத்து ஆசீர்வதித்தார் வீடுவாங்கணுமேடா... என்ன. பண்றது?'' - ஆறு நண்பர்களுக்கு எதிரே கவலையோடு வாசுதேவமூர்த்தி பேச, அந்த நண்பர்களும் கவலையானார்கள்.

''நல்ல வீடு நல்ல விலைக்கு வாங்கணும்னா, வாஸ்து புருஷன் கண் திறக்கிற அன்னிக்கு மண்ணு திங்கணும்.

வாஸ்து வீடு காமிச்சுடுவான். வர மாசம் இருபத்திமூணாம் தேதி, பகல் பதினோரு மணிக்கு வாஸ்து புருஷன் கண் முழிக்கிறதா, எங்க வீட்டுல பேசிக்கிட்டாங்க. நான் சரியா நேரம் தெரிஞ்சிக்கிட்டு வரேன்.'' ஸ்ரீனுவாசன் என்கிற ஸ்நேகிதன் பேசினான்

''வில்லங்கம் எதுனா இருக்கான்னு பார்க்க ணும்டா...''

''எங்க சொந்தக்காரர் ஒருத்தர் ரிஜிஸ்டர் ஆஃபீஸ்ல இருக்கார். நான் போய் விசாரிச்சுட்டு வந்துடறேன்.''

சித்தப்பா சென்னையிலிருந்து ஒரு என்ஜினியரை அனுப்ப, அவரை அழைத்துக்கொண்டு போய் வீடு முழுதும் திறந்துகாட்டினான். மதிப்பு போட்ட மறுநாளே, திருச்சியிலிருந்து இன்னொரு என்ஜினியரை அழைத்து வந்து, அவரையும் மதிப்பு போடச் சொல்லி, அவர் மதிப்பு போட்ட அடுத்த நாள் மதுரையிலிருந்து இன்னொரு என்ஜினியரைக் கூட்டி வந்து, அவருக்குக் கேட்ட காசைக் கொடுத்து, மதிப்பு போடச் சொல்லி, எழுதி வாங்கி வைத்துக் கொண்டான். திடீரென்று நண்பர்களில் ஒருவன் அவனுக்கு ஒரு யோசனை சொன்னான்

''இந்த மாதிரி ஒரு லெட்டர் ஹெட் அடிக்க நூறு ரூபாய் செலவாகுமா? நூறு ரூபாய் கொடுத்து ஒரு லெட்டர் ஹெட் அடிப்போம். இவருன்னு சொல்லி யார் பேரையாவது போடுவோம். இவங்கள்லாம் கொடுத்ததை விட, கொஞ்சம் குறைச்சலா, ஒரு லட்ச ரூபாய் கம்மியா ஒரு எஸ்டிமேட் தருவோம். நிலத்து விலையைக் குறைக்காம, கட்டடத்து விலையைக் குறைப்போம். அதுக்கு ஒத்து வராரான்னு பார்ப்போம்'' என்று யோசனை சொன்னான்.

உடனே அதை நிறைவேற்ற சொன்னான். நண்பர்களில் ஒருவன் மாயவரம் போய் லெட்டர் ஹெட் அடித்து வர, அந்த போலி லெட்டர் ஹெட்டில் ஒரு லட்சம் குறைவாய், கட்டட மதிப்பு எழுதி, மரக்கடை அதிபரைக் கூட்டிக் கொண்டு வந்து சென்னைக்கு வந்திருந்த சித்தப்பாவிடம் அறிமுகப்படுத்தினான். மரக்கடை அதிபரிடம், சித்தப்பா எதிரேயே அந்த மதிப்பீடுகளைக் காண்பித்தான்.



''இதுதான் சரியான மதிப்பீடுன்னு சொல்றாங்க. நீங்க என்ன சொல்றீங்க?'' என்று அவனே தயாரித்த மதிப்பீட்டைக் காண்பிக்க, மரக்கடைக்காரர் அந்த விலைக்கு ஒப்புக்கொண்டார். முழுக்காசு வேண்டுமென்று சொன்னார். மகளின் திருமணம் நிச்சயித்திருப்பதால் அவசரப்படுவதாகச் சொன்னார்.

சித்தப்பா சட்டென்று பதில் சொல்லவில்லை. ''பெரிய தொகைடா... முப்பத்தஞ்சு ரூபா... ஒரு பேமெண்ட்டா கேட்கறான். எப்படி தர முடியும்?'' என்று யோசித்தார்.

''இந்த வீட்டை உன் பேர்ல வாங்கிக்க. எங்கேயாவது கடன் வாங்கறா மாதிரி ஒரு பத்திரம் தயார் பண்ணு. மூணு பேர்ட்ட கடன் வாங்கி, உன் காசு அஞ்சு ரூபாய் போட்டு, இந்த வீட்டை வாங்குனதா ஏற்பாடு செய்'' என்று சொல்ல, கடன் வாங்கியதாய் அடகுக்கடைக்காரர்களிடமிருந்து பத்திரங்கள் தயார் செய்து, மொத்தக் காசையும் வாசுதேவமூர்த்தி மரக்கடைக்காரருக்குக் கொடுக்க ஏற்பாடு செய்தான். பத்திர பதிவு முடிந்த மறு வாரம், பெரிய பரீட்சை ஆரம்பித்தது.

மறுபடியும் நண்பர்கள் ஒன்று கூடி படிக்கத் துவங்கினார்கள். அந்த வருடமும் எந்த காயமுமின்றி வாசுதேவமூர்த்தி பரீட்சையில் தேறினான். நண்பர்கள் ஏழு பேரும் அந்தக் கோடை விடு முறைகளில், சென்னையிலிருந்து பம்பாய்க்கும், பம்பாயிலிருந்து டெல்லிக்கு பயணப்பட்டார்கள். டெல்லி யிலிருந்து காசிக்குப் போனார்கள். காசியிலிருந்து ஹரித்துவார், ரிஷிகேஷம் போனார்கள். மறுபடியும் டெல்லி வந்து சித்தப்பாவிற்காக காத்திருந்தார்கள். அவரோடு தனித்து விமானத்தில், வாயெல்லாம் பல்லாக சென்னைக்கு வந்து இறங்கினார்கள். சென்னையிலிருந்து குடந்தைக்குக் காரில் வந்தார்கள். குடந்தையில் தாங்கள் பார்த்த விஷயங்களை மற்றவர்களிடம், கதை கதையாக மற்றவர்களிடம் சொன்னார்கள். அந்த நட்பு வட்டம் மேலும் இறுகிற்று.

உலகத்தில் மிக அற்புதமான விஷயம் திருமணம் தான். இந்த விஷயம் மட்டும் நிறைவாகவும், தெளிவாகவும், புத்திசாலித்தனமாகவும் நடந்துவிட்டால், வாழ்க்கை

சொர்க்கமாய் மாறிவிடுகிறது. வாசுதேவனுக்கு இந்த விஷயம் மிகச் சுகமாய் அமைந்து விட்டது. திருமணம் பற்றி அவருக்கு எந்த எண்ணமும் இல்லாதபோது, உனக்கு திருமணம் என்று தலைவர் கூப்பிட்டுச் சொன்னார்.

''என்ன சித்தப்பா, திடீர்னு இப்படி பயமுறுத்திறீங்க..?''

''ஒரு காரணமா சொல்றேண்டா... சரின்னு சொல்லிடு. உனக்கு நான் கெடுதல் பண்ணுவேனா? ரொம்ப யோசனை பண்ணி உனக்கு நல்லது பண்றேன். எதுக்குத் தெரியுமா?''

''தெரியலை, சித்தப்பா''

''பதிலுக்கு நீ எனக்கு நல்லது பண்ணுவேன்னு நம்பி நல்லது பண்றேன்.''

''சித்தப்பா, உங்களுக்குக் கெடுதல் அப்படிங்கிற ஒரு விஷயத்தை நான் மனசல கூட நினைக்க மாட்டேன்.''

''எனக்குத் தெரியும்டா. நல்லாத் தெரியும். அடுத்த ஏழு வருஷத்துக்கு எனக்குக் கொஞ்சம் கஷ்டமா இருக்கும்னு ஜோசியக்காரன் சொல்றான். சூழ்நிலையும் அப்படித் தான் இருக்கு. இது வரைக்

> ''உலகத்தில் மிக அற்புதமான விஷயம் திருமணம் தான். இந்த விஷயம் மட்டும் நிறைவாகவும், தெளிவாகவும், புத்திசாலித் தனமாகவும் நடந்து விட்டால், வாழ்க்கை சொர்க்கமாய் மாறி விடுகிறது.''



கும் ஒரு மூசகல தபதபன்னு மேல வந்துட்டோம். அடுத்த படி ஏற கொஞ்சம் இளைப்பாறிக்கிற போது, ரெண்டு மூணு பேரு தாண்டிப் போயிட்டாங்க. அவங்களால தொந்தரவு. இதைத் தவிர, ஜனங்களுக்கு நம்ம மூஞ்சியைப் பார்த்து, பார்த்து அலுத்துப் போச்சு. வேற மூஞ்சியை ட்ரை பண்றான். அதையும் நாம விட்டுப் பிடிக்க வேண்டியது தான்.''

''எதுக்கு சித்தப்பா, இதெல்லாம் சொல்றீங்க..?''

''உன் கல்யாணத்துக்கு இதெல்லாம்தாண்டா காரணம். மெட்ராசுக்கு போறேன், டெல்லிக்குப் போறேன்னு போய் ஒரு தலைவரா இருக்கேன்றது ஒரு பெரிய விஷயமில்லை. நம்ம ஊருல கடைசி வரைக்கும் கெத்து விடாத இருக்கணும். நம்மூருல எதிரி யாரும் இல்லாத இருக்கணும். நம்மூர் தெருவுல நான் வண்டி ஒட்டிக்கிட்டுப் போனா நாலு பேர் எழுந்து நிற்கணும். அந்த மரியாதை கொஞ்சமும் குறையக் கூடாது. இந்த இடம் சரியாக இருந்தாத்தான் மத்த இடங்கள் நல்லா இருக்கும். அதனால, கும்பகோணத்துல வலுவா ஊனி நிற்கிறதுக்காக, பெரிய மிராசு பொண்ணை உனக்குக் கட்டி வைக்கப் போறேன். பெரிய மிராசு பொண்ணை நீ பார்த்திருக்கியா?''

''ஏதோ ஒரு கல்யாணத்துல பார்த்தமாதிரி ஞாபகம், சித்தப்பா''

''வெரிகுட். நான் பார்த்ததேயில்லைன்னு பொய் சொல்லாத, பார்த்தாமாதிரின்னு ஞாபகம்ன்னு சொல்றியே, அது வரைக்கும் சந்தோஷம். எப்படியிருக்கா?''

''ஒரு பார்வைக்கு ரொம்ப அழகா, வளப்பமா இருந்தாமாதிரி தென்பட்டுது. மத்தபடி குணங்கள் பற்றி எனக்கொண்ணும் தெரியலை, சித்தப்பா''

''ரொம்ப நல்ல குணம்ன்னு கேள்விப்பட்டிருக்கேன். எனக்குத் தெரிஞ்ச ரெண்டு, மூணு லேடீஸைப் போய்ப் பார்த்துப் பேசிட்டு வரச் சொன்னேன். பத்து நிமிஷம் பேசினவுடனே, அந்தப் பொண்ணு சொல்லிச்சாம், அவங்க பெரியப்பா புள்ளைக்கு என்னை ட்ரை பண்றாங்களா, நான் அவங்களைப் பார்த்திருக்கேன். ரொம்ப நல்லாயிருப்பாங்கன்னு கொஞ்சம் கூட பயமில்லாம பேசிச்சாம்.''

''உங்களுக்கு சரின்னு பட்டுதுன்னா, செய்துடுங்க சித்தப்பா.''

''உன்னைவிட ரெண்டு வயசுதான் கம்மி. அது ஒண்ணுதான் இடிக்குது. மத்தபடிக்கு ரொம்பப் பெரிய ஃபேமிலி. பொண்ணு ரொம்ப நல்ல குணம். அவங்க ரொம்பப் பொறுப்பானவங்க. அந்த சூழல்ல போய் நீ இருக்கிறது உனக்கு ரொம்ப உதவி செய்யும்.''

''இது அரசியல்ரீதியா, உங்களுக்கு எப்படி லாபம், சித்தப்பா?''

''வெரிகுட். இப்படி கேட்க கத்துக்கணும். சித்தப்பா என்ன சொன்னாலும், தலையாட்டிட்டு வந்துடக் கூடாது. அவங்களுடைய பண பலம், படை பலம் எனக்கு ரொம்ப முக்கியம். நான் ரெண்டு, மூணு மாசத்துல கும்பகோணம் வந்து உட்கார்ந்துக்கற மாதிரி ஒரு சிச்சுவேஷனை நினைச்சிட்டிருக்கேன். மறுபடியும் இங்கேயிருந்து அட்டாக் பண்ணனும்ன்னு எண்ணம் வைச்சிக்கிட்டிருக்கேன். இங்க ஒரு வருஷம் ஹோம் வொர்க் பண்ணனும். அப்போ அவர் உதவி வேணும். அப்படியில்லை, கும்பகோணத்துக்கு வரவேண்டிய அவசியமே இல்லாத போச்சு, மெட்ராசுல கால் ஊனி டெல்லிக்குப் போய்ட்டேன்னு வைச்சுக்கோ. என் உதவி அவருக்குத் தேவை. டெல்லியில பல காரியங்கள் என்னால் அவருக்கு ஆகும். அவருக்கு சாராயத் தொழிற்சாலை இருக்கு, தெரியுமில்லை.''

''தெரியும், சித்தப்பா. தென்னிந்தியாவிலேயே பெஸ்ட்டுன்னு சொல்றாங்களே...''

''ஆமாம். அந்த விஷயங்கள் பலதும் டெல்லியில பின்னிப் பிணைஞ்சிருக்கு. யார் சரி பண்ணிக் கொடுக்கறாங்களோ, அவங்களோடதான் இவர் கை கோர்த்துக்கிட்டு இருப்பாரு. இப்ப எனக்கு எதிரா இருக்கிறவங்க, அவர் கூட கைகோர்க்கணும்ன்னு நினைக்கிறாங்க. அவர் பிடிகொடுக்காம பேசிக்கிட்டிருக்காரு. நான் சட்டுன்னு இப்படி ஒரு செய்தி அனுப்பிச்சவுடனே, ரொம்ப சந்தோஷமாகி, ராவோட ராவா நேர பார்க்க வந்துட்டாரு. நிஜமா சொல்லியனுப்பிச்சீங்களா, இல்ல விளையாட்டான்னு கேட்டாரு. இதுல போய் விளையாடுவாங்களான்னு



கேட்டேன். எனக்கு நீங்க வேணும். அதனாலதான் இந்தக் கல்யாணம்ன்னு நானும் நேரடியாச் சொன்னேன். சரி, நாம ஒத்துமையா இருப்போம். அதுக்கு முன்னாடி குழந்தைகளுக்குப் பிடிக்குதான்னு ஒரு வார்த்தை கேட்டுக்குங்க, அப்படின்னாரு. அந்தப் பொண்ணு சரின்னு சொல்லிட்டாப் போல. நீ என்ன சொல்றியோ, அதை வைச்சு முடிவு பண்ணனும்.''

''நீங்க சொல்லிட்டீங்க, சித்தப்பா. எனக்கு சம்மதம்'' - அவன் சித்தப்பாவை நோக்கிக் கைகூப்பினான்.

தலைவர் எழுந்தார். அருகே வந்தார். வாசுதேவன் முகத்தை உற்றுப் பார்த்தார். ''என் வாழ்க்கைக்காக உன்னை பலி போடறேன்னு நினைக்கிறியா...?''

''இல்லை, சித்தப்பா. அப்படி கிடையவே கிடையாது. உங்க வாழ்க்கையோட என் வாழ்க்கையும் சேர்ந்து உயர்ந்து வருது. நீங்க இல்லேன்னாக்க, நம்ம வீடு, நான் எல்லாமே ஒண்ணும் இல்லாத சாதாரண ஆளா இருந்திருப்போம். உங்களாலதான் சித்தப்பா, இன்னிக்கு எல்லா மரியாதையும். உங்களாலதான் எனக்கு எல்லா வசதியும். உங்களுக்கு என்ன செய்யணுமோ, அது நாங்க செய்துதான் ஆகணும். அது என்னவா இருந்தாலும், கூச்சமே இல்லாது செய்வோம். குறையே இல்லாத செய்வோம். கல்யாணத்தை தண்டனையோ, சன்மானமாகவோ வைச்சுக்கறது நம்மகிட்ட இருக்கு. ஒரு ஆம்பளையும், பொம்பளையும் ஒருத்தரையொருத்தர் பேசிப் புரிஞ்சிக்கிட்டோம்னாக்க, எல்லாம் சரியாயிடும். கல்யாணம் ரொம்ப நல்லாயிருக்கும். அந்தப் பொண்ணோட பேசி, அதுக்கேத்தாப்போல, யோசனை பண்ணி, நான் நடந்துக்குவேன், சித்தப்பா. இப்போ ஞாபகம் வருது. அது ஒரு மீட்டிங்கில பேசிச்சு. பட்டிமன்றம். பெண்கள் கல்லூரி. நாங்கள்லாம் போயிருந்தோம். எல்லோரும் உளறின போது, இது மட்டும் தெளிவா ஒரு பாயிண்ட் எடுத்து, அதை விளக்கிச் சொல்லிச்சி. செம ஃக்ளாப்ஸ். அட, கெட்டிக்காரியாயிருக்கேன்னு நான்கூட நினைச்சேன். பொண்ணு கெட்டிக்காரியாயிருந்தா போதும், சித்தப்பா. நல்லவளா நாம மாத்திடலாம். இல்லை, காலம் மாத்தும்.''

"அடி சக்கை... வாசு, நீ பேசக் கத்துக்கினேப்பா பாலிடிக்சுக்கு வந்துடுறியா..?"

"வேணாம், சித்தப்பா. பாலிடிக்சல பேசறது வேற மாதிரி. அது இன்னும் முழக்கமா பேசணும். இதுதான்ங்கிற மாதிரி பேசணும். நான் எப்பவுமே, சந்தேகத்தோட பேசறேன், சித்தப்பா..."

கரெக்ட்ரா... நீ எப்பவும் என் பின்னாடி இரு. எல்லாத்துக்கும் என் பின்னாடி இரு. அதுவும் பாலிடிக்சல இருக்கிற மாதிரிதான். உன்னுடைய எல்லா சௌகரியத்தையும் நான் பார்த்துக்கறேன்."

"சித்தப்பா..."

"ம்..."

"அந்தப் பொண்ணைப் போய், ஒரு தடவை நான் பார்த்துட்டு வரட்டுமா?"

"ஏய்... டப்புன்னு போயிடாதடா..."

"இல்லை சித்தப்பா, அதுதான் உங்களைக் கேட்கறேன்..."

"இது சரியாத் தெரியலையே... அவங்க வீட்டுப் பெருசுங்க எதுனா முறைச்சிக்கிச்சுன்னா..."

"இதைக் கேட்டா செய்யணும், சித்தப்பா?"

"கேட்காதையா செய்யணும்ங்கிற?"

"நீங்க சொன்ன லேடீஸ் யாரையாவது விட்டு, அந்த பொண்ணுக்கு என்னைப் பார்க்கணும்ன்னு ஆசை இருக்குதான்னு கேளுங்க. இருந்ததுன்னா, நாங்க ரெண்டு பேரும் எங்கேயாவது மீட் பண்றோம்."

"எங்கேயாவதுன்னா எங்கே?"

"மெட்ராசுல மீட் பண்றோம், சித்தப்பா."

"வெரிகுட். கபாலி கோயிலில் உட்கார்ந்து பேசறத்துக்கு நான் ஏற்பாடு பண்றேன். தனி ரூம்ல பேசணும்ன்னு நினைக்காதடா..."

"இல்லை, சித்தப்பா. யாராவது பெரியவங்க இருந்தா நல்லாத்தான் இருக்கும். கொஞ்சம் தள்ளி உட்கார்ந்துட்டாக்கா, நாங்க மனசு விட்டுப் பேசுவோம்."



"அடி சக்கை. அது நல்லாதாண்டா இருக்கும். நீ சொல்றது அப்படியே செய்யலாம்."

சென்னைக்குப் போகின்ற வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால் ஏழு இங்கிலாந்து கல்லூரி மாணவிகளுக்கு, தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயிலை, காட்டுகின்ற வாய்ப்பு கிடைத்தது. வண்டி ஓட்டுவதற்கு வாசுதேவனைக் கூப்பிட்டார்கள். அவர்களின் கலாச்சார கேள்விகளுக்குப் பதில் சொல்ல, பெரிய மிராசுவின் மூன்றாவது பெண் கோமளவல்லி நியமிக்கப்பட்டாள். ஏசி டிராவல்லரில் அமெரிக்கப் பெண்கள் இறங்கினார்கள். பெரிய மிராசு அவுட் ஹவுசில் தங்கினார்கள். வாசுதேவன் அங்கு போய் வரவேற்றான்.

தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு, டெம்போ டிராவலரை சர்வீஸ் செய்யக் கொடுப்பதாகவும், அதுவரை தன்னுடைய ஃபாரியில் வருமாறும் கேட்டுக் கொண்டான். அமெரிக்கப் பெண்கள் முன்னால் இரண்டு பேரும், பின்னால் மூன்று பேரும், அதற்குப் பின்பக்கம் இரண்டு பேரும் ஏறிக்கொள்ள, அவர்களோடு கோமளவல்லியும் ஏறிக்கொண்டாள். இடமில்லாததால், வேறு யாரும் போக வேண்டியதில்லை என்று தீர்மானமாயிற்று. பிற்பகல் உணவுக்கும், இன்னபிற விஷயங்களுக்கும் தஞ்சையில் பெரிய ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தார்கள். அமெரிக்கப் பெண்கள் பிரகதீஸ்வரர் கோயில் பார்த்துவிட்டு அதிர்ந்து போனார்கள். அவர்களுக்குப் பதில் சொல்லவே நேரம் சரியாக இருந்தது. பெண்களுக்கு நடுவே பேசுகின்ற கோமளவல்லியைக் கவனமாய் வாசுதேவன் பார்த்தான். வாசுதேவன் வண்டி ஓட்டுகிற அழகும், மனிதர்களைச் சமாளிக்கிற விதத்தையும் கோமளவல்லி எளிதில் புரிந்துகொண்டாள். வெள்ளை வெளேரென்ற தொடையும், மெல்லிய பனியனுமாய் வாசுதேவன் பக்கத்தில் வந்து நிற்கின்ற பெண்ணை, வாசுதேவன் எவ்விதம் பார்க்கிறான் என்று கவனித்துக் கொண்டாள். நாலைந்து முறை வாசுதேவனுடைய பார்வை அந்த அமெரிக்கப் பெண்ணின் உடம்பில் போய் படிந்ததைக் கவனித்துக்கொண்டாள். பிற்பகல் உணவின்போது பேச்சுவாக்கில்ஒரு கேள்வி கொக்கி வீசினாள்வாசுதேவன் வாய்விட்டு சிரித்தான்.

''நல்லாயிருக்கே... இவங்களைப் பார்க்கிறதுக்கே பிடிக்கலைன்னு சொன்னா, அவன் குருடனாயிருக்கணும். இல்லை, திமிர் பிடிச்சவனாயிருக்கணும். அழகாயிருக்காங்க. கெட்டிக்காரங்களாயிருக்காங்க. தெரிஞ்சிக்கிற ஆர்வத்தோடயிருக்காங்க. வேணும்ன்னே கவர்ச்சியா உடுத்துறாங்க. எல்லாம் நல்லாத்தான் இருக்கு. இவங்களோட பிரகதீஸ்வரர் கோயிலைச் சுத்திப் பார்க்கலாமே தவிர, குடித்தனம் பண்ண முடியுமா? குடித்தனம் பண்றதுக்கு கோமளவல்லிதான் கரெக்ட்.'' என்று வாசுதேவன் பதில் சொன்னான்.

''அப்போ, இந்தப் பொண்ணுங்கள்லாம் குடித்தனம் பண்றதுக்கு லாயக்கில்லாதவங்களா..?''

''அவங்க குடித்தனம் வேற மாதிரி, நம்ம குடித்தனம் வேற மாதிரி. அவங்க இடத்துக்குத் தகுந்தமாதிரியான ஆம்பளைங்க அவங்களுக்குக் கிடைப்பாங்க. நாம போய் இவங்க மேல ஆசை வைச்சிடக் கூடாது. இவங்க நம்ம மேல ஆசை வைச்சிடக் கூடாது. நல்லா சுத்திப் பார்த்துட்டு விட்டுறணும். அதே மாதிரி அவங்க ஊர் போனாலும், அவங்க ஊர் விஷயம் மொத்தத்தையும் வேடிக்கை பார்த்துட்டு, அதை அந்த இடத்துலேயே வைச்சிட்டு வந்துடணும். எனக்கு அமெரிக்கா போகணும்ன்னு ஆசையிருக்கு. அமெரிக்கனாகனும்ன்னு ஆசையில்லை.''

''நீங்க நல்லா கார் ஓட்டறீங்க, வாசுதேவன்''

''நீங்க ஏ கிளாஸா இங்கிலீஷ் பேசறீங்க. கும்பகோணத்துலருந்துவிட்டு இப்படியொரு பிரிட்டிஷ் ஆக்சென்ட் எப்படி வந்தது, உங்களுக்கு?''

''தனியா ஆள் வைச்சு கத்துக்கிட்டேன்'' - அவள் அடக்கமாகப் பதில் சொன்னாள்.

''சித்தப்பா கல்யாணம்ன்னு சொன்னாரு. உங்களுக்கு சம்மதம்தானா?''

''இல்லேன்னா, உங்ககூட எதுக்கு பிரகதீஸ்வரர் கோயில் வரேன்?''

''என் கூடவா வந்தீங்க? ஆறு அமெரிக்கப் பொண்ணுங்க கூடத்தானே வந்தீங்க?''



''இல்லையில்லை. அது சாக்கு. நீங்க எப்படி வண்டி ஓட்டறீங்க? யார் யாரை எப்படி பார்க்கறீங்கங்கிறதைப் பார்க்கிறதுக்காகத்தான் வந்தேன்.''

''என்ன தெரிஞ்சுது?''

''நீங்க புருஷனாயிருந்தா நல்லாதான் இருக்கும். சௌகரியமா இருக்கும். வசதியா இருக்கும்.''

''டக்குன்னு முடிவுக்கு வந்துட்டீங்க.''

''எங்க வீட்டுல மூணு கல்யாணம் ஆயிடுச்சு. ஒரு அண்ணன். இரண்டு அக்கா. நான் மூணாவது. எனக்கப்புறம் ஒரு பொண்ணு இருக்கு. இந்த மூணு பேர் வாழ்க்கையும் நான் உத்துப் பார்த்திருக்கேன். வெளிப்பார்வைக்கு ஜோடியா நிற்கிறாங்களே தவிர, உள்ளுக்குள்ளே ஒத்துமையே இல்லை. எனக்கு ரொம்ப ஆசை. நாம ரெண்டு பேரும் உள்ளுக்குள்ளே ரொம்ப ஒத்துமையா இருக்கணும். அப்படியிருந்துட்டாக்க, அதைவிட சந்தோஷம் உலகத்துல எதுவும் கிடையாது. இப்போ, உங்களோட பிரகதீஸ்வரர் கோயில் வந்தது யாருக்கும் சொல்லலை. அப்பாக்கு மட்டும் தெரியும். அம்மாவுக்கும் தெரியும். அண்ணி, அக்கா யாருக்கும் தெரியாது.'' ''சொல்லிடட்டுமா, வேண்டாமா..?''

''நல்லா சொல்லு. நம்ம என்ன, ஆறு பேரோட பிரகதீஸ்வரர் கோயில் சுத்திப் பார்த்தோம். இதில் என்ன இருக்கு, மறைக்கிறதுக்கு?''

''சரி... இவங்களை அனுப்பிச்சிட்டு என்ன வேலை?''

''ஒண்ணுமில்லை''

''எங்க வீட்டுக்கு வர்றது.''

''உங்க வீட்டுக்கா? நல்லாயிருக்குமா?''

''வாங்களேன் அவள் அழைத்தாள்.''

இரண்டு, மூன்று சந்திப்புகள் அழகாக ஏற்பட்டன. அது காதல் திருமணமா? ஆமாம். அது பெரியோர்கள் பார்த்து நிச்சயித்த திருமணமா? ஆமாம், என்று இரண்டுக்கும் அவர்கள் பதில் சொன்னார்கள். திருமணத்திற்கு முன்பு மோட்டார்சைக்கிளில் அந்தப் பெண்ணை ஏற்றிக் கொண்டு, கும்பகோணம் முழுக்கச் சுற்றி, அவர்களு

டைய வயல்வெளிகளைக் காண்பித்து, அவன் வாங்கிய வீட்டைக் காண்பித்து, அங்கிருந்து அவர்களுடைய கிராமம் வரை கொண்டு போய்விட்டு, அங்கு உட்கார்ந்து பொங்கலும் தோசையும் சாப்பிட்டு, கையலம்பி, மேல் மாடியில் பூஞ்செடிகளைப் பார்த்துவிட்டு திரும்பி வந்தபோது மனம் நிறைந்திருந்தது.

''எனக்கு அந்தப் பொண்ணை ரொம்பப் பிடிச்சிருக்கு சித்தப்பா. அந்தப் பொண்ணும் அப்படித்தான் நினைக்கும்னு நினைக்கிறேன்.''

''அப்படித்தாண்டா நினைக்குது. உன் போனுக்கு ரெண்டு நிமிஷம் முன்னாடிதான் அந்த பொண்ணு போன் பண்ணுச்சு. ரொம்ப நன்றி, நல்ல மனுஷனை எனக்குப் புருஷனாக் கொடுத்திருக்கீங்க. இவ்வளவுதான் சொல்லணும்னு நினைச்சேன். சொல்லிட்டேன்னு போனை வைச்சிடுச்சி.''

''நானும் அதையே சொல்றேன், சித்தப்பா'' - அவன் போனைக் கீழே வைத்தான்.

அவர்கள் திருமணம் குடந்தை நகர் கிடுகிடுக்க நடந்தது. மத்திய மந்திரிகள் இருவர் வந்திருந்தார்கள். மூன்று மாநில முதல்வர்கள் வந்திருந்தார்கள். ஒரு கவர்னரும், ஆறேழு சட்டசபை சபாநாயகர்களும், டெல்லியிலுள்ள உயரதிகாரிகளும், ஒரு இராணுவ தளபதியும் குடந்தை நோக்கி திருமணத்திற்கென்று விசேஷமாக வந்திருந்தார்கள். மிகக் கவனமாகத் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். திருமணம் முழுதும் கண்டு களித்தார்கள். மூன்று, நான்கு இடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. ஒரு பெரிய வயல்வெளி முழுதும் சமன் செய்யப்பட்டு, கூரைப் பந்தல் போடப்பட்டு இடைவிடாது பந்தி நடந்துகொண்டிருந்தது. வெளியூர் ஆட்களை குடந்தையைச் சுற்றிக் காண்பிக்க தனிப் படை அமைக்கப்பட்டிருந்தது. மிக மெல்லிய வைதீக முறைப்படி திருமணம் நடந்தாலும், வேத கோஷங்களுக்காக தனியே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முதல் நாள் ஊர் சுற்றிப் பார்ப்பது, இரண்டாம் நாள் காலை திருமணம், மூன்றாம் நாள் கலை நிகழ்ச்சிகள்.



நான்காம் அருகே இருக்கிற ஊர்களுக்குப் பயணம் என்று வெளியூர் ஆட்களுக்குப் பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. நான்காம் நாள் வந்தவர் அனைவரும் விடைபெற்றுப் போக, குடந்தை மக்களுக்கு தனியாக விருந்து வைக்கப்பட்டது.

''கும்பகோணத்திலிருந்த அத்தனை பேருக்கும் வேலை இருந்தது. யார் கல்யாணத்தைப் பார்த்தா? அதனால எங்க முன்னாடி மாலை மாத்திக்குங்க, துரை'' என்று கும்பகோணத்து நண்பர்கள் நான்காம் நாள் மாலை மாற்றி எதிரே உட்கார வைத்து, ஆனந்தமாய்ப் பார்த்தார்கள். அன்று பிரமாதமான விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கோமளவல்லி வந்த இரண்டாவது மாதம் ஆட்சி கவிழ்ந்தது. மந்திரி பதவி போயிற்று. அவர் சென்னைக்குத் திரும்பினார். சென்னையிலும் உட்கட்சிப் பூசல் அதிகரித்தது. தலைவர் குடந்தைக்கு வந்து உட்கார்ந்துகொண்டார்.

''நான் சொல்லலைடா... இப்படி நடக்கும்னு. கரெக்டா நடந்துது பார். இன்னும் நாலு வருஷம் கஷ்டம்டா... மிச்சம் மூணு வருஷம் ஒரு மாதிரி மெல்ல தெளிய ஆரம்பிச்சிடும். அடுத்த ஏழு வருஷம் நான்தாண்டா ராஜா. பார்த்துடலாம்.''

''நான் என்ன பண்ணட்டும், சித்தப்பா?''

''நல்லா ஜாலியா குடித்தனம் பண்ணுடா.''

''ஏதாவது வேலைக்குப் போகட்டுமா, சித்தப்பா''

''எந்த வேலைக்குப் போவ?''

''மாமனார் சாராயக் கம்பெனியில கேட்டா இடம் கொடுப்பாரு''

''அங்க போக வேண்டாம். அங்க போயிட்டா பங்கு வேணும்ங்கிறா மாதிரி, உனக்கும் நினைக்கத் தோணும். மத்தவங்களும் பயப்படுவாங்க. சாராயப் பங்கு வாங்காத. தேவையாயிருந்தா நிலம் வாங்கிக்க. இன்றைய தேதிக்கு சாராயம் ஒரு ஊசலாட்டமான வியாபாரம். நிலம் தூக்கப் போகுது. ஒண்ணு நாலு பங்கு விலையா விக்கப் போகுது. அதனால கும்பகோணத்துலயும், மெட்ராசலயும் நிலம் வாங்கிக்கோ''

வாசுதேவன் மௌனமாக இருந்தான்.

''என்னடா, டக்குன்னு ஏதோ சொல்றானேன்னு பார்க்கிறியா? காசு நான் தரேன். ரியல் எஸ்டேட் புரோக்கர் அனுப்பறேன். வக்கீலையும் கலந்து பேசிக்க. வக்கீல்ட்ட பேசறதை புரோக்கர்கிட்ட சொல்லாத. புரோக்கர்கிட்ட பேசறதே வக்கீல்கிட்டே சொல்லாத. அவங்க ரெண்டு பேரையும் தனித்தனியா சமாளிச்சு, சுத்தமான நிலமா, பிரச்சினையில்லாத நிலமா வாங்கிப் போடு. உனக் கேது income‌ன்னு கேட்டா, நீ ரியல் எஸ்டேட் பிசினஸ்ன்னு போர்டு போடு. அதுவே Incomeஆ உனக்குத் தெரியும். அதுவே சொத்து வாங்கி வைக்கிற இடமாகவும் காட்ட முடியும். இத்தனை நிலம் இருக்கு. எதுக்குன்னா வாங்கி விற்கிறதுக்கு. எதுனாவது அன் கோ அப்படின்னு போர்டு போட்டுடு. நீயும், நாலு பேரும் பார்ட்னர்ஸ். யார், யாரு? நீ, நான், உன் பொண்டாட்டி, உங்க மாமனாருன்னு அப்படின்னு போட்டுக்கோ. சரியா வரும்.''

''இந்த தடவை யாரோட கூட்டணி வைக்கப் போறீங்க, சித்தப்பா?''

''யாரை இது வரை எதிரியா நினைச்சிருந்தோமோ, அவங்களோடதான் கூட்டு வைச்சிக்கப் போறோம். யாரை இதுவரைக்கும் கூட்டாளியா நினைச்சிருக்குமோ, அவங் களை எதிரியா நினைச்சி அவங்களோட போட்டி போடப் போறோம்.''

''ஜனங்களுக்குக் குழப்பம் தராதா, சித்தப்பா?''

''இல்லை. இந்தக் குழப்பத்தைத்தான் திரும்பத் திரும்பப் பேசி, தெளிவுபடுத்தப் போறோம்.''

''ஜனங்க ஓட்டுப் போடுவாங்களா, சித்தப்பா?''

''வேற யாரும் இல்லையேடா... நமக்குத்தானே ஓட்டுப் போட்டாகணும். நான், இல்லை அவங்க. இல்லை இவங்க. மூணு பேருதானே இருக்கோம். இந்த மூணு பேருக்குத்தான் மாத்தி, மாத்தி ஓட்டு போட்டாகணுமே தவிர, புதுசா யாராவது வந்திருக்காங்களா... வர விடு வோமா..? வர முடியுமா? ஜனங்களுக்கு ஒண்ணும் பெரிய வாய்ப்பு கொடுத்துடலை.''



''இந்த தடவை சென்ட்ரல்லநீங்க் எதிர்க்கிற கட்சி ஜெயிச்சி, ஸ்டேட்ல நீங்க் ஆதரிக்கிற கட்சி வந்துருச் சுன்னா...''

''கரெக்டா பேசறடா... நானும் அப்படித்தான் நினைக்கிறேன். எங்க கட்சி சென்ட்ரலப் பிடிக்காது. ஸ்டேட்டைப் பிடிச்சுடும். ஸ்டேட்டைப் பிடிச்சா, நாங்க கூட்டணி வைச்சிருக்கிற கட்சிக்கு லாபம். எங்களுக்கு நஷ்டம். ஆனாலும், அடுத்த மூணு, நாலு வருஷத்துக்கு இவனுங்க ஆட்சி பண்ணி, குளறுபடி பண்ணா நான் இன்னும் ஒரு பத்து வருஷம் கேரண்டியா நிற்பேன். அவங்க ஆட்சி பிடிக்கட்டும். எங்கெல்லாம், எப்படி யெல்லாம் குளறுபடி பண்ணுவாங்கன்னு எனக்குத் தெரியும். அவங்களை மேல ஏத்தி உட்கார வைச்சிட்டு, அப்புறமா அடி, அடின்னு அடிக்கலாம்.''

''ஸ்டேட்டுல இருக்கிற கூட்டணி உங்களை மதிக்குமா, சித்தப்பா?''

''மதிச்சா மதிக்குது. மதிக்கார்ட்டி போகுது. நான் ஒரு ஓரமா இருப்பேனே தவிர, நடுநாயகமா இருக்கமாட்டேன். நான் ஸ்டேட்டுல ஆட்சி அமைக்க விரும்பலைன்னு அவங்களுக்குத் தெரியும். மந்திரி பதவிக்குக் கூட ஆசைப்படலேன்னு அவங்களுக்குத் தெரியும். அதனா லயே ரொம்ப மரியாதையா நடத்தறான்''

''ஆனா, உங்க கட்சி ஆளுங்க ஆசைப்படுவாங்க போலிருக்கே.''

''அவங்களுக்கு வாய்க்கரிசி போடறதுக்கு அந்த கூட்டணி ஆளுங்களுக்குத் தெரியும். அவங்களுக்கு வாய்க்கரிசி போட்டுடுவாங்க. என்னுடைய நாலு, அஞ்சு வருஷத்தை சும்மா இருக்கேன்ங்கிறதை, சுத்தி சுத்தி வந்து காண்பிக்கப்போறேனே தவிர, வேற ஒண்ணும் பெரிசா பண்ணப் போறதில்லை. ஒரு ஐடியா இருக்கு.''

''என்ன சித்தப்பா?''

''கும்பகோணத்துலயிருந்து, புதுக்கோட்டை வரைக் கும் ஒரு பெரிய ஏரியாவை பத்து, பதினைஞ்சு தடவை சுத்தி வந்துடணும். கன்னியாகுமரி பக்கமெல்லாம் போகக் கூடாது. சேலம், கோயம்புத்தூர் பக்கமெல்லாம் போகக்

கூடாது. மெட்ராசும் முக்கியம்ன்னு நினைக்கக் கூடாது. இந்த ஒரு பெல்ட் சோழ தேசத்து எல்லை. அதை சுத்தி வந்து கெட்டியா பிடிச்சிடணும். இதை ஒழுங்காப் பிடிச்சா போதும். மூலைக்கு மூலைக்குப் போறதுக்கு. கிராமம், கிராமமா ஒரு பதினைஞ்சு தடவை இந்த இடங்களுக்குப் போனா போதும்.''

''சித்தப்பா, நீங்க தூங்கறதே இல்லையா?''

''என்னடா, திடீர்ன்னு?''

''இவ்வளவு யோசனை பண்ற ஆள் எப்படித் தூங்க முடியும்?''

''இது ஒரு மாதிரி கணக்குடா... இதைப் போடக் கத்துக்கிட்டாம்னாக்க மடமடன்னு போட்டுடலாம். அனுபவமில்லாதவனுக்கு கடினமாத் தெரியும். நான் கணக்கை எப்பவுமே ஆரம்பத்துலேர்ந்து துவங்கறது கிடையாது. பாதியிலேர்ந்தே கணக்கைப் புரிஞ்சி விடையைச் சொல்லிடுவேன். அது சரி, உன் குடித்தனம் எப்படியிருக்கு?''

''ரொம்ப நல்லாயிருக்கு, சித்தப்பா. கோமளவல்லி நான் நினைச்சதைவிட ரொம்ப நல்ல பொண்ணு. மிராசுதார் பொண்ணுன்னு அவளுக்கு எண்ணமேயில்லை. எல்லோரோடயும் சாதாரணமா சேர்ந்து கலகலன்னு பழகறா. ரொம்ப கீழிறங்காத கோமளா அப்படின்னு நான் கூட சொன்னேன். அடடே... உங்க சித்தப்பாக்கிட்ட இத்தனை நாள் பழகி, இது கூடப் புரிஞ்சிக்கலையா..? கீழே இறங்கறா மாதிரி இறங்கணும். ரொம்ப இறங்க மாட்டேன். கவலைப்படாதீங்கங்கிறா. வீட்டுல வேலை செய்யறவங்க எல்லோருக்கும் மத்தியான சாப்பாடு அங்கேதான் போடுவேன்ங்கிறா. சாப்பாடு போடறதைக் கவனிச்சிப் போடறா. அதைத் தவிர, நம்ம வீடு போல் நிறைய நேரம் சாமி கும்பிடறா. என்னை பெருசா எதுக்கும் எதிர் பார்க்கிறதில்லை. இங்க கூட்டிக்கிட்டுப் போ, அங்கக் கூட்டிக்கிட்டுப் போன்னு சொல்றதில்லை. புடவை, துணிமணியும் தானா வாங்கிக்கிறா. கொண்டாந்து ஒரு தடவை காண்பிச்சுட்டு புடிச்சிருக்கான்னு ஒரு வார்த்தை கேட்டுட்டு போயிட்றா.''



வாசுதேவமூர்த்தி மனைவி பற்றி புகழ்ந்து பேச, சித்தப்பா இது போதாது என்பது போல் தலையாட்டினார்.

''எதுனா விசேஷம் உண்டா? என்ன பண்றீங்க, ரெண்டு பேரும்'' என்று பூடகமாகக் கேட்டார்.

கிட்டத்தட்ட உறவினர்கள் எல்லோராலும் மீண்டும், மீண்டும் கேட்கப்பட்ட ஒரு கேள்வியை சித்தப்பாவாலும் கேட்கப்படும்போது, லேசாய் ஒரு வருத்தம் வந்தது.

''சித்தப்பா, நாங்களாதான் கொஞ்சம் தள்ளிப் போட்டிருக்கோம்.''

''எதுக்குடா? ஏன் தள்ளிப் போடணும்?'' - சித்தப்பா தானாகக் கேட்கவில்லை. யாரோ அவரை இயக்கி, நீங்கள் கேட்டால்தான் பதில் சொல்வான் என்பது போல உசுப்பி அனுப்பியிருக்கிறார்கள் என்று தோன்றியது. மேற்கொண்டு சித்தப்பா என்ன கேட்பார், என்ன பதில் சொல்வது என்று கால் மாற்றி வாசுதேவமூர்த்தி தவித்துக் கொண்டிருந்த போது, அவருடைய மனைவி கோமளவல்லி சட்டென்று உள்ளே புகுந்தாள்.

''எங்க வீட்டுல எங்க அப்பா ஏதோ ஊத்திவிட்டிருப்பார்ன்னு நினைக்கிறேன். அதான் இங்க உட்கார்ந்துகிட்டு இல்லாத, பொல்லாத கேள்வியெல்லாம் கேட்டுகிட்டிருக்காரு.''

சித்தப்பா இருந்த கூடத்தை எட்டிப் பார்த்து, சுவரோரம் நின்றபடி கோமளவல்லி பதில் சொன்னாள்.

''ஆமாம்மா, உங்க அப்பன் சொல்லித்தான் கேட்கறேன். உங்க அப்பனுக்கு யார் சொல்லிக் கொடுத்தாங்க, என்ன சொல்லிக் கொடுத்தாங்கன்னு எனக்குத் தெரியாது. உங்க வீட்டுப் பக்கம்தான் சந்தேகப்படறாங்க. உங்க பிள்ளையை நாங்க கேள்வி கேட்டா தப்பாப் போயிடும். நீங்களே கேள்வி கேளுங்க. வாசுதேவமூர்த்தியை கும்ப கோணத்துல கேள்வி கேட்கறதுக்கு உங்களைவிட்டா ஆளே இல்லை அப்படிங்கிறாங்க. அவன் கையில காசைக் கொடுத்து பெரிய ஆளா வளர்த்து விட்டுட்டீங்க. அவரைச் சுத்தி எல்லாரும் கைகட்டித்தானே நிற்கிறாங்களே தவிர, என்னப்பா, என்ன நடக்குது அப்படின்னு நாக்கு மேல பல்லைப் போட்டு கேட்கற ஆள் யாருமே இல்லை. சுத்தி

நூறு பேர் கைகட்டி நிற்கும்போது நாம போய் நின்னு அதட்டிப்பேசுனா நல்லாவா இருக்கும் நாம ஏதோ கேள்வி கேட்டோம். மாப்பிள்ளை கோபமா பதில் சொன்னாரு. அப்படிங்கிறதைக் கூட பொறுத்துக்கலாம். நாம கேள்வி கேட்டு, வாசல்ல நிற்கிறவன் 'என்னய்யா, ஏன் தேவையில்லாது கேட்கற' அப்படின்னு அதட்டுன்னா, அதைவிட அசிங்கம் உண்டா? அந்த மாதிரி அதட்டிடுவாங்களோன்னு அவரைச் சுத்தி நிக்கிற ஆளுங்களைப் பார்க்கிறபோது பயமா இருந்துச்சு. அதனால, தயவு செய்து என்ன, ஏதுன்னு எங்களுக்கு சொல்லுங்க. எதுனா தப்பா இருந்தா, நிவர்த்தி பண்ற வழியைப் பார்க்கலாம் அப்படின்னு உங்க அப்பாதான் நேத்திக்கு அழுத கண்ணும், சிந்தின மூக்குமாய்ப் பேசினார்.''

''நான் சொல்லலை, நான் சொல்லலை...'' - கோமளவல்லி வாசுதேவமூர்த்தியைப் பார்த்து பரபரத்தாள். ''பத்து நாளா நம்மளை சுத்தி என்னமோ பேச்சு நடந்துக்கிட்டிருக்கு. கொஞ்சம் என்னான்னு காது கொடுத்து கேளுங்கண்ணு நான் உங்ககிட்ட சொல்லலை. வர்றவங்க, போறவங்க எல்லோருமே பூடகமாக பேசுனாங்க. நம்ம வீட்டுலேர்ந்து வர ஜனம் மட்டும் ஏன் இப்படி பேசுது? யார் தப்பு. அப்படின்னு திரும்ப, திரும்ப யோசனை பண்ணிக்கிட்டிருந்தேன். இவங்க இதைப் பத்தித்தான் பேசுறாங்கன்னு புரியறதுக்கு எனக்கு பத்து நாளாச்சு. இன்னிக்கு காத்தாலதான் யாரோ ஏவிவிட்டு நம்ம சுத்தி எல்லாரும் கேள்வி கேட்கறாங்கன்னு இவர்கிட்ட பேசிகிட்டிருந்தேன். அதே மாதிரி உங்க வரைக்கும் கொண்டாந்துட்டாங்க. உங்க முன்னாடி ஆயிரம், ஆயிரம் பேர் கைகட்டி, கைகூப்பி மரியாதையா பேசறபோது, ஒரு சாதாரண பொண்ணு நான் நின்னு கையாட்டிப் பேசக் கூடாது. இருந்தாலும் இவ்வளவு தூரம் பேச்சு வந்துட்ட பிறகு, சந்தேகம் வந்துட்ட பிறகு, கேள்வி வந்துட்ட பிறகு நான் பேசாத இருக்க முடியாது. எங்க வீட்டுக்காரர் இதைப் பத்தி பேச முடியாது. எங்க அப்பாவுக்கு என்ன சந்தேகம்? எங்க வீட்டுக்காரர் சரியா இருக்காரா? நான் சந்தோஷமா இருக்கேனா? இவ்வளவுதானே. இப்போ சொல்றேன். சாமி சத்தியமா சொல்றேன். உங்க கால் மேல ஆணையா



சொல்றேன். எங்க வீட்டுக்காரர், உங்க புள்ளை ரொம்ப நல்லா இருக்காரு. ரொம்ப சந்தோஷமா வைச்சிக்கிட்டிருக்காரு. நாங்கதான் தள்ளிப் போட்டிருக்கோம். இதைப் போய் தயவு செய்து எங்க அப்பாக்கிட்ட சொல்லுங்க. இனிமே, இந்த மாதிரி நொய்ய, நொய்யான்னு பேச்சு பேச வேணாம்ன்னு சொல்லுங்க. எங்க வீட்டுக்காரரே வாயைத் திறந்து நான் நல்லாதான் இருக்கேன், என் பொண்டாட்டியை சந்தோஷப்படுத்தறேன்னு சொன்னா, யாரும் நம்புவாங்களா? அதனால பொண்டாட்டியான நான், உங்க மேல சததியம் வைச்சு சொல்றேன், வேற வழியில்லாம சொல்றேன், வெட்கத்தைவிட்டு சொல்றேன், நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன். எனக்கு இப்படி ஒரு புருஷன் கிடைச்சதுக்கு நான் கொடுத்து வைச்சிருக்கணும். எங்களுக்கு கல்யாணம் ஆன மறுவாரம் கும்பகோணத்து அய்யர் புள்ளை ஒருத்தரு தன் வீட்டுக்குக் கூப்பிட்டு எங்களுக்கு விருந்து வைச்சாரு. விருந்துக்கு முன்னாடி சூசகமா பல விஷயங்கள் சொல்லிக் கொடுத்தாரு. இந்தியாவுக்குக் கன்னியா ராசி. கன்னியா ராசிக்கு இது அஷ்டமத்துல சனி இருக்கிற நேரம். அதனால இப்ப புள்ளை பெத்துக்காத. ஒரு ரெண்டரை வருஷம் தள்ளி புள்ளை பெத்துங்கனீங்கன்னா, அந்த குழந்தைக்கு நல்ல எதிர்காலம் இருக்கும் அப்படின்னாரு. அவர் சொல்லி பல விஷயங்கள் சரியா வந்திருக்கு. அதனால அவர் பேச்சைக் கேட்டு நாங்க இயற்கை முறைப்படி தள்ளிப் போட்டிருக்கோம். அதுமட்டுமில்லை, இப்பவே புள்ளை பெத்து, இப்பவே கனத்துப் போய், இப்பவே மூலைக் கொருத்தராய் இருக்கணுமா? ஒரு ரெண்டு வருஷம், ரெண்டரை வருஷம் சேர்ந்தாப்போலயே இருப்போம்ன்னு ஒரு திட்டம் போட்டு நாங்க செய்திட்டிருக்கோம். எதுக்காக எங்க அப்பா இப்படியெல்லாம் ஆடறாருன்னு தெரியலை. எங்க வாழ்க்கை நாங்க பார்த்துக்க மாட்டோமா? இவங்க வந்துதான் எல்லாத்தையுமே சரி பண்ணப் போறாங்களா? அவர் கம்பெனியை, 'அவர் குடும்பத்தை; அவர் புள்ளையை, அவர் மருமகளை அவர் சரி பண்ணிக்கட்டும். இங்க வந்து மூக்கு நுழைக்க வேணாம்ன்னு தயவு செய்து சொல்லுங்கோ'' - அவள் உரக்கக் கத்தினாள். மூச்சிரைக்க நின்றாள் கோபத்திலும் அவளுக்கு அழுகை வந்தது.

சித்தப்பாவின் எதிரே யாரும் அந்த வீட்டில் இப்படி பேசியதேயில்லை. கோமளவல்லி அப்படிப் பேசியதும் வீடு திகைத்துப் போய் நின்றது. சித்தப்பா என்ன சொல்லப் போகிறாரோ என்று அச்சமுற்றது. வேறு யாரோ பெண் மணி, ''என்னாடி நினைச்சிட்டிருக்கே?'' என்று குறுக்கப் பேச முற்பட்ட போது, சித்தப்பா எழுந்து 'சூ' என்று கோபத்தோடு அதட்டினார். எழுந்தார். வாசுதேவனுக்கு அருகே வந்தார். அவன் தலையைத் தடவிக் கொடுத்தார். அவனுக்கு நாலடி தள்ளி நிற்கும் கோமளவல்லியை உற்றுப் பார்த்தார்.

''எனக்குப் புரிஞ்சு போச்சு. இந்த விஷயத்தை நீ இப்படி பேசினதுதான் சரி. நீ பேசினதுதான் சரி. வாசு தேவமூர்த்தி எத்தினி பேசியிருந்தாலும் அது எடுபட்டிருக் காது நடுக்கூடத்துல நின்று நாலு பேர் கேட்க, சத்தியம் பண்ணி எம் புருஷன் சரியா இருக்கான், நான் சந்தோஷமா இருக்கேன்னே பாரு. இதுக்கு ஆயிரம் லட்சம் அர்த்தம். ஒரு எல்லை தாண்டி உன்னைப் பேச வைச்சிட்டேன். நான் அந்த மாதிரி இதுவரைக்கும் எந்தப் பொண்ணையும் செய்த தில்லை. ஒரு வேளை உன் மனசைப் புண்படுத்தியிருந்தா, தயவு செய்து என்னை மன்னிச்சிடு.'' - சித்தப்பா கைகூப்பினார்.

வாசுதேவமூர்த்தி அவர் கையை விலக்கிவிட்டு, அவரை ஆரத் தழுவிக்கொண்டான். கோமளவல்லி பளீ ரென்று அவர் காலில் விழுந்து, அவர் கால்களைக் கெட்டி யாகப் பிடித்துக் கொண்டு அழுதாள். சித்தப்பாவுக்கும் அழுகை வந்துவிட்டது. அவர் கண்களில் இருந்து அருவி யாய்க் கண்ணீர் பொழிந்தது. சித்தப்பா அழுது வீடு பார்த்ததேயில்லை. அவர் மெல்ல கோமளவல்லியைத் தட்டி எழுப்பினார். அழகாய் ஒரு குழந்தையைப் போல் அணைத்துக் கொண்டார். நெற்றியில் முத்தமிட்டார்.

''கோமளவல்லி கெட்டிக்காரின்னு வாய்க்கு வாய் வாசுதேவமூர்த்தி சொல்லுவான். ஆனால், இவ்வளவு கெட்டிக்காரின்னு நான் நினைக்கவேயில்லை. ரொம்ப சரியான நேரத்துல, ரொம்ப சரியான வார்த்தைகளை, ரொம்ப சரியான விதத்துல பேசின, கொஞ்சம் இழுபறியா நீ பேசியிருந்தாக் கூட, எல்லாருக்கும் சந்தேகம் வந்திருக்



கும். அந்த சந்தேகம் விதம், விதமான பிரச்சினையை நம்ம வீட்டுக்கு கொண்டாந்திருக்கும். பளிச்சின்னு ஒரே வீச்சுல சாய்ச்சிட்டே. உன் இஷ்டப்படி, நிதானமா உங்களுக்கு எப்ப தோணுதோ, அப்ப புள்ளை பெத்துக்குங்க. யாரும் நாக்கு மேல பல்லைப் போட்டு உங்களைக் கேடக முடியாது. அதே சமயம் இன்னொன்னு சொல்றேன், புரிஞ்சிக்கோ. ஒரு பெத்தவனோட ஆதங்கம் இப்படித்தான் இருக்கும். உங்கப்பா பெரிய பிசினஸ் மேக்னட். ஆயிரம் பேருக்கு கண்ணுல விரல் கொடுத்து ஆட்டற மகா கெட்டிக்காரன். ஆனால் பொண்ணு குழந்தை பெக்கணுமே, அப்படிங்கிற பேதைமையான அப்பாவாகவும் அவன் இருக்கான். அதைப் பெரிசா குறை சொல்லாதே. இதுக்குப் போய் வீட்டுப் படியேறி சண்டை போடாதே. இதை இத்தோட விட்டுடு. நான் கண்டிக்கிறேன். தேவையில்லாத அவங்க விஷயத்தில தலையிடாதேன்னு நான் சொல்லிட்டுப் போறேன். இந்தப் பேச்செல்லாம் ஏன் வருது தெரியுமா? நான் பாட்டுக்கு டெல்லி, மெட்ராஸ், பாம்பே, கல்கத்தான்னு சுத்திக்கிட்டிருந்தாக்கா, என்னைத் தேடி வந்து கேட்க மாட்டாங்க. சும்மா மெட்ராசுல மோட்டு வளையைப் பார்த்துக்கிட்டு உட்கார்ந்திட்டிருக்கேன்ல, உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்ன்னு வந்து இதைக் கொளுத்திப் போடறாங்க. நான் சும்மா இருக்கிறதுதான் இதுக்கெல்லாம் காரணம். எதுனா வேகமா பண்ணியாகனும். வாசுதேவமூர்த்தி, நம்மகிட்ட எவ்வளவு சொத்து இருக்கு, என்ன சொத்து இருக்குன்னு ஒரு லிஸ்ட் போடணும். நான் சம்பாதிச்சது போக, இப்ப செலவு பண்ணற நேரம் வந்திருச்சுன்னு நினைக்கிறேன். தஞ்சாவூர் மாவட்டம் முழுக்க கிராமம், கிராமமா கூட்டமும், ஊர்வலும் நடத்தணும்ன்னா கொஞ்சம் காசு செலவு பண்ணித்தான் ஆகணும்.''

வீடும், தோப்பும், துரவும், வெற்று நிலமும், வயல் வெளியுமாய் பதினைந்துவித சொத்துக்கள் இருந்தன. மூன்று மட்டும் வைத்துக்கொண்டு, மற்ற பனிரெண்டையும் விற்று காசாக்கி வைத்துக் கொள்ளுமாறு சித்தப்பா அறிவுறுத்தினார்.

''உடனே விக்க வேணாம். ஒரு வருஷம் டைம் எடுத்துக்க. விளம்பரம் கொடு. இழுத்துப் பிடி. விற்க

இஷ்டமில்லேங்கிறா மாதிரி நடந்துக்க. நல்ல விலை வந்தா விற்று காசு பார். எங்கிட்ட என்ன சொத்து இருக்குன்னு நோண்டறதுக்கு சி.பி.ஐ.யை உசுப்பேத்தியிருக்காங்க. அங்கேயிருந்து தகவல் வந்திருக்கு. ஒரு வேளை டெல்லி அதிகாரி யாராவது கும்பகோணம் வரலாம். உன்னைக் கேட்கலாம். கூட்டிக்கிட்டுப் போய் விசாரிக்கலாம். பயப்படாதே. இது அத்தனையும் உன் சொத்து. உன் ரியல் எஸ்டேட் கம்பெனி சொத்து. வாங்கறதும், விற்கிறதும்தான் உன் தொழில். அதுதான் ஜீவனம். அப்படின்னு சொல்லு. சித்தப்பாக்கிட்டேயிருந்து பத்து பைசா காசு கூட வாங்குறதுயில்லேன்னு சத்தியம் பண்ணு. இன்னிக்கு சி.பி.ஐ.யிலே நல்ல நிலையிலிருக்கிற பல அதிகாரிகள் நான் சொல்லி உயர்ந்த நிலைக்கு வந்தவங்க. எனக்கு எதிரா நடக்க மாட்டாங்கன்னு நினைக்கிறேன். மேம்போக்கா விசாரிச்சுட்டு போறதுக்காக வந்தாலும் வரலாம். சி.பி.ஐ. கும்பகோணம் வருவாங்காங்கிற தகவல் எனக்கு முன்னாடி வந்துடும். வந்துட்டா உனக்கு சொல்றேன். தைரியமா பதறாத அவங்களோட பேசு. ஆமாம், கோமளவல்லி, அந்த ஜோசியர் இந்தியாவைப் பத்தி வேற எதுனா சொன்னாரா? என் ஜாதகத்தைக் கொண்டு போய் காமிச்சியா?'' - சித்தப்பா பேச்சின் திசையை மாற்றினார்.

''அவன் பேர் சீனிவாசன்ப்பா. நம்ம வீட்டுல வந்து என் கூட பி.ஏ.வும், எம்.ஏ.வும் படிச்ச பையன். நான்தான் போர்டு மாட்டுடா. கும்பகோணத்துலேயே போர்டு மாட்டி ஜோசியம் சொல்லு. எதுக்கு அலையறேன்னு சொன்னேன். ஆத்தங்கரைப் பக்கம் மரக்காரர் வீடு வாங்கிப் போடலை. .. அந்த முன்பக்கத்து ரூமையும் ஒரு வராண்டாவையும் அவனுக்கு ஒழிச்சு கொடுத்திருக்கேன். வீட்டுக்குக் காவலாகவும் ஆச்சு, அவனுக்கும் ஒரு நல்ல ஜாயிண்டு. வெளியூரிலிருந்து ஆளுங்க வந்து அங்க தங்கி, அவங்கிட்ட ஜோசியம் பார்த்துட்டுப் போறாங்க. கொஞ்சம், கொஞ்சமா பாப்புலர் ஆயிட்டு வரான். எப்பவாவது உட்கார்ந்து பேசுவோம். நிறைய விஷயம் சொல்வான்.''

''வேற என்ன முக்கியமா சொன்னான்?''

''எந்த சொத்தை வேணா வித்துடு. இந்த மரக்கடை வீட்டை விற்காதே. இது எப்பவுமே உன் வசம் இருக்கட்



டும். இது பெரிய இடமா மாறப் போகுது, அப்படின்னு ஜோசியம் சொல்றான்.''

''பெரிய இடம்ன்னா..?''

''அதை இப்ப சொல்லமாட்டானாம். அந்த இடத்துல கோயில் இருக்கிற மாதிரி ஒரு அதிர்வு இருக்காம்.''

''அதை வித்துட்டா அவன் கடை தூக்கும்படியா ஆயிடும். வேற எங்கனா சந்துக்குப் போக வேண்டியிருக்கும். அதனால விற்காதேன்னு சொல்றான் போலிருக்கு.'' - சித்தப்பா கேலியாகச் சொல்லி, வாய்விட்டுச் சிரித்தார்.

''அப்படியில்லை, சித்தப்பா. அந்த மாதிரி ஆளில்லை அவன். காசு வசதி லட்சியம் பண்ணமாட்டான். சட்டுன்னு மரத்தடியில கோரைப் பாயைப் போட்டு உட்கார்ந்து ஜோசியம் சொல்ல ஆரம்பிச்சுடுவான். யார்கிட்டேயும் இத்தனை காசு கொடுன்னு டிமாண்ட் பண்றது கிடையாது. பரிகாரம் பண்றேன்னு பேசறது கிடையாது. பொட்டுல அடிச்சா மாதிரி. இதெது நடக்கும்ன்னு சொல்லி அனுப்பிச்சிடுவான். வெளியே வர பல பேர், மூஞ்சி இருண்டுதான் வராங்களே தவிர, அவன் ஜோடிச்சோ, குளிப்பாட்டியோ அனுப்பறதில்லை. என் கல்யாணத்துக்கு வந்தாரே, ஒரு சீஃப் மினிஸ்டர், அவங்க வீட்டுலேர்ந்து நாலு லேடீஸ் வந்து அவன்கிட்ட ஜோசியம் கேட்டுட்டுப் போனாங்க. அவருக்குக் கண்டம் இருக்கு. உடம்பைக் கவனிச்சுக்க சொல்லுங்கோ. அதுக்கப்புறம் ஜோசியம் பார்க்கலாம். அப்படின்னு மூணாவது நிமிஷம் அனுப்பிச்சிட்டான். அவன் சொன்னாப்புலேயே மறுவாரத்துலேயிருந்து அவருக்கு உடம்பு சரியில்லை. மூளையில டி.பி. அட்டாக் ஆகி, படுத்த படுக்கையா இருக்காரு. அதே நாலு லேடீசும் ஓடி வந்து என்ன பண்றது, என்ன பண்றது, எதுனா பரிகாரம் பண்ணலாமான்னு கேட்டாங்க. ஒண்ணும் பண்ண முடியாது. அனுபவிச்சுதான் தீரணும். இந்த ஒரு வருஷம் மௌனமா இருக்கச் சொல்லுங்கோ. அடுத்த வருஷத்திலேயிருந்து நல்ல பீரியட் ஆரம்பிச்சுடும். மறுபடியும் அவர் சீஃப் மினிஸ்டரா வருவாரு, கவலைப்பட வேணாம். இப்போதைக்கு பதவியை ரிசைன் பண்ணச் சொல்லுங்கோ,

அப்படின்னு சொல்லியனுப்பிச்சான். அவங்களுக்கு நம்பிக்கையேயில்லை. இவங்க ஊருக்குப் போகிறதுக்கு முன்னாடி, அவர்கிட்ட ரிசைன் பண்றதுக்குக் கையெழுத்து வாங்கியிருப்பாங்க. உங்களால ஒண்ணுமே பண்ண முடியாது. அப்படின்னு சொன்னான். அதே போல ஆயிப் போச்சு. அவங்க போன வாரம் மறுபடியும் வந்தாங்க. அந்த சீஃப் மினிஸ்டருக்கு உடம்பு இப்ப தேவலாமாம். நிதானமா நடக்க ஆரம்பிக்கிறாராம். குழறி, குழறி பேச ஆரம்பிக்கிறாராம். எல்லாத்தையும் ஞாபகப்படுத்திக்க ட்ரெயினிங் எடுக்கிறாராம். எப்படி மறுபடியும் நல்ல பீரியட் ஆரம்பிக்கும்னு அவன்கிட்ட கேட்டுட்டுப் போயிருக்காங்க. இந்த முறைதான் அவங்க மூஞ்சியில சந்தோஷம் வந்திருக்கு. ஆனா, அந்த சீஃப் மினிஸ்ட்ர் பொண்டாட்டி எவ்வளவு கஞ்சம் தெரியுமா? ஒரு சிட்டிங்குக்கு ஆயிரம் ரூபாய். மூணு சிட்டிங்குக்கு மூவாயிரம் ரூபாய்தான் கொடுத்தாங்க. கூட கேளேண்டான்னு கேட்டேன். அவங்களுக்கு கொடுக்க மனசு வராது. கொடுக்க மனசு வராத காசை


"அவனுக்கு மரியாதை தந்தாதான் அவன் மலர்ச்சியா இருப்பான். மலர்ச்சியா இருக்கிற ஆள்தான், உன்னிப்பா ஜாதகத்தைப் பார்ப்பான். உண்மையா பேசுவான்."




வாங்கினா நான் எப்படி உருப்படுவேன். அவங்க கொடுத்த வரைக்கும் போதும், அப்படின்னு சொல்லிட்டான். அவங்க சொல்லி, இப்ப ஏகப்பட்ட ஆளுங்க வெளியூரிலிருந்து வராங்க. இங்க வந்து மூணு நாள் தங்கி, தேதி கேட்டு, டைம் கேட்டு, காத்திருந்து பார்த்துட்டுப் போறாங்க."

"நான் வரேன். நானும் அவன்கிட்ட சிலது கேட்கணும்."

"நான் இங்க கூட்டிக்கிட்டு வரேன் சித்தப்பா"

"வேணாம்டா. ஜோசியருக்கு ஒரு மரியாதை தரணும். அவனைக் கூலியாள் மாதிரி நடத்தக் கூடாது. அவனுக்கு மரியாதை தந்தாதான் அவன் மலர்ச்சியா இருப்பான். மலர்ச்சியா இருக்கிற ஆள்தான், உன்னிப்பா ஜாதகத்தைப் பார்ப்பான். உண்மையா பேசுவான். நாம போய் நின்னு கேட்டாதான் அந்த சீனிவாசனுக்கு மரியாதை. நாளை காலையிலே ஏழு மணிக்கு அங்கே இருக்கேன்னு சொல்லு. நீ, நான், கோமளவல்லி, நம்ம டிரைவர் நாலு பேரும் போவோம். இப்ப சாப்பிடலாமா? தட்டு போடச் சொல்லு."

வாசுதேவமூர்த்தியோடு எதிரும், புதிருமாய் உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டு, சித்தப்பா தூங்குவதற்கு மாடியேறிப் போனார். சித்தப்பா போனபிறகு, கோமளவல்லி தட்டு போட்டு பகலுணவு எடுத்துக் கொண்டாள். பல் தேய்த்துவிட்டு அறைக்கு வந்து கதவு சாத்திக்கொண்டாள். "என் மேல கோபமா, கண்ணு" என்று வாசுதேவமூர்த்தியின் முகத்தைத் தூக்கிக்கொண்டாள்.

"உன் மேல எப்படி கோச்சுக்க முடியும்? நீ இன்னைக்கி பேசுன பேச்சு இருக்கே, எனக்கு எவ்வளவு பெரிய மரியாதையைக் கொடுத்தது தெரியுமா? எனக்கு எத்தினி சந்தோஷத்தைக் கொடுத்தது தெரியுமா? சித்தப்பா சொல்றாமாதிரி, நான் எத்தனை உரக்கக் கத்தினாலும் இந்தப் பேச்சு எடுபட்டிருக்காது. அதுக்குப் பதிலா, மறைக்கிறான், வெறுமனே கூவறான், ஏதோ தப்பு இருக்கு, அப்படின்னு சந்தேகம் வந்திருக்கும். நீயா நின்னு, நடுக்கூடத்துல, பத்து பேர் காதுபட, சத்தம் போட்ட பார், அதுல வீடு ஆடிப் போச்சு. எனக்கு மரியாதை கூடிப்

போச்சு. அடியே... எல்லாத்தையும் விட்டுட்டு நம்ம புள்ளை பெத்துக்குவோம், வாடி'' - வாசுதேவமூர்த்தி அவள் புடவையைப் பிடித்து இழுத்தான்.

''எதுக்கு? ஏன் அப்படி செய்யணும்? நாம் ஒரு திட்டம் வைச்சிருக்கோம். நமக்கு நல்லது சொல்றதுக்கு ஒருத்தர் இருக்கார். அவர் சொல்படி நாம நடக்கிறோம். இவங்களுக்குப் பயந்துக்கிட்டு நாம என்னத்துக்கு அவசரப்படணும்? தேவையேயில்லை. ரெண்டரை வருஷம் பொறுத்துத்தான் நான் புள்ளை பெத்துக்குவேன். எனக்கு புருஷன் நல்லபடியா அமைஞ்சா மாதிரி, குழந்தைகளும் நல்லவிதமா அமையணும். எனக்கு நல்ல குழந்தைங்க பிறக்கலைன்னா, நான் மலடியாகவே இருக்கிறதுக்கு தயார்.''

''சரி, கத்தாதே. வரிஞ்சி கட்டிக்கிட்டு உங்க வீட்டுக்குப் போய், உங்க அப்பாகிட்டே எகிறாதே.''

''எகிறவே மாட்டேன். எங்க வீட்டுப் பக்கம் இப்போதைக்கு போகவே மாட்டேன். என்ன பேசினாலும், என்ன கூப்பிட்டாலும் ஒத்தை வார்த்தை, ரெட்டை வார்த்தையில பதில். நீங்களும் அங்க போக வேணாம். ஏதோ நல்ல காலம். பெரியவர் கேள்வி கேட்கிற போது, நான் வீட்டுல இருந்தேன். எங்கேயாவது தூக்கி சொருகிகிட்டு, கோயிலுக்கோ, கடைகண்ணிக்கோ போயிருந்தேனாக்கா, இவர் கேட்டது தெரியுமா? இவர் கேட்டு ரெண்டு நாளுக்கப்புறம் நான் பதில் சொன்னா நல்லாயிருக்குமா? அந்த நேரம் கேட்டு, அந்த நேரம் வேகமா பதில் சொல்லும்போதுதான் ஒரு அம்சமாச்சு. அப்படியில்லாத தள்ளித் தள்ளி பதில் சொல்லியிருந்தா தயக்கமாதான் இருந்திருக்கும். அப்ப உங்க பேருக்கு அசிங்கம்தான் வந்திருக்கும். நீங்க சரியில்லேன்னு எல்லாரும் நினைக்கும்படியா ஆகியிருக்கும். அப்படி ஒரு பேச்சு என் காதுக்கு வந்தா, அதுக்கு எனக்கு எவ்வளவு வேதனை? இப்படி ஒரு நிலைமையை பெண்ணுக்கு கொண்டாந்து கொடுத்திட்டு, பெரிய உத்தமன் மாதிரி கண்ணுல ஜலம் விட்டு அழுதா, எனக்கு எங்க அப்பாவைப் பிடிக்கலை. நான் இன்னொன்னு சொல்லட்டுமா? இதுக்கு எங்க அப்பா கூட காரணம் இல்லை. எங்க அக்காவும், அம்மாவும் தூண்டி



விட்டிருப்பாங்க. இவ வருஷத்துக்கு ஒண்ணு பெத்து இறக்கறாங்கிறதனால, என்னை இளக்காரமா நினைக்கிறா. அவ புருஷனுக்கு இவளோட படுக்கிறதைத் தவிர, வேற வேலையில்லை. அதே மாதிரி எம் புருஷனையும் நினைச்சிட்டா போலிருக்கு.''

''போறும்டி, அசிங்கமா பேசாதே...''

''அதான் சொல்றேனே... நான் பேசப் போறதேயில்லை. என்னிக்கு என் புருஷனுக்கு இவ்வளவு பெரிய அவமரியாதையைக் கொடுத்தீங்களோ, என்னால உங்ககிட்ட மனசு விட்டுப் பேச முடியாது. நீங்களும் பேச வேணாங்கிறது என்னுடைய ரிக்வெஸ்ட்.''

''அது சரி... நானாப் போய் இறைஞ்சு பேசினாலும் தப்பாதான் படும். மாப்பிள்ளையைக் கண்டிச்சுக் கேட்டுட்டோம். அதனால அவர் வந்து குழையறாரு. அப்படின்னு அதையும் தப்பாதான் திரிச்சுப் பேசுவாங்க. அப்படி பேசுறதுக்கு இடம் கொடுக்காம நர்மளா உர்ருன்னு மூஞ்சியைத் தூக்கிக்கிட்டிருந்தா நல்லதுதான். மறுபடியும் கேட்கறேன், இவங்க வாயில விழுந்து, எழுந்தரிக்கிறதுக்குப் பதிலா, புள்ளையைப் பெத்துக்கிட்டா என்ன?''

''முடியாது. எனக்கு சீனிவாசன் மேல நம்பிக்கை இருக்கு. கல்யாணத்துக்கு முன்னாடி நீங்க எங்க பொருத்தம் பார்த்தீங்கன்னு எங்க வீட்டுல விசாரிச்சாங்க. சீனிவாசன் பேர் சொன்னவுடனே, நானும் அம்மாவும் எங்க ஜோசியர் எழுப்புன கேள்வியெல்லாம் சீனிவாசன்கிட்ட போய் கேட்டோம். ரெண்டே வார்த்தைல சீனிவாசன் சொன்னாரு. இது போன ஜென்மத்து பந்தம்மா. நீ கேள்வி கேட்டா தள்ளிப் போயிடாது. நீ எத்தினி கேட்டாலும் இவன்தான் உனக்குப் புருஷன், அப்படின்னு பளிச்சின்னு பேசினாரு. நான் விடலை. குறி சொல்றா மாதிரி சொல்றீங்களே தவிர, எனக்கு ஆதாரமா ஒரு விஷயம் சொல்ல மாட்டேன்ங்கிறீங்களே... எங்க வீட்டு ஜோசியர் வாயை அடைக்கிறா மாதிரி எதுவும் சொல்ல மாட்டேன்ங்கிறீங்களே... உங்க வீட்டு ஜோசியர் வாயை அடைக்கிறது முக்கியமா, இல்லை உனக்குத் திருப்தியா ஒரு பதில் சொல்லணுமான்னு சீனிவாசன் கேட்டாரு. எனக்குத் திருப்தியா ஒரு பதில்

சொல்லணும்னேன். இன்னிக்கு ராத்திரி ஒரு கனவு வரும். இவன்தான் உன் புருஷன்னு உனக்கு சொல்லப்படும், அது போறுமா உனக்குன்னாரு. போறும்ங்கன்னு சொல்லி எழுந்து வந்தேன். அன்னிக்கு ராத்திரி கனவுல வந்தது.''

''அடடே... நல்லாயிருக்கே கதை''

''கதையெல்லாம் ஒண்ணுமில்லை. நிஜம்.''

''என்ன கனா? அதைச் சொல்லு.''

''நான் பசுமாடா நிக்கிறேன்.''

''அடி சக்கை, நீ பசுமாடா...''

''ஆமாம்.''

''பார்த்தாலே தெரியுது, பசுமாடுன்னு.'' - வாசுதேவமூர்த்தி மனைவியை இழுத்து ஆரத் தழுவிக் கொண்டான்.

''மிச்சத்தைக் கேளுங்க. பசுமாடா இருக்கேனே தவிர, மனசு மனுசாள் மனசு மாதிரி யோசனை பண்ணுது. எனக்கு இன்னும் கல்யாணம் ஆகலையேன்னு அந்த பசுமாடு. அதாவது நான், யோசனை பண்றேன். அப்ப நீங்க வரீங்க.''

''காளை மாடாகவா?''

''இல்லை''

''எருமை மாடாகவா?''

''இல்லை''

''பிறகு?''

''இதே மாதிரி கொஞ்சம் நீள முடியோட, கழுத்துல செயினோட, கையில கங்கணத்தோட, இடுப்புல பஞ்சகட்டு வேட்டியோட வந்து நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன். நீ என் கூட குடித்தனம் பண்றியான்னு என்னைக் கேட்கறீங்க.''

''அதாவது பசுமாட்டை...''

''ஆமாம். நான் சரின்னு சொல்றேன். தலைகுனிஞ்சு நிற்கிறேன். நீங்க எனக்கு கழுத்துல தாலி கட்டுறீங்க.''

''அதாவது பசுமாட்டுக்கு''

''ஆமாம்.''

''நல்ல கனாடி யம்மா காணற. எங்கனா இதை வெளியில சொன்னினாக்க வழிச்சிக்கின்னு சிரிப்பாங்க.''



''எதுக்கு இதை வெளியில சொல்லணும்? கனாவேல்லாம் வெளியில சொல்லலாமா? என் முதுகு மேல கைபோட்டுக்கிட்டு என் கூடவே நடந்து வரீங்க. நான் ரொம்ப சந்தோஷமா, உங்க பக்கத்துல உரச, உரச நடந்து வரேன். கனவு கலைஞ்சு போச்சு.''

''ஆத்தா, என்னை விட்டுடு. நான் உன்னை இனிமே கேள்வியே கேட்கலை'' - வாசுதேவமூர்த்தி கைகூப்பினான்.

''எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருந்தது தெரியுமா? மறுநாள் காத்தால சீனிவாசனுக்குப் போன் பண்ணேன். கனவு வந்துதான்னு கேட்டார். வந்தது. என்னான்னு ஆரம்பிச்சேன். என்கிட்டே சொல்ல வேணாம். உங்க புருஷனைத் தவிர வேற யார்கிட்டேயும் சொல்ல வேணாம். உங்களோட வைச்சிக்குங்க. உங்களுக்குப் புரிஞ்சா போறும்னுட்டாரு. இந்தக் கனவுக்கு என்ன அர்த்தம், ஏது அர்த்தம், எதுவும் எனக்குத் தெளிவாகலை. ஒண்ணேயொண்ணு எனக்குப் புரிஞ்சுது. நம்ம தொடர்பு ஜென்ம, ஜென்மாந்திரத்தது.'' - கோமளவல்லி புருஷனைக் கட்டிக் கொண்டு முத்தமிட்டபடியே குதியலுடன் பேசினாள். அவளையே வாசுதேவமூர்த்தி ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

''உங்களுக்கு இந்தக் கனவு பத்தி ஏதாவது சொல்லத் தோணுதா?'' - புருஷனுக்கு அருகில் படுத்துக் கொண்டு, அவன் தலையைக் கோதியபடியே கோமளவல்லி ஆவலோடு கேட்டாள்.

''எம்.ஏ. படிக்கிற போது கதைப் புத்தகம் படிக்கிற பழக்கம் எனக்கு ஒரு ஃப்ரெண்டால உண்டாச்சு. ஒரு நாளைக்கு ரெண்டு நாவல் வெறி புடிச்சா மாதிரி படிப்போம். எப்பவும் படிச்சிக்கிட்டேயிருப்போம். எதுனா படிச்சிக்கிட்டிருப்போம். அப்போ, திபெத்தியன் லாமா பத்தி நிறைய புத்தகம் படிச்சேன். அது ஒரு தனி தத்துவம். சூட்சுமமான விஷயம். நாம எது மேல அன்பு வைக்கிறோமோ, அந்த அன்பே அடுத்த ஜென்மத்துலயும் நமக்குத் துணையாகக் கூட வரும். நமக்கு உறவாகப் பிறக்கும். அந்த அன்புக்கு செய்நன்றியா நம்மளைத் தேடி வாழ்க்கைப்

படும், அப்படின்னு அந்த லாமா சொல்வார். லாமான்னா புத்த மத துறவின்னு வைச்சுக்கயேன். அதனால அன்பு செய்யறது கூட, ஒரு அளவா, மேம்போக்கா, பட்டும்படாத பண்றது நல்லதுன்னு அந்த புத்தகம் சொல்லும். போன ஜென்மத்துல ஆசை, ஆசையா ஒரு பசு கன்றை வாங்கி, ஆடிப் பாடி வளர்த்து, தேய்ச்சி குளிப்பாட்டி, தீனி போட்டு, கன்னு, கன்னுன்னு வைச்சிருப்பேன். இந்த ஜென்மத்துல அந்த பசு மாடு அந்த தீனிப் போட்ட கடனைப் போக்கறதுக்கு எனக்குப் பொண்டாட்டியா வந்து சேர்ந்திருக்குமோ, என்னவோ?''

''நல்லாயிருக்கு, நீங்க சொல்றது. நீங்க சொல்றபடிதான் போன ஜென்மத்து நாம் இருந்திருப்போம். எனக்கு இன்னொரு கேள்வி இருக்குங்க...'' - கோமளவல்லி நெருங்கி வந்து கேட்டாள்.

''என்ன?'' - வாசுதேவமூர்த்தி அவளை அணைத்துக் கொண்டான்.

''இத்தினி செய்யாராரே, சித்தப்பா. அவரும் நீங்களும் போன ஜென்மத்துல என்னவா இருந்திருப்பீங்க? அவன் அவன் வேலைக்குப் போகணும்ன்னு பேயா அலைகிற போது, பத்து ரூபாய் காசுக்கு நாயா உழைக்கிற போது, எந்த சிரமும் இல்லாமல் புதுசா ஒரு வாழ்க்கை கிடைச்சிருக்கே. இப்படி அதிகாரமும் காசுமா இருக்கிற ஒரு சித்தப்பா எல்லாருக்கும் கிடைப்பாங்களா? தான் வைச்சிக்கிட்டா தப்பு வரும்ன்னு அண்ணன் புள்ளைக்கிட்ட அத்தனை காசும் கொடுத்து, நீ பார்த்துக்க, நீ பார்த்துக்கன்னு சொல்றாரே... இந்த குபேரக் காசு யாருக்காவது கிடைக்குமா? நேத்து சித்தப்பாக்கிட்ட லிஸ்ட் கொடுத்த போது ஆடிப் போயிட்டேன். சுலபமா ஒரு கோடி ரூபாய் தேறுமில்லை? பதினைஞ்சு விதமான சொத்து. நீங்க உழைக்கவேயில்லை. உங்களைத் தேடி உங்க மடியில வந்து உட்கார்ந்திருக்கு. உங்களுக்கு இது ஆச்சரியமாயில்லை?''

''நீ கேலி பண்றியா, இல்லை நிஜமாகவே கேள்வி கேட்கறியான்னு எனக்குப் புரியலை.''

''சீ... சீ... நான் ஏன் உங்களைக் கேலி பண்றேன்? உங்களைக் கேலி பண்ற அளவுக்கு நான் என்ன உசத்தி?



எனக்கு ஒரு ஆச்சரியம். என்னடா, ஊர்ல அவனவன் ஏகப்பட்ட கவலையோட இருக்கிற போது, நாம எது பத்தியும் கவலைப்படாத இப்படி ஒரு ராவும், பகலுமாய்க் கொண்டாடிக்கிட்டிருக்கோமேன்னு ஒரு ஆச்சரியம். உங்க சித்தப்பாக்கிட்ட அழுதது கூட எனக்கு சந்தோஷமா இருந்தது. அவனவன் துக்கப்பட்டுதானே அழுவான். நான் ரொம்ப சந்தோஷமா அழுதேன். அதுவே எனக்கு ஆச்சரியம். என்னடா, நமக்கு அழுகை கூட சந்தோஷமா இருக்கேன்னு. நான் பேசறது புரியுதா? இல்லை, உளர்றேனா?''

''அடியே... நீ ரொம்ப கெட்டிக்காரிடி... உன்னை வைச்சு குடித்தனம் பண்றது ரொம்ப கஷ்டம். நல்ல வேளை, எங்கிட்ட மாட்டினே. எவனா, சாராயக் கடை ஜெனரல் மானேஜர்கிட்ட மாட்டியிருந்தே, அவனைப் பேசியே கொன்னுட்டிருப்பே. அவன் மிரண்டு, உன்னை விட்டு ஓடியிருப்பான். நீ கேட்கற அத்தனை கேள்வியும் சரி. நீ பேசற பேச்சு எல்லாம் சரி. எனக்கும் இந்தக் கேள்வி வரணும். ஆனால், இந்த வாழ்க்கைக்கு நான் ஒண்ணும் சந்தோஷப்பட்டுக்கலை. இது கவிழ்ந்து போய், எல்லார் மாதிரியும் நாமளும் அம்பது, நூறுக்கு அலையும்படியா வந்துதுனாலும் அதையும் நான் சாதாரணமா எடுத்துக்குவேன். ஆனால், அலைய வேண்டி வராதுன்னு எனக்கு நல்லா தெரியும். நீயும், நானும் இதைக் கேள்வி கேட்டு முழிக்கிறதைவிட, சீனிவாசன்கிட்டேயே கேட்போம். சீனிவாசன் நாடியும் படிப்பான். கட்டம் போட்டு, சோழி உருட்டி, ஆருடம் பார்த்து, போன ஜென்மம் தொடர்பு என்னான்னு சுத்தமா சொல்வான். நாளைக்கு சித்தப்பாவோட போறபோது, இது பத்தி கேட்போம்.'' - வாசுதேவமூர்த்தி அவளைப் பார்த்து பேசினான்.

''ஒருவேளை இதைப் பத்திக் கேட்க முடியாட்டி, சித்தப்பா இல்லாதபோது கேட்போம். எனக்கு இந்தக் கேள்வி ரொம்ப முக்கியமா படுது. நமக்கும் உங்க சித்தப்பாவுக்கும் என்ன தொடர்பு? ஏன் இப்படி வாரி, வாரி கொடுக்கிறாரு? நம்ம வாழ்க்கை எல்லார் மாதிரியும் இல்லாம, இப்படி காத்துல பறக்கிற அன்னபட்சியா இருக்கே. இதுக்கு என்ன காரணம்?

இதுக்கு புத்திபூர்வமா வேணும்ன்னா பதில் சொல்ல லாம்.''

''சொல்லுங்களேன்...'' - அவள் எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

வாசுதேவமூர்த்தி அவள் மடியில் தலை வைத்து, வயிற்றில் முகம் பதித்துக் கொண்டான். ''எதையும் பெரிசா எடுத்துக்கறது கிடையாது. அந்த புத்தி இயல்பாகவே எனக்கு வந்துடுச்சி. நல்ல வேளையா எனக்குப் பொண் டாட்டியா வந்த நீயும், இதைப் பெரிசா எடுத்துக்கலை. ஒரு சாராய முதலாளிக்குப் பொண்ணா பிறந்து, மூணாவது பொண்ணா வளர்ந்து, கழுத்து நிறைய நகை போட்டு, பொட்டி நிறைய பட்டுப் புடவை அடுக்கிக்கிட்டிருந்த நீ அலட்டலா காண்பிக்கைல. ஒரு பெரிய அரசியல்வாதி புள்ளைக்கு வாக்கப்படறதை அங்கங்கே பேசி கொண்டா டிக்கலை. நானும் இப்படி ஒரு சித்தப்பா கிடைச்சதுக்காக, அலட்டல் காட்டியோ, அதிகாரம் காட்டியோ, எல்லாரும் வந்து கும்பிடுங்கடான்னு எகிறிக் காட்டியோ பண்ணாத, வந்தா வந்ததோட சரி, வராட்டி வராததோட சரி, அப்படின்னு காசு பத்தின கர்வம் இல்லாம, கூச்சம் இல்லாம மௌனமா இருக்க நமக்குத் தெரிஞ்சு போச்சு. நிறைய பேர் ஏன் கஷ்டப்படுறாங்க, தெரியுமா, கோமளா? அளவுக்கு மீறி யோக்கியதைக்கு மீறி ஆசைப்படறான். ஒண்ணு கிடைச்சா ரெண்டு கேட்கறான். ரெண்டு கிடைச்சா பத்து கேட்கறான். பத்து கிடைச்சா நூறு கேட்கறான். எத்தனை பேர் எங்கிட்ட ரேக்கிவிட்டானுக தெரியுமா, எம்.எல்.ஏ. சீட் கேளு, எம்.பி. சீட் கேளுன்னு? லோக் சபா கேளு, ராஜ்ய சபா கேளுன்னு. நான் சரி, சரின்னு தலையாட்டிட்டு வாயே திறக்காத வந்திடுவேன். எதுக்கு லோக் சபாவும், ராஜ்ய சபாவும்? போய் என்ன சாதிக்கப் போறோம்? அங்க போய் செய்யறதை இந்த கும்பகோணத்துல செய்ய முடியாதா? பெருசா, பெருசா பொ்ய்யா தான, தருமம் பண்றதுக்குப் பதிலா சிறுசா, சின்ன அளவுல உண்மையா செய்யணுமங்கிறதைத்தான் ஆரம்பத்துலேயிருந்தே நான் ரொம்ப கெட்டியா பிடிச்சிக்கிட்டேன்.''

''எப்படி சொல்றீங்க?'' - கோமளவல்லி புருஷனை அறியும் ஆவலோடு கேட்டாள்.



''நாங்க ஆறு பேருன்னு சொன்னேனே, அந்தப் புசங்களுக்கெல்லாம் என்னால என்ன முடியுமோ, அத்தனையும் செய்திருக்கேன். சீனிவாசன்லாம் ரொம்ப ஏழை. என் கூட சுத்துனா காபி, டிபன் கிடைக்கும்ங்கிறதுக் காகவே காலையில வீடு தேடி வருவான். நானும் மாட்டேன்னு சொல்றதேயில்லை. வயிறார சோறு போடறது எனக்கு சந்தோஷமாகவே இருந்தது. எனக்கு பிடிச்ச அந்த ஆறு பேருக்கும் என்னால முடியுமோ, அத்தனையும் செய்திருக்கேன். அதை தான, தருமாகக் கூட செய்யலை. ஒரு ஃப்ரெண்டுக்கு இன்னொரு ஃப்ரெண்டு பண்றா மாதிரி, சந்தோஷமா கர்வம் இல்லாம செய்திருக்கேன். சீனிவாசன் தான் என் மேலேயே உயிரையே வைச்சிருக்கான். அதே மாதிரி நாவல் படிக்கிறதுக்கும், இங்கிலிஷ் பேசறதுக்கும் சொல்லிக் கொடுத்தவன்லாம் இன்னும் மரியாதையா இருக்கான். நாம உதவி செய்தவங்க இன்னிக்கு நல்ல நிலையில இருக்காங்கிறதைப் பார்க்கிற போது, எவ்வளவு நிறைவா இருக்கு தெரியுமா? இந்த நிறைவு பொய்யா செய்கிற எந்த தானத்துலயும் கிடைக்காது. நான் பேராசைப் படறதேயில்லை, கோமளவல்லி.''

''எங்க அப்பா... அது நல்லா தெரியுதே... பக்கத்துல பொம்பளை. ரூம் தாழ்ப்பாள் போட்டுண்டு அரைகுறையா படுத்துண்டாலும், நெஞ்சு முட்டிக் கிடக்குமே தவிர, வயித்தை ஒட்டிக் கிடக்குமே தவிர, வாடின்னு அப்படின்னு இழுக்காது. அப்படித்தானே...'' - அவள் குனிந்து உதடுகளில் முத்தமிட்டாள்.

''இழுத்தா தப்பாயிடும். இன்னிக்கு ஏடாகூடம் பண்ணா நாம போட்டு வைச்சிருக்கிற கணக்கு சரியா வராது. என்னைவிட, உன்னைவிட நம்ம குழந்தை முக்கியமில்லையா, நம்ம பரம்பரை முக்கியமில்லையா? அப்படி யோசிச்சா தப்பு பண்ண தோணுமா?''

''இந்த புத்தி உங்களுக்கு எப்படி வந்தது? யார் சொல்லிக் கொடுத்தது?''

''கோமளவல்லி, நல்ல புத்தியும் ஒரு கலை மாதிரி. பாட்டுப் பாடறா மாதிரி. ஓவியம் வரையறா மாதிரி. சிற்பம் செய்யறா மாதிரி சீனிவாசன் ஜோசியம் சொல்றா மாதிரி

இது தானா உள்ளுக்குள்ளிருந்து வரனும். பூர்வ ஜென்ம வாசனை இருக்கனும். ஒரு நாலு ஜென்மமா மெல்ல, மெல்ல படிஞ்சி இப்போ முழுசா உருவாயிருக்கனும்ன்னு தோணுது. ஒருத்தன் ஏன் நல்லவனாயிருக்கான்னா, அது பல ஜென்மத்து வாசனைன்னு நான் நினைக்கிறேன். சரி, ஏன் கெட்டவனாயிருக்காங்கனாக்க, அதுவும் பல ஜென்மத்து வாசனைன்னு நான் நினைக்கிறேன். கெட்டது பண்ணி, பண்ணி, அடிபட்டு பட்டு, மெல்ல மெல்ல ஒவ்வொரு கெட்டதா, ஒவ்வொரு ஜென்மமா விட்டு அது தேறி வர்றதுக்கு பல ஜென்மம் ஆகும்ன்னு நினைக்கிறேன்.''

''துரை, எனக்கு தூக்கம் வருது. ஒரு ஒண்ணவர் தூங்குனாதான் சாயந்திரம் சுறுசுறுப்பா வேலை செய்ய முடியும்.'' - அவள் மல்லாக்கப் படுத்துக் கொண்டாள். வாசுதேவமூர்த்தி அவளைக் கட்டிக் கொண்டு, தோள் வளைவில் முகம் பதித்து தூங்கிப் போனான்.

புணர்ச்சியில் ஈடுபட்டு அலுப்பில் தூங்காமல், அன்பில் கட்டுபட்டு குழந்தைகள் போல் தூங்குவதற்கு எல்லோருக்கும் தெரிவதில்லை. தெரிந்தவர் பாக்கியசாலிகள்.

> ''முதுகெலும்பை நேரே நிமிர்த்தி வைத்துக் கொண்டால்தான் தலை ஆடாது இருக்கும். தலை ஆடாது இருந்தால்தான் புத்தி ஒருமைப் பட்டு எதிரே இருப்பவரை முற்றிலுமாய் கவனிக்கத் துவங்கும்.''



சித்தப்பாவின் எதிரே சீனிவாசன் கைகட்டி, சம்மணமிட்டு விறைப்பாக உட்கார்ந்திருந்தான். அந்த அறை முழுவதும் புத்தம்புதிய கோரைப் பாய்கள் விரிக்கப்பட்டிருந்தன. யார் வந்தாலும் தரையில்தான் உட்கார வேண்டும். தரையில் உட்கார முடியாதவர்களுக்கு ஒரு சிறிய ஸ்டூல் போடப்படும். உட்கார முடிந்தவர்கள் கோரைப் பாயில் சம்மணம் கட்டி உட்காருவதே நல்லது. இந்தியா போன்ற வெப்ப நாடுகளில் சம்மணமிட்டு உட்காருவதால்தான் முதுகெலும்பு நேரே நிமிர்த்தி வைத்துக் கொள்ள முடியும். முதுகெலும்பை நேரே நிமிர்த்தி வைத்துக் கொண்டால்தான் தலை ஆடாது இருக்கும். தலை ஆடாது இருந்தால்தான் புத்தி ஒருமைப்பட்டு எதிரே இருப்பவரை முற்றிலுமாய் கவனிக்கத் துவங்கும்.

நாற்காலியில் உட்கார்ந்துகொண்டோ, கால்களை ஆட்டிக் கொண்டோ, கோணவாய் சரிந்துகொண்டோ கேட்பது அபத்தம். இதற்கு கேட்காமலேயே இருக்கலாம். அப்படி மீறி உட்கார்ந்து கேட்டால், கேட்டது எதுவும் மனதில் பதியாது. எனவே, சீனிவாசன் அந்த அறையில் இராஜராஜேஸ்வரி விக்கிரகம் வைத்து, அதற்கு இரண்டு பக்கம் குத்து விளக்குகள் ஏற்றி, மெல்லியதாய் சாம்பிராணிப் புகை போட்டு, தர்ப்பைப் பாயில் உட்கார்ந்து கொண்டு ஜோசியம் சொல்லுவான். எதிரே இருப்பவரை மெத்தென்ற கோரைப் பாயில் உட்கார வைப்பான்.

சித்தப்பாவிற்கு அந்த அறையின் சுகந்தமும், சூழ்நிலையும் பிடித்திருந்தன. ''இது நல்லாயிருக்கு, சீனிவாசன்'' என்று துண்டை உதறி, தரையில் தட்டியபடி பாயில் உட்கார்ந்துகொண்டார். எடுத்தவுடன் பிரச்சினையைப் பிரித்து வைக்க ஆரம்பித்தார்.

''இப்ப ஆளும் கட்சியா இருக்கிறவங்க, அதாவது எனக்கு எதிரியா இருக்கிறவங்க, என்னைத் தான் இடத்துக்கு வரும்படி ரகசியமா தூது அனுப்பறாங்க. எனக்கு மட்டுமில்லை. என் கூட இருக்கிற நாலைஞ்சு பேருக்குத் தனித்தனியா அனுப்பியிருக்காங்க. அந்த அஞ்சு பேருல, நாலு பேரு போகத் தயாராயிருக்காங்க. இன்னும் ஒருத்தன் என் மூஞ்சியைப் பார்க்கிறான். நான் அங்க போயிட்டாக்க, எனக்கு பெரிய பதவி கிடைக்கும். என் கூட

இருக்கிறவங்களுக்கும் கிடைக்கும். நான் போகட்டுமா, வேணாமா?''

''போகமுடியாது'' - சீனிவாசன் பளிச்சென்று பதில் சொன்னான்.

''நான் போகலாமா, வேணாமான்னு கேட்கிறேன், சீனிவாசா''

''உங்களால் போகமுடியாதுன்னு சொல்றேன், அய்யா. போகலாம்ன்னு ஓர் அடி எடுத்து வைச்சால், உங்க முழங்காலில் பலமாக அடி விழும். தாண்டிப் போனால் வெட்டு விழும். மீறி நடந்தால், உங்களைச் சின்னா பின்னப்படுத்திவிடுவார்கள். உங்களால் அந்த இடத்துக்குப் போகமுடியாது. இது சர்வ நிச்சயம்.''

சித்தப்பா திகைப்போடு அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''வேணும்னா ஒரு சோதனை பண்ணிப் பார்க்கலாம். இந்த இடத்துலேயிருந்து மெட்ராஸ் போன் பண்ணி, அவருக்கு. உங்களைக் கூப்பிட்ட அந்த எதிர்பக்க பார்ட்டிக்கு ஒரு வாழ்த்து சொல்லுங்களேன். நீங்க வாழ்த்து சொன்ன பதினைஞ்சாவது நிமிஷம், உங்களைப் பத்தி அவர் தப்பா சொல்லப் போறார். நான் எழுதித் தரேன். இதுலேயிருந்தே நீங்க அங்க போக முடியாதுங்கிறதை, நீங்க புரிஞ்சிக்கலாம்.''

''சரி... அப்படி போகலைன்னா என் எதிர்காலம் எனக்கு இருட்டாத் தெரியுது''

''ஆமாம், அய்யா. இன்னும் மூணு வருஷம் இருட்டுதான். உங்கள் வாழ்க்கைப் பாதையில இதுதான் மிக மோசமான ஒரு நேரம். இந்த நேரத்துல எந்த அலட்டலுமில்லாம, எவ்வளவுக்கெவ்வளவு உண்மையா இருக்க முடியுமோ, எவ்வளவுக்கெவ்வளவு கீழ் மட்டத் தொண்டர்களைக் காண்டாக்ட் பண்ண முடியுமோ, எத்தனை சத்தியம் பேச முடியுமோ, எத்தனை நல்லது பண்ண முடியுமோ, அத்தனை நல்லது வஞ்சனையில்லாது பண்ணனும். இப்போ பண்ற நல்லது, இப்போதைக்குக் கெட்ட பேர் கொடுத்தாலும், கேலியாகப் பேசப்பட்டாலும் மூணு வருஷம் கழிச்சு உங்களை ஒஹோன்னு உயர்த்தற



விஷயமா மாறும். மீறி நீங்க ரகசியமா, தந்திரமா, பொய்யா, பித்தலாட்டமா எது பண்ணாலும் வெடிச்சு, சிதறி உங்களை அசிங்கப்படுத்தும். உங்க தலையில கண்டதைக் கொண்டு வந்து கொட்டும். நீங்க சத்திய சந்தனா இருக்க வேண்டிய நேரம் இது. எல்லா சோதனைக் காலங்களிலும், ஒரு ஆள் சத்திய சந்தனா இருக்கிறதுக்குத்தான் முயற்சி செய்யணும். அதற்காகத்தான் சோதனைக காலம். அய்யா, நான் சொல்றது புரியுதுங்களா..?'' - சீனிவாசன் கட்டின கையைப் பிரிக்காமல் பவ்யமாகக் கேட்டான்.

''எத்தனை திருட்டுத் தனம் பண்ணியிருக்கே, இந்தா வாங்கிக்க, அப்படின்னு இயற்கை அல்லது கடவுள் சக்தி நமக்கு ஒரு அறை விடுது. பல்லு தெறிக்கிறா மாதிரி, ஒரு அறை. வாங்கிக்கிட்டு என்ன பண்ணனும்? அடடே, தப்பு பண்ணிட்டேன். இனி பண்ணமாட்டேன், அப்படின்னு தானே சொல்லணும். ஒஹோ... இதுக்கு அடிக்கிறியா? உனக்குத் தெரியாம இது பண்ணட்டுமான்னு ஆரம்பிச்சோம்னாக்க அடி தொடர்ந்து பலமாகத்தான் விழும். தவிர, லேசாப் போகாது. ஏண்டா அடி விழுதுன்னு யோசனை பண்ணி, நம்மளை சரி பண்ணிக்கிறதுக்குத்தான் சோதனைகள் வருது. அவமானங்கள் வருது. உங்களுக்கும், நல்லவங்களுக்கும் நடுவுல இடைவெளி விழுந்துடுச்சி. உங்களைச் சுத்தி போலியான, பொய்யான கும்பல் பெருசாயிடுச்சி. அலட்டலான ஆட்கள் அதிகமாயிட்டாங்க. உங்களால நகர்த்தவும் முடியலை, நல்ல வழிக்குத் திருப்பவும் முடியலை. அவங்க உங்களை கெட்ட வழிக்கு வேகமா இழுத்துட்டுப் போறாங்க. இந்தத் தோல்வி உங்களுக்கு நல்லது. உங்களை விட்டுப் போறவங்க்ள்லாம் நல்லபடியா போகட்டும். போற அத்தனை பேரும் அயோக்கியன்னு நான் எழுதித் தரேன். நீங்க எந்தப் பக்கமும் போகாமல், உங்களுக்குக் கீழே இருக்கிற பதினைஞ்சு தொண்டர்களோட அதே கட்சியில, இதே விதமா இருங்க. மூணு வருஷம் கிராமம் கிராமமா, தெருத் தெருவா, பட்டணம் பட்டணமா சுத்துங்க. மறுபடியும் ஒரு சாதாரண பாலிட்டிசியன் மாதிரி, பஞ்சாயத்துத் தலைவர் மாதிரி, நகர சபை கவுன்சிலர் மாதிரி, வெறும் எம்.எல்.ஏ. மாதிரி, எந்த பந்தாவும் இல்லாமல் ஊர் சுத்தி வாங்க

எல்லார்கிட்டேயும் பேசுங்க. சௌக்கியமா, நல்லாயிருக்கீங்களா, எப்படியிருக்கீங்க அப்படின்னு வாயாராக் கேளுங்க. மனசார உதவி பண்ணுங்க. இது அத்தனையும் பின்னால உங்களுக்கு உபயோகமாகும்.''

''நீ பொதுவா சொல்றியா, இல்லை எனக்கு ஜோசியம் சொல்றியா? நீ பேசறது ஏதோ தத்துவம் மாதிரியில்ல இருக்கு?'' - லேசான கோபத்தோடு சித்தப்பா சீனிவாசனைப் பார்த்துக் கேட்டார்.

''நான் ஜோசியத்தைத் தத்துவமா சொல்றேன். இதுக்கு ஏன் அய்யா, கோபம் வருது? கிரக நிலை சரியாய் இல்லாதவர்களுக்குத்தான் கோபம் வரும். கோபத்தின் பாற்பட்டு வேகம் வரும். வேகத்தினால செயல் தப்பிதமாகப் போகும். இந்த மூணு வருஷம் எதுக்காகவும் நீங்க கோவிக்கக் கூடாது, அய்யா. யாராவது வந்து உங்களை விட்டுப் போறேன், அப்படின்னு சொன்னா, கும்பிடு போட்டு நல்லபடியா இருப்பா, அப்படின்னு ஆசீர்வாதம் பண்ணி அனுப்புங்க.''

''என் ஜாதகமே பிரிச்சுப் பார்க்கலை. நீ பாட்டுக்கு தப, தபன்னு ஏதோ சொல்றே.''

''உங்க ஜாதகம் மனசுல இருக்குய்யா. இன்னிக்கு, நேத்திக்கா உங்கஜாதகத்தைப் பார்க்கிறோம். என்னிக்கு முதல் மசால் தோசையும், கோதுமை அல்வாவும் வாசுதேவமூர்த்தி கையால வாங்கி சாப்பிட்டேனோ, அன்னையிலேர்ந்து உங்க ஜாதகம்தான் நான் பார்த்துக்கிட்டிருக்கேன்.''

''என்னான்னு, கோதுமை அல்வாவும், மசால் தோசையும் கிடைக்கும்ன்னா''

''செத்துப் போயிடலாம்ன்னு நினைச்சேன். யார்கிட்ட கடன் கேட்டும் அஞ்சு ருவா காசு கடன் கிடைக்கலை. வீட்டுல அரிசி, பருப்பு எதுவும் இல்லை. பித்தளை அண்டாவைக் கொண்டு போய் வைச்சேன். பதினெட்டு ருவா கொடுத்தான். வீட்டுக்கு வர்றதுக்குள்ள கடன்காரன் இது வட்டிக்கு சரியாப் போச்சுன்னு புடுங்கிட்டு விட்டான். எங்க, அம்மா அரிசி வாங்கிட்டு வரலையாடான்னு கேட்டாள். இதோ வரேன்னு சொல்லிட்டு, வாசுதேவமூர்த்திக்கிட்ட காசு கடன் கேட்கலாம்ன்னு வந்தேன். அவன் வாடான்னு கூட்டிக்கிட்டுப் போய், கோதுமை அல்வாவும், மசால் தோசையும், டிகிரி காப்பியும் வாங்கிக் கொடுத்தான். என்னன்னமோ பேசினோமே தவிர, காசு கேட்க மறந்து போச்சு. வயிறு நிறைய டிபன் வாங்கிக் கொடுத்ததும், ஊர்ப்பட்ட விஷயங்கள் பேச ஆரம்பிச்சிட்டோமே தவிர, வீட்டு நிலைமை ஞாபகம் வரலை. வாசுதேவமூர்த்தி 'நான் கிளம்பறேண்டா' அப்படின்னு என்னைத் தாண்டிப் போறான். அப்பத்தான் சொரேர்ன்னு ஞாபகம் வந்துச்சு. காசு கேட்கறதுக்கு வந்தோமே, டிபனை சாப்பிட்டுட்டு மறந்துட்டோமே, அம்மா பசியோடு இருப்பாளேன்னு நினைச்சிட்டு, அவனை கைதட்டி கூப்பிட்டலாமான்னு நினைக்கிறேன். ஆறு ருபாய்க்கு அல்வாவும், தோசையும் வாங்கிக் கொடுத்தான். வெட்கமில்லாம சாப்பிட்டுட்டு அவன்கிட்டேயே அஞ்சு ருவா கடன் கேட்கறது நியாயமான்னு நினைச்சேன். வாசுதேவமூர்த்தி திரும்பிப் பார்த்து, ''டேய், உனக்கு ஏதாவது காசு வேணுமா, வீட்டிலே அரிசி இல்லேன்னு யார்கிட்டயோ சொன்னியாமே... இந்தா'' அப்படின்னு பர்சு திறந்து, பத்து ருவா, நீளப் பத்து ருவா எங்கிட்ட கொடுத்தான். அந்த நாள் எனக்கு மறக்க முடியாது. பத்து ருபாய்க்கும் நொய்யரிசி வாங்கிகிட்டு வந்து, அம்மாகிட்ட கொடுத்து, இதை நாலைஞ்சு நாளைக்கு கஞ்சிக்காக வைச்சுக்கோ. சாதமா பண்ணிடாதேன்னு சொன்னேன். மறுநாள் இன்னொரு பத்து ருவா கொடுத்தான். அதுக்கு மறுநாள் இன்னொரு பத்து ருவா கொடுத்தான். எதுக்குடா தினம் பத்து ருவா கொடுக்கறேன்னு கேட்டேன். உன்னை தேடிண்டு வீட்டுக்கு வந்தேன். உங்க வீட்டுல வெறும் நொய்யரிசிக் கஞ்சிதான்னு தெரிஞ்சது. அதனால கொஞ்சம் சௌகரியமா இருக்கட்டுமேன்னு கூட காசு கொடுத்தேன். இதைப் பத்தி ஒண்ணும் பேசாதே அப்படின்னு வாயடைச்சிட்டான். அன்னிக்கே உங்க ஜாதகத்தைப் பிரிச்சிப் பார்த்து, நீங்க எப்படியெல்லாம் மேல வருவள்ன்னு நானும், இவனும் பேசிட்டோம் அய்யா. உங்க ஜாதகத்தை இனிமேல் பேப்பர்ல குறிச்சிப் பார்க்கணும்ன்னு அவசியமில்லை.''

''சரி, இவனைப் பத்தி சொல்லு. வாசுதேவமூர்த்தி எப்படியிருப்பான்?''

''அயன, சயனக்காரர். உடம்பு சுகமும், தூக்க சுகமும் உள்ளவர். நல்ல படுக்கை வசதி இருக்கும். நல்ல விருந்து சாப்பாடு, பெண் போகம் கிடைக்கும். உயர்ந்த ஏக பத்தினியாளோடு கூடி உடம்பும், மனசும் தங்கமாக மின்னும். யோக, போக விஷயங்கள் உள்ளவர். பூர்வ ஜென்ம பலம் முழுமையாக நிறைந்தவர். இதுதான் கடைசி ஜென்மா. இதுக்கப்புறம் பிறப்பு இல்லை. பனிரெண்டில் கேது இருப்பதால் ஞானத்தின் உச்சிக்குப் போகக் கூடியவர். அதே சமயத்தில் இவர் ஞானி என்பதை வெளியே சொல்லாமலிருக்கக் கூடிய திறம் படைத்தவர். மனசுக்குள் உள்ள கடவுளைக் கேட்டு வாழ்க்கை நடத்துகிறவர். குரு பலமாக இருக்கிறவருக்குத்தான் இந்த மாதிரி தெளிவாய் சிந்திக்க முடியும். உங்க ஜாதகமும், வாசுதேவமூர்த்தி ஜாதகமும் ரொம்ப நெருக்கமான ஜாதகம். உங்களுக்கு கடைசி வரைக்கும் துணையிருக்கப் போவது வாசுதேவ மூர்த்தி மட்டுமே.''

''இவருக்கு குழந்தை பிறக்கலையே. வீட்டுல கவலைப்படறாங்களே.''

''பொய்யானவர்கள் பொய்யான கவலைப்படுவார்கள். இவருக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு. இரண்டு பேரும் செழிப்பாக இருப்பார்கள். தந்தையைப் பற்றி பெருமையாகப் பேசுவார்கள். தந்தைக்குப் பெருமை செய்வார்கள்.''

''உனக்கு இந்த இடம் சௌகரியமா இருக்கா, சீனிவாசா...'' - சட்டென்று பேச்சு மாற்றி சித்தப்பா கேட்டார்.

''இந்த இடம், உங்க உறவு, வாசுதேவமூர்த்தியின் நட்பு - இது எல்லாமே பூர்வஜென்ம பந்தம். நாமெல்லாம் இந்த சோழ தேசத்துல ஒண்ணா இருந்தவங்க. மறுபடியும் ஒண்ணா இருக்கிறதுக்காக வந்திருக்கோம். ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் இந்த இடம் நான் நல்லா அனுபவிச்சிட்டிருப்பேன்.''

''குறிப்பிட்ட காலம் வரையில்ன்னா?''

''இன்னும் அஞ்சு வருஷம்.''

''அதுக்குப் பிறகு?''

''கதை முடிஞ்சு போச்சு. போய் சேர்ந்துடுவேன்.''



''ஏய்... என்ன உளறல் இது?'' - சித்தப்பா தலைவர் என்ற அதிகாரத்தோடு சீனிவாசனை அதட்டினார்.

''வீடு விட்டுட்டு துறவியாயிடுவேன், அய்யா. அதனாலதான் திருமணம் பண்ணிக்காத பிரம்மசாரியாகவே இருக்கேன்.''

''இந்த இடம் பத்தி ஏதோ சொன்னியாமே, சீனிவாசா...''

''ஆமாம் அய்யா. இந்த இடத்தை விற்க வேண்டாம். இது உங்க பழைய, பழைய வீடு. உங்க முன்னோர்கள் வாழ்ந்த இடம். நாலு தலைமுறைக்கு முன்னாடி ஒரு ஆள் தப்பு பண்ணி கைமாறி போயிடுச்சி. மறுபடியும் உங்களைத் தேடி, உங்க கைக்கு வந்திருக்கு. இதை நீங்களே சாசனம் பண்ணி வைச்சிக்கணும்ன்னா, வேற கை மாறக் கூடாது அப்படின்னா, இதை பொதுச் சொத்தா பண்ணிடுங்க.''

''பொதுச் சொத்துன்னா...''

''இங்க வேற விதமான கட்டடம் கட்டிடுங்க.''

''கோயில் கட்டச் சொல்றியா?''

''பள்ளிக்கூடம் கூட கட்டலாம்.''

சித்தப்பா ஒரு திகைப்போடு சீனிவாசனை உற்றுப் பார்த்தார்.

''தம்பி, நீ யாருன்னு தெரியலை. ஆனால், நான் வெளியே யாருக்குமே சொல்லாமல் உள்ளுக்குள்ளே சின்ன, சின்னதா யோசனை பண்ணி வைச்சிருக்கிற விஷயங்கள் எல்லாத்தையும் நீ நூல் உருவிவிட்டா மாதிரி, பளிச்சின்னு உருவி தரையில கொட்டிட்ட. இந்த மரக்கடைக்காரர் வீடு வாங்குற போதே, இந்த இடத்துல காலேஜ் கட்டலாமா, பள்ளிக்கூடம் கட்டலாமா, கும்பகோணத்துல மெடிக்கல் காலேஜ் இல்லையே, ஒண்ணை ஆரம்பிச்சா என்ன, அப்படின்லாம் யோசனை பண்ணேன். அதையே நீயும் சொல்றே... கடைசியாய் ஒரு கேள்வி. எனக்கு எப்ப சாவு வரும்? எப்படி சாவு வரும்?''

''அது தெரிஞ்சிக்கிறதுக்கு இப்ப ஒண்ணும் அவசரமில்லைய்யா. நீங்க எப்ப தெரிஞ்சிக்கணும்ன்னு அவ்சியமோ, அப்ப தானா வந்து தெரியும். போதும் நிறுத்திக்க

இத்தோட உன் கதை முடியப் போகுது. அமைதியா இரு. அப்படின்னு உங்களுக்குத் தெள்ளத்தெளிவா சொல்லப்படும். எல்லாத்தையும் விட்டுட்டு பளிச்சின்னு அமைதியாயிடுவீங்க. உங்களால எப்ப விட முடியுதோ, அப்ப உங்களுக்கு சாவு வந்திடுச்சின்னு அர்த்தம். இதுக்கு மேல இந்த விஷயத்தைப் பேச வேணாம்.''

''நோய்பட்டோ, நொந்துக்கிட்டோ சாகக் கூடாது. அதுதான் என் வேண்டுதல்.''

''இல்வீங்க அய்யா. போயிட்டு வரேங்கிற மாதிரிதான், நிம்மதியா, தெளிவாக் கிளம்பிடுவீங்க. உங்க ஜாதகம் அப்படித்தான் இருக்கு.''

''சந்தோஷம். உனக்கு எவ்வளவு தர்ணும்?''

''ஒரு ரூபாய், இருபத்தைஞ்சு பைசா''

''ஏன் சீனிவாசா?''

''இவ்வளவு பெரிய இடத்தை நூறு ரூபாய்க்கு வாடகைக்கு விட்டிருக்கான், என் சிநேகிதன். இதுக்கப்புறம் உங்ககிட்ட கைநீட்டி நான் காசு வாங்கிக்க முடியுமா? ஆனால், ஜோசியன் காசு வாங்கித்தான் ஆகணும். அந்த மரியாதைக்கு ஒண்ணேகால் ரூபாய்.''

''இந்தா. ஜோசியக் காசு ஒண்ணேகால் ரூபாய்.'' - சித்தப்பா வாசுதேவமூர்த்தியிடம் காசு வாங்கி, அவனிடம் நீட்டினார்.

''வீட்டுக்குப் போய் ஒரு அஞ்சாயிரம் ரூபாய் அனுப்பறேன். இந்த தோட்டத்தை சுத்தம் பண்ணி, இந்த வீட்டு வாசல்ல பந்தல் போட்டு, எதுனா ஹோமம் பண்ணு. கூட செலவாச்சுன்னா வாசுவைக் கேளு. நான் வரட்டுமா?'' - கைகூப்பினார்.

சீனிவாசன் கார் வரை வந்தான். கைகட்டி நின்றான்.

''இன்னிக்கு காலையில கூட நினைச்சேன், என்னவானாலும் தனியா நிக்கணும்ன்னு. இருந்தாலும் உள்ள லேசா ஊசலாட்டம். சீனிவாசா, படியேறுனவுடனேயே குறி சொல்றாமாதிரி சொன்னேயில்லே, இதையே கெட்டியா பிடிச்சிக்கப் போறேன். என்ன ஆனாலும் சரி, நான் தனியா நிக்கத்தான் போறேன். எவன் என்னை விட்டுப் போனாலும் சரி, நான் ஜனங்களோட ஒட்டிக்கப் போறேன். வரட்டுமா...'' - யாருக்கும் அதிகம் கைகூப்பி வணங்காத சித்தப்பா, சீனிவாசனை கைகூப்பி வணங்கினார். சீனிவாசன் குனிந்து அவர் பாதங்கள் தொட்டான். அவர் விரல் தொட்டு நெற்றியில் தடவிக் கொண்டான்.



''உங்களுக்கு திருப்தியா, சித்தப்பா?''

''ரொம்ப திருப்திடா. இவன் இந்த கேரளாக்காரன் மாதிரி இருக்கான். கேரளாவுல இருக்கிறவன் துர்க்கை வழிபாடு பண்ணி, மந்திர ஜபம் பண்ணி, ஆள் மூஞ்சியைப் பார்த்தவுடனேயே தடுக்கு, தடுக்குன்னு பேசுவானே, அந்த மாதிரி பேசறான். இவங்கிட்ட அந்த நூறு ரூபாய் வாடகை வாங்காதடா...''

''இதுவரைக்கும் ரெண்டு வருஷத்து வாடகை வாங்கியிருக்கேன், சித்தப்பா.

அந்த அஞ்சாயிரம் ரூபாயோட, இரண்டாயிரத்து நாநூறும் சேர்த்து பூஜைக்கு வைச்சிக்கன்னு கொடுத்துடு. இந்த மாதிரி ஆளுங்க நம்ம வீட்டுல இருக்கிறதே நல்லது. இதுக்கு காசு வேணாம். அதையும் தவிர...''

''என்ன சித்தப்பா?''

''இவன் மாதிரி ஆளுங்களெல்லாம் ரொம்ப நாள் ஒரு ஊருல தங்க மாட்டாங்க. தடுக்குன்னு ஏதாவது நினைச்சி உதறி, சொல்லாத கொள்ளாத ஊரை விட்டு போயிடுவான். இவன்கிட்ட போய் நாம எதுக்கு காசு வாங்கணும்?''

''ஏங்க, உங்களுக்குப் பள்ளிக்கூடம் கட்டணும்ன்னு ஆசை இருக்கா?'' - கோமளவல்லி முன்பக்கம் எட்டிப் பார்த்து ஆவலோடு கேட்டாள்.

''மருத்துவக் கல்லூரி கட்டணும்னே ஆசை இருக்கு. கும்பகோணத்தைக் கவனிச்சிட்டு வரீயா... பெருத்துப் போயிட்டே இருக்கு. ரயில்வே ஸ்டேஷன் தாண்டியெல்லாம் ஊர் வந்திடுச்சு. மெட்ராஸ் போற வழியெல்லாம், வயலெல்லாம் கட்டடமா மாத்திக்கிட்டு இருக்காங்க. நகரக் கொட்டாய் தியேட்டரெல்லாம் ஏசி தியேட்டரா யிடுச்சு. பஸ் ரூட்ட ஜாஸ்தியாயிட்டதால சுத்து, பத்து கிராமங்களெல்லாம் சருக், சருக்கென்னு கும்பகோணத்துக்கு

வந்துடறான். பாத்திரம் மட்டுமே வித்துக்கிட்டிருந்த கும்பகோணத்துல என்னன்னமோ விக்குது. எட்டாவதுக்கு மேல பொண்ணுங்க படிக்கிறதுக்குப் போவாது. இப்ப எல்லாரும் படிக்க ஆரம்பிச்சிட்டாங்க. பள்ளிக்கூடத்துக்கு ஜே, ஜேன்னு பசங்க போறதைப் பார்க்கிறதுக்கே சந்தோஷமாயிருக்கு. இத்தனை பசங்களும் மெட்ராஸ் போய்தான் படிக்கணுமா? தஞ்சாவூருக்கும் திருச்சிக்கும் அலையணுமா? நம்மூருல ஒரு பெரும்படிப்பு இருக்கக் கூடாதா? ஏன், என்ஜினியரிங் காலேஜ் ஆரம்பிச்சா என்ன? இங்க என்ஜினியரிங் படிச்சு, எங்கோ போய் வேலை செய்யறதுக்கு இந்த ஊர்ல டாக்டருக்குப் படிச்சு, இந்த சுத்து, பத்து கிராமங்களுக்குப் போய் வேலை செய்யிற பசங்க ஒரு பத்து, பதினைஞ்சு பேர் கிடைச்சா போதும். மெடிக்கல் காலேஜ் வந்துடுச்சுன்னா, டிஸ்பென்சரி இங்க வந்துடும். சின்ன, சின்ன நர்சிங் ஹோம் இங்க வந்துடும். கவர்மெண்ட் ஆஸ்பத்திரியை நம்பாத இருபத்து நாலு மணி நேரமும் திறந்திருக்கிற நல்ல ஆஸ்பத்திரி இங்க வந்துடும். குத்துயிரும், குலையுயிருமா மெட்ராசுக்கு டிரெயின்ல தூக்கிக்கிட்டுப் போற வேதனையெல்லாம் நடக்காது. எனக்கு கும்பகோணத்துல மெடிக்கல் காலேஜ் கட்டணும்ன்னு ரொம்ப ஆசைடா.''

''கடவுளே'' - வாசுதேவமூர்த்தி கைகூப்பினான். அதற்குப் பிறகு அவர்கள் பேசவில்லை. மௌனமாய் வீடு திரும்பினார்கள். எல்லார் மனதுக்குள்ளும் குடந்தை மருத்துவக் கல்லூரி என்னும் பெயர்ப் பலகை மின்னிக் கொண்டேயிருந்தது.

சித்தப்பா சொன்னது போல் குடந்தை விரிவாகிக் கொண்டிருந்தது. சென்னை நகரமெல்லாம் விம்மி, வீங்கி சாணகல இடத்துக்கு லட்ச ரூபாய் என்று அலட்டுகிற நேரத்தில் சென்னைக்கு அருகே உள்ள குடந்தை போன்ற சிறுநகரங்கள் பெரிதாகத் துவங்கின. சென்னை நகரத்தின் அத்தனை ஆட்டம், பாட்டமும் குடந்தை மக்களுக்கு வேண்டியிருந்தது. பாய் போட்டு உட்காருகிற புடவைக் கடைகள் மெல்லக் குறைந்து ''வாங்க, உட்கார்ந்து வெத்திலை போடுங்க'' என்று சீவலும், பாக்கும், வெற்றிலையும் நகர்த்திக் காட்டுகிற நகைக்கடைகள் குறைந்து, பத்து



நிமிடத்தில் ஜவுளி பில் எடுத்துப் போகின்ற நியான் லாம்ப்பும், மெத்தென்ற மூக்காலியும் கொண்ட கடைகள் வந்துவிட்டன. ஒரு மூக்குத்தி வாங்க மூன்று மணி நேரம் எடுத்துக்கொள்கின்ற ஜனங்களின் தன்மை மாறி, பத்து சவரன் நகையை இருபது நிமிடத்தில் தேர்ந்தெடுத்து காசு கொடுத்துவிட்டுப் போய்கொண்டே இருந்தார்கள். தீபாவளிக்கு ஒரே பெண்மணி, ஒரே நேரத்தில் ஆறு புடவைகள் எடுத்தாள். தீபாவளிக்கு முதல் நாள் வந்து ஏழாவது புடவை எடுத்தாள். ஜனங்களிடம் காசு வேகமாய்ப் புழங்கத் துவங்கியது. நிலத்தின் விலையும், கட்டடத்தின் விலையும் தாறுமாறாய் ஏறின. வாசுதேவமூர்த்தி மெல்ல, மெல்ல சொத்துக்களை விற்கத் தொடங்கினான்.

''மொத்த தொகையும் மேசையில கொண்டாந்து வைச்சீங்கன்னா, ஒரு வாரத்துல உங்க பேருக்கு மாத்திக் கொடுத்துடறேன். இல்லையா, இந்த வியாபாரம் வேற ஆள்கிட்ட பேச ஆரம்பிச்சிடுவேன். வெறுமனே அட்வான்ஸ் கொடுத்துட்டுப் போயிட்டீங்கன்னாக்க, மடக்கிப் போட்டுட்டோம்ன்னு நினைச்சிக்காதீங்க. இந்த அட்வான்ஸ் மேல எனக்கு எந்த மரியாதையும் இல்லை. எப்ப வேணா இந்த அட்வான்ஸை உங்க வீட்டு வாசலில் கொண்டு வந்து வைக்க முடியும்.'' - கறாராக வியாபாரம் பேசினான்.

''அறுபது ரூபாய்க்கு கேட்கறாங்க. நான் அறுபத்திரெண்டு ரூபாய் சொல்றேன். அறுபத்தி ஒண்ணுன்னா கூட படிஞ்சுடுவேன்.'' என்று தன் வியாபாரத்தை வெளியே ரகசியமாய்த் தட்டிவிட்டான். அறுபத்து ஒன்று என்று ஆட்கள் வந்தார்கள். அறுபத்து ஒன்று என்று வந்தவர்களைப் பார்த்து அறுபத்து இரண்டு என்று வேறு ஆட்கள் வந்தார்கள். இருக்கிற விலை ஒன்றும், எழுதுகிற விலை ஒன்றுமாய் எல்லா இடத்திலும் இருப்பது போல், இங்கும் இருந்தது. எழுதிய விலையை, சித்தப்பாவிற்குக் கடன் கொடுத்ததாக கணக்கு காட்டிவிட்டு, கறுப்பு வெளுப்பு இரண்டையும் கொண்டு போய் நீட்டினான்.

சித்தப்பாவின் கட்சி கிளை அலுவலகம் குடந்தையில் விமரிசையாய் திறக்கப்பட்டது

ஒரு எதிர்கட்சி. அலுவலகம் திறப்பது எளிதல்ல. ஆளுங்கட்சி விமர்சிகை கண்டு ஆத்திரப்பட்டது. லோக்கல் ஆளுங்கட்சி ஆட்கள் பல் கடித்தார்கள்.

சின்னச் சின்ன அராஜகங்கள் செய்தார்கள். வெறுப் பேற்றினார்கள். ஆளும் கட்சி என்பதால் ஒவ்வொரு கூட்டத்திற்கும் முட்டுக்கட்டை போட்டார்கள். தாமதப் படுத்தினார்கள்.

''அப்படித்தான் செய்வார்கள். நம்மளவுக்கு நாகரிகம் அவங்களுக்கு கிடையாது. நாம ஆளும் கட்சியா இருந்த போது, என்னிக்காவது எந்த கூட்டத்தையாவது நாம தடுத் திருக்கோமா? சட்டத்திற்குப் புறம்பா நடந்திருக்கோமா? நான் உங்களுக்கெல்லாம் கோமணம் கொடுக்கிறேனாம்... இவனுங்க மெட்ராசுக்கு வந்த போது அது கூட இல்லாத, வெறும் கிழிசல் வேட்டியோட வந்தாங்கங்கிறது எனக்குத் தெரியும். அந்த கிழிசல் வேட்டியும் பக்கத்து வீட்டுக்காரன்கிட்ட திருடிக்கிட்டு வந்ததுன்னு எனக்குத் தெரியும். மெட்ராசுக்குப் பஞ்சம் பொழைக்க வந்த நீ, பெட்ரோமாக்ஸ் தூக்கிக்கிட்டு எச்சில் சாப்பாடு சாப்பிட வந்த நீ, என்னைப் பத்தி பேசறீயா? எனக்கு பங்க் கடை வேணும்ன்னு நீதான் வந்து நின்னு அழுதே... என் எதிரே உட்கார வைச்சு உன்னை விண்ணப்பம் பூர்த்தி செய்யச் சொன்னேன். ஊருல உனக்கு என்ன வேலைன்னு கேட்டேன். ஆடு மேய்க்கிற வேலை, மீன் பிடிக்கிற வேலைன்னு சொன்னே. உன் கூட வந்தவன், இல்லைங்க, இவருக்கு ஆடும் கிடையாது. இவரை மீன் பிடிக்கவும் விட மாட்டாங்க. இவருக்கு வேலை, பன்னி மேய்க்கிற வேலை, அப்படின்னு சொன்னான். அடடே, உண்மையை எழுதுய்யா, பங்க் கடை நிச்சயம் கிடைக்கும்னேன். உன் கைப்பட பன்னி மேய்க்கிற வேலை செய்து கொண்டிருந் தேன்னு நீ எழுதிய விண்ணப்பம் இன்றும் என்னிடம் இருக்கிறது. நாளைக்குப் பத்திரிகையில வரும், பார்த்துக்க. கடவுளே, ஒரு புள்ளை எட்டாவது படிச்சிட்டு பன்னி மேய்க்கிறானே, பன்னி மேய்ச்ச புள்ளை எட்டாவது படிச்சிருக்கேன்னு பரிதாபப்பட்டு அன்னிக்கு உனக்கு கடை போட்டுக் கொடுத்தேன். இன்னிக்கு என்னைப் பார்த்து கல்லை விட்டு அடிக்கிற. இல்லை. மேல ஒருத்தன் இருக்கான்யா. அவன் உன்னை கவனிச்சுக்குவான்.''



'பன்றி மேய்த்த பரந்தாமா' என்று சுவர் முழுக்க வாசகங்கள், எல்லா நகரங்களிலும் எழுதப்பட்டன. ரித்தப்பாவின் எதிர்ப்க்க அணி சூடாகியது.

''அவன் என்ன ராஜ பரம்பரையா? அவனை ஏண்டா பேச விடறீங்க? நாம என்ன புத்தரா, ஏசுவா, மகாத்மா ாந்தியா? இது புரட்சிப் படை. பழிக்குப் பழி, அடிக்கு அடி, ரத்தத்திற்கு ரத்தம், பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண், கைக்குக் கை, காலுக்குக் கால் என்று பெரிய பட்டியல் போட்டு சொன்னார்கள். குடந்தையில் பல இடங்களில் அடிதடிகள் நிகழ்ந்தன. யார் அடிக்கிறார்கள், எதற்கு அடிக்கிறார்கள் என்று தெரியாமல் தாக்குதல் நடந்தது. ள்ளிக்கூடம் விட்டு குழந்தைகள் வருகின்ற நேரம் ார்த்து, கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன. வாகனங்கள் த்திரையாக்கப்பட்டன. குடந்தை கிளைச் செயலகத்தில் னிக் கூட்டம் கூட்டப்பட்டது.

''இனிமேல் நான் இந்தக் கூட்டதுக்கு அரிவாளோடு ான் வருவேன்.'' - ஒரு மூத்த உறுப்பினர் முதுகிலிருந்து ஒரு பெரிய அரிவாளை எடுத்து மேஜையின் மீது ஓங்கி அடித்தார். சபை சலசலத்தது. சித்தப்பா அமைதியாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''ஒக்காளி, எங்க வீட்டுக்குள்ளே புகுந்து எங்க அம்மா லை முடியைப் பிடிச்சி இழுத்துக்கிட்டுப் போய், தெருவுல அடிச்சாங்க. அவ தாலியை அறுத்தாங்க. எட்டி உதைச் ாங்க. அவனை வெட்டாத நான் இங்கே நிக்கிறேனே... ன்னைக் கட்டிப் போட்டு வைச்சிருக்கீங்களே... உங்க ஆத்தாளை அடிச்சா, உங்களால சும்மா இருக்க முடியுமா? ங்க கையைக் கட்டிட்டு மௌனமா இருப்பீங்களா? சொல்லுங்கய்யா, நான் என்ன பண்ணனும்ன்னு சொல்லுங் கய்யா.'' - அலறலும், புலம்பலுமாய் அந்த மூத்த உறுப்பி ர் பேசினார்.

''வெட்டக் கூடாது. அடிக்கக் கூடாது. கைக்கு கை, பல்லுக்குப் பல், கன்னத்துக்குக் கன்னம், கண்ணுக்குக் கண் ப்பு. நாம் அகிம்சைவாதிகள். உங்க அம்மாவை அடிச்சா, அது எங்க அம்மாவை அடிச்சா மாதிரி. உங்க வீட்டுப் பொண்ணுங்களை இழிவு படுத்தினா, அது எங்க் வீட்டுப்

பெண்களை இழிவுப்படுத்தினா மாதிரி. நீயும், நானும் ஒரே குடும்பம். உங்க தாய்க்கு நேர்ந்த அவமானத்தை நான் மறக்க மாட்டேன். நீ அரிவாளெடுத்துக்கிட்டு வீட்டுக்குப் போ. மிச்சத்தை நான் பார்த்துக்கறேன். இந்த ஊருல சட்டம்ன்னு ஒண்ணு இருக்கு. நம்மகிட்ட திறமையான வக்கீல்கள் இருக்காங்க. கோர்ட்டு, கேசுன்னு போறதுக்கு மூனு வருஷம் ஆகும். அவனை உள்ள போகாத வைக்காமல், நான் உட்காரமாட்டேன். நம்மளுது கொஞ்சம் சுத்து வழி. ஆனால், அதுதான் சரியான வழி.

எதிர்கட்சி ஆட்கள் நூற்று நாற்பத்தியொன்பது பேர் மீது கொலை செய்ய முயன்றதாக வழக்குத் தொடுக்கப் பட்டது. ஸ்டேட்டுல உங்க'ஆட்சி. செண்டர்ல எங்க ஆட்சி. இங்குள்ள போலீஸ்காரர்கள் ஒத்துழைக்க மறுத்தால், நாம செண்டர்லேயிருந்து, போலீஸ் கொண்டாருவோம். சி.பி.ஐ. விசாரணை நடத்துவோம்.''

சித்தப்பா டெல்லிக்கும், சென்னைக்கும் பறந்தார். அவருடைய வக்கீல்கள் குடும்பம் குடும்பமாக, கூட்டம் கூட்டமாக சகல திக்கிலும் பறந்தார்கள்.

சித்தப்பா சொன்னது போல, கையிலிருந்த பனி ரெண்டு சொத்துக்களும் விற்கப்பட்டு, காசாக்கப்பட்டு பெரிய ஷோலாப்பூர் பெட்ஷிட்டில் மூட்டை, மூட்டையாகக் கட்டப்பட்டு, மிக பத்திரமாய் ஒரு வாடகை வீட்டில் வைக்கப்பட்டிருந்தது. குடந்தையிலுள்ள சித்தப்பாவின் எதிரிகள் சற்று மிரண்டு அடங்கியபோது, அவருடைய கட்சியினர் தங்கள் வலுவைக் காட்டினார்கள். மெல்லிய அராஜகத்தில் இறங்கி, கொடிக்கம்பம் அறுத்தார்கள். சிலையை உடைத்தார்கள். எதிர்கட்சி மந்திரி வந்தபோது, கறுப்புக் கொடி காட்டினார்கள். கறுப்புக் குடையை விரித்துக் கேலி செய்தார்கள். மாடுகளைக் கூட்டத்துக்கு நடுவே விரட்டினார்கள். அவர் திறந்து வைத்த கற்பலகையை இரவோடு இரவாக இடித்துப் பெயர்த்து, எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். சித்தப்பாவை மத்திய சர்க்கார் கண்மூடித்தனமாக ஆதரித்தது.

'குடந்தை என்பது வேறு, கும்பகோணம் என்பது வேறா' - மந்திரிகள் விசாரித்துத் தெரிந்துகொண்டார்கள்.



இரண்டு வருடங்கள் பெரிய ரகளையாக, தினம் ஒரு நாடகமாக நகர்ந்தது.

''இத்தோட சீனிவாசன் சொன்ன இரண்டரை வருஷம் முடிஞ்சி போச்சு. நான் அம்மாவைக் கூட்டிக்கிட்டு சீனிவாசனைப் பார்க்கப் போனேன். விழுந்து ராஜராஜேஸ்வரியைக் கும்பிட்டேன். வேட்டி மேல் துண்டுல ஐநூறு ருபாய் பணம் வைச்சேன். எடுத்து மடியில வைச்சிக்கிட்டு, சரி, சந்தோஷம். மேற்கொண்டு ஆவறதைப் பார்க்கலாம், அப்படின்னாரு. ஒரு மாதத்தின் நல்ல நாட்கள்ன்னு ஆறு மாசத்துக்கு ஒரு காலண்டர்ல நாள் குறிச்சிக் கொடுத்திருக்காரு. உங்களுக்கு தினம் வெண்ணெய் கொடுக்கச் சொல்லியிருக்காரு. தேனுபுரீஸ்வரர் கோயில்ல கோவிந்த தீட்சிதரும், அவங்க மனைவியின் சிலையும், அம்மன் சந்நதியில் இருக்குதாம். அதுக்கு மல்லிச் சரம் போட்டுட்டு வர சொல்லியிருக்காரு. நீங்கதான் போடணுமாம். நீங்க இல்லாதபோது நான் போய் போடலாமாம். நானும் போக வசதியில்லேன்னா, நம்ம வீட்டுலேயிருந்து யாராவது போய் போடணுமாம். அந்த கோவிந்த தீட்சிதர் சிலையோட விரலை ஒரு முறை மெல்ல அழுத்திப் பிடிச்சி, மெல்ல கண்ணுல ஒத்திக்கச் சொல்றாரு.''

''என்ன, எனக்கு ஒண்ணும் புரியலையே..?'' - வாசுதேவமூர்த்தி கோமளவல்லியைப் பார்த்து வியப்போடு கேட்டான்.

''நான் அப்படியே கிளம்பி கோவிந்த தீட்சிதர் சிலையைப் பார்க்கிறதுக்குப் போனேன். அந்த விரலைத் தொட்டா, மனுசாள் விரலைத் தொடறா மாதிரியே, ஒரு மெத்து மெத்துன்னு இருக்கு.''

''சரி, எதுக்கு தொடணும்?''

''அப்படி தொட்டு வந்தா, கோவிந்த தீட்சிதர் போலவே நல்ல ஞானவானா, புத்திசாலியா, நிர்வாகத் திறமை இருக்கிறவனா ஒரு புள்ளை பிறப்பானாம்.''

''எனக்கே இதெல்லாம் இல்லையே... எம்புள்ளைக்கு இருந்தா நல்லாயிருக்குமா? எம்புள்ளை என்னைப் போலத்தானே இருக்கணும்...'' - வாசுதேவமூர்த்தி வம்புக்கு இழுத்தான்

''ஏன்? உங்க புள்ளை உங்களை விட கெட்டிக்காரனா இருக்கக் கூடாதா? உங்களுக்கு இல்லேன்னு யார் சொன்னாங்க? நேத்துகூட சித்தப்பா உங்களைப் பத்தி சாப்பிடும்போது, எங்க வீட்டு மனுசாள்கிட்ட பேசியிருக்காரு. அவன் ஒருத்தன் இல்லேன்னா, என்னால எதுவும் சரியா செய்ய முடியாது. இந்த கும்பகோணத்துல அரை மணி நேரம் என்னால இருக்க முடியாது. அப்படின்னாரு. எலெக்ஷன் சீக்கிரமே வந்துடும், போலிருக்கே...'' கோமளவல்லி இன்னொரு கேள்வி கேட்டாள்.

''ஆமாம். வழக்கத்தைவிட ஆறு மாசம் முன்னாடியே வந்துடும்ன்னு நினைக்கிறேன். ஆளும் கட்சியே கலைச்சிட்டு கோதாவுல இறங்கிடுவாங்க.''

''ஏன் அப்படி?''

''இன்னும் கூட ஆறு மாசம் இருந்தா இன்னும் கூட கெட்டப் பேர்தான் ஆவும். அதனால முன்னாடியே கலைச்சிடலாம்ன்னு தீர்மானம் பண்ணிட்டாங்க.''

''சித்தப்பா ஜெயிச்சிடுவாங்களா..?''

''கும்பகோணத்துல ஆளும் கட்சியை ரெண்டா உடைச்சிட்டாரு. இந்த விரிசல் தமிழ்நாடு முழுவதும் பரவும். பெரிசாவும். அவங்க ரெண்டாயிட்டா, நாம ஜெயிக்கிறது நிச்சயம்.''

''எலெக்ஷனுக்குக் காசு வேணாம்?''

''நிறைய வேணும்.''

''சித்தப்பாக்கிட்ட இருக்கா?''

''பன்னெண்டு சொத்து வித்தும், இந்த நேரம் எங்கிட்டயும் காசு கிடையாது. சித்தப்பாக்கிட்டயும் காசு கிடையாது.''

''என்ன பண்ணப் போறீங்க?''

''தெரியலை. எங்கேயோ வடக்கே, ஒரு சேட்டுக்கிட்ட போய் கண்ட இடத்துல, கையெழுத்து போட்டு அம்பது லட்ச ரூபாய் சித்தப்பா வாங்கிக்கிட்டு வந்திருக்காரு. அம்பது லட்ச ரூபாய் காசு ரெண்டு நாள் செலவுக்குத்தான் ஆகும். மேற்கொண்டு என்னப் பண்ணப் போறாருன்னு தெரியலை.''



''ஆளும் கட்சிக்காரன் கிட்ட காசு இருக்கா?''

''ஏகமாய் இருக்கு. அதுதான் அவங்களுக்குத் தொந்தரவு. ஆனால் அதே சமயம், காசால அடிச்சி ஓட்டு வாங்குறதுக்கு அவங்களுக்குத் தெரியும். அப்படி செய்திட்டா, நமக்குக் கொஞ்சம் ஆட்டம் காணத்தான் காணும். இந்த வருஷமும் தேர்தலில் ஜெயிச்சி ஆட்சி பிடிக்கலேன்னா, நம்ம கட்சிக்குள்ள விரிசல் வந்துடும். தொண்டர்கள் அலுத்துப் போயிடுவாங்க.''

''என்னப் பண்ணப் போறீங்க?''

''தெரியலை... சித்தப்பா எதுனா திட்டம் வைச்சிருப்பாரு.''

''இன்னும் ஒரு வருஷம் நாம தள்ளிப் போட்டுடலாமா?''

''என்ன சொல்றே?'' - கோமளவல்லியைப் பார்த்து வாசுதேவமூர்த்தி கேட்டான்.

''இந்த வருஷமும் புள்ளை பெத்துக்க வேணாம். எலெக்ஷன் முடிஞ்சி பார்த்துக்கலாம்.''

''சும்மா இரு, கோமளவல்லி. ரெண்டரை வருஷம் நல்ல குழந்தை பிறக்கணும்ன்னு தபஸ் பண்ணா

> ''
>
> நான் வயித்துல குழந்தை வாங்கி, கர்ப்பமா இருக்கிற போது, நீங்க என் பக்கத்துலேயே இருக்கணும்ன்னு ஆசைப்படுவேன். எனக்கு நீங்க ஓடியாடி உதவி செய்யணும்ன்னு விருப்பப் படுவேன். அதுல ஒரு சந்தோஷப் படுவேன்.
>
> ''

மாதிரி தள்ளிப் போட்டுட்டேன். ஊர், உலகத்துல யார் யாரோ என்னன்னமோ பேசும்படியா ஆயிப்போச்சு. அத்தனையும் தாங்கிக்கிட்டேன். இதுக்கு மேலயும் தாங்கணும்ன்னு அவசியம் இல்லை.''

''நான் சொல்றதை நல்லாப் புரிஞ்சிக்குங்க...'' - கோமளவல்லி அவனை எதிரே உட்கார வைத்து முகம் தடவினாள். ''நான் வயித்துல குழந்தை வாங்கி, கர்ப்பமா இருக்கிற போது, நீங்க் என் பக்கத்துலேயே இருக்கணும்ன்னு ஆசைப்படுவேன். எனக்கு நீங்க ஓடியாடி உதவி செய்யணும்ன்னு விருப்பப்படுவேன். அதுல ஒரு சந்தோஷப்படுவேன். அப்படியில்லாத நான் எங்க வீட்டுக்குப் போய், சுருண்டு படுத்து தனியா தூங்கணும். நீங்க எங்கேயோ எலெக்ஷன் வேலை செய்துகிட்டு இருக்கணும். அப்படின்றா மாதிரி இருந்தா எனக்கு மனசு தாங்காது. அந்த சோர்வு எனக்கு சரியா வராது. ரொம்ப நிச்சயமா அது குழந்தையைப் பாதிக்கும். முதன்முதல் ஒரு குழந்தை. இத்தனை மனசு பாதிப்போட நமக்குத் தேவையா? அதனாலதான் சொல்றேன், எலெக்ஷன் வரைக்கும் இப்படியே தொடர்ந்து இருப்போம்.''

''இல்லை, அப்படி தொடர்ந்து இருக்க முடியாது. இருக்க சொல்றதுக்கு எனக்கு எந்த ரைட்டும் இல்லை.''

''நம்மகிட்ட காசும் குறைவா இருக்குல்லே...''

''என்ன சொல்றே? பிச்சைக்காரன் ஆயிட்டேன்னு சொல்றியா? அடியே, உம் பிள்ளைப் பேறுக்கும், உனக்குப் பிள்ளை பிறந்தா அதுக்குப் போடறதுக்கான தங்க நகைக்கும் எனக்கு காசு இருக்குடி... சாப்பாட்டுக்கு கஷ்டம் வந்துருச்சின்னா, நான் சொன்னேன்? நம்மளுது அரச குடும்பம். சொத்து பத்து கொஞ்சம் குறைஞ்சிருக்கு. குறைஞ்சிருக்குன்னு சொல்ல மாட்டேன். வேறுவிதமா மாறியிருக்கு. லட்சம், லட்சமா ஆட்கள் நம்ம பக்கம் நிக்கிறாங்க. இதைவிட பெரிய சொத்து வேற எதுவும் இல்லை. நீ கண்டதை போட்டு மனசை உழப்பிக்காத. உன் வேலையை நீ செய். சித்தப்பா தன் வேலையைத் தான் பார்த்துக்குவாரு.''

''அவரை அப்படி தனியா விடறது நல்லதா? இத்தனை நாள் கூட இருந்துட்டு எலெக்ஷன்கிற போது



நீங்க இல்லாத போனா, நல்லாயிருக்குமா?'' - கோமளவல்லியின் கேள்விக்கு வாசுதேவமூர்த்தியால் பதில் சொல்ல முடியவில்லை.

''வேற உடுத்திக்கோ. சீனிவாசன்கிட்ட போயிட்டு வரலாம்.''

இரண்டு பேரும் காரெடுத்துக்கொண்டு சீனிவாசனிடம் போனார்கள். சீனிவாசன் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தது போல, வெறுமே சிலேட்டுப் பலகையில் கணக்குப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

''வாங்க, வ்ாங்க... என்ன இது அதிசயம்?'' என்று வரவேற்றான். அவர்கள் விவரம் சொன்னார்கள்.

''மூணு வருஷம் உங்க சித்தப்பாவுக்கு மோசமான நேரம்ன்னு சொன்னேனே... இந்த மூணாவது வருஷம் ரொம்ப மோசமான நேரம். உங்க சித்தப்பாவைச் சுத்தி அடிதடி நேரலாம். உங்க சித்தப்பா மேல வெட்டு விழலாம். ஆனால், உயிருக்கு ஆபத்தில்லை. ரொம்பப் பெரிய கலாட்டா, மரண பயம் தருகின்ற சம்பவங்கள் நடக்கும். நீ பக்கத்துல இருக்கிறது நல்லதில்லை. உன்னால அதைப் பார்த்துக்கிட்டு சும்மா இருக்க முடியாது. நீ உள்ளுக்குள்ளே பாய்ஞ்சுடுவே. நீ பாய்ஞ்சுட்டே, உன்னைப் பெரிசு பண்ணி, உன்னை காவு வாங்கிடுவாங்க. அதனால இந்தக் கண்றாவியெல்லாம் பார்க்காத நீ உன் பொண்டாட்டியோட மனசடக்கி அமைதியா இரு. காசு வைச்சிக்கிறதுக்காக, உன்னை உன் சித்தப்பா உபயோகப்படுத்தினாரு. இப்ப காசுமில்லை. ஏன் ஆடறே? உன்னை நம்பியா அவர் அரசியலில் இறங்கினாரு? நீ இருக்கிறது தெரிஞ்சா அவர் கட்சி ஆரம்பிச்சாரு? அதுக்கெல்லாம் ஆள் இருக்கு, வாசுதேவமூர்த்தி. நீ அலட்டிக்காதே. இது பத்தி யாருக்கும் தெரியாத, போன வாரம் உங்க சித்தப்பாக்கிட்ட பேசிட்டேன். வாசுதேவமூர்த்தியைக் கழட்டிவிடுங்க, அவன் குடித்தனம் பண்ணட்டும்ன்னு சொல்லிட்டேன். பளிச்சென்று அவருக்குப் புரிஞ்சு போச்சு. கோமளவல்லி முழுகாம இருக்காளாமே... நீதான் ஏதோ சொன்னியாமேன்னு என்னைப் பார்த்துக் கேட்கறாரு. என்ன ஞாபக சக்தி? எவ்வளவு அக்கறை உங்க பேருல? நான் கூப்பிட

மாட்டேன். வாசுதேவமூர்த்தி இல்லாதயே நான் வேலை செய்ய முடியும், அப்படின்னுட்டாரு.''

''நான் இப்படிக் கேட்கறேங்க, அய்யா. இதுக்குப் பதில் சொல்லுங்க'' - கோமளவல்லி உள்ளே புகுந்தாள். ''இந்த ஒரு வருஷத்துக்குப் பெரிய அய்யாவோட எங்க வீட்டுக்காரர் இழைஞ்சிருக்க வேணாம்ன்னு சொல்றீங்களா..?''

''அப்படியும் சொல்லலாம், அம்மா. உன் புருஷன் நிதானமானவன். நிம்மதியானவன். தலைவர் பரபரப்பா மாறப் போறாரு. படபடப்பா ஆகப் போறாரு. கோப தாபங்கள் அவரைச் சுத்தி வரப் போகுது. அந்த இடத்துல இவர் போய் நின்னா, இவருக்கும் அந்த புத்தி தொத்திக்கும். என்னாத்துக்கு? இத்தனை வயசு வரைக்கும், வீணை வாசிக்கிறா போலிருந்துட்டு, இப்ப திடீர்ன்னு வாள் எடுப்பானேன்? வேணாம். தள்ளியே இருங்க.''

''சீனிவாசா, முட்டாள்தனமா பேசறே. என் சித்தப்பாவைவிட்டுத் தள்ளியிருக்கிறது, அதுவும் ஒரு முக்கியமான நேரத்துல தள்ளியிருக்கிறது நல்லதா? நன்றிகெட்டத்தனம் இல்லையா?''

''இல்லை, வாசு. உனக்கு ஒண்ணுன்னா அவர் தவிச்சுப் போயிடுவாரு. அவர் சொந்தப் புள்ளையைவிட, உன்னை உசத்தியா வைச்சிக்கிட்டிருக்காரு. அவர் மெட்ராசுல இருக்கிறதைவிட, கும்பகோணத்துலதான் சந்தோஷமா இருக்காரு. அவரைச் சுத்தியிருக்கிற கோபதாபங்களில் நீ மாட்டுனா, அவர் உன்னைப் பத்தித்தான் கவலைப்படுவாரே தவிர, தன்னைப் பத்திக் கவலைப்படமாட்டார். அப்படி ஒரு நிலைமை அவருக்கு நல்லதில்லை. இந்த நேரம் எது செய்தாலும் அவர் தன்னைப் பத்தி யோசிக்க வேண்டிய நேரம். மத்தவங்களைப் பத்தி யோசிக்க வேண்டிய நேரம் இல்லை. அதனாலதான் சொல்றேன். அவருக்கு நல்லது பண்ணனும்ன்னா, தள்ளிப் போ.''

''இது கேவலமா படும், சீனிவாசா...''

''அப்புறம் உன் இஷ்டம். உன் தலையெழுத்து.''



''என்ன நடக்கும்ன்னு சொல்றே? அதைச் சொல்லு, பார்க்கலாம்'' - வாசுதேவமூர்த்தி, சீனிவாசனை சவாலுக்கு அழைப்பது போல் சொன்னான்.

''உங்க சித்தப்பா உன்னைத் தூக்கி ஓரமா கடாசுவாரு. இது ரெண்டு நாளில் நடக்கும்.''

''நீ போக மாட்டேன்னு சொல்லிட்டா...''

''நீ போகும்படியா ஆகும்.''

மறுநாள் காலையிலேயே சீனிவாசன் சொன்னது போல் வாழ்க்கை மாறிற்று. கோமளவல்லியின் தகப்பனாருக்கும், அவருடைய மாப்பிள்ளைக்கும் சண்டை வந்து விட்டது. மகன் வேறு ஒரு நிலை எடுத்துக் கொள்ள, மகனோடு தகராறு முற்றியது. சாராய ஆலை யூனியன் இதுதான் சாக்கு என்று கொடி உயர்த்த, கோமளவல்லியின் அப்பா அவசரமாக தலைவரை அணுகினார். உதவி கேட்டார்.

''என்ன பண்ணனும்ன்னு சொல்றீங்க?''

''இறங்கி என் மாப்பிள்ளையோட கையை, காலை உடைங்க.''

''அதெல்லாம் சரியா வராது. நான் உடைச்சிடுவேன். நாலு வருஷம் பொறுத்து உன் பொண்ணு அழற போது, நான் ஒண்ணும் சொல்லலைம்மா, அவன்தான் உடைச்சான்னு என் மேல பழி போட்டுடுவே. மாப்பிள்ளையை அடிச்சி நிமிர்த்தறதெல்லாம் ஒரு குடும்பத்துல சரியா வராது. மாப்பிள்ளைக்கும், புள்ளைக்கும் தகராறு. உனக்கும், மாப்பிள்ளைக்கும் தகராறு. இது தீர்கிற வரைக்கும், வேற யாரும் உள்ள புகுந்து ரகளை பண்ணாம இருக்கிறதுக்கு, நிர்வாகத்தை வேற இடத்துல கொடு...''

''யார்கிட்ட கொடுக்கிறது?''

''வாசுதேவமூர்த்திகிட்ட கொடு... அவன் நின்னு பார்த்து செய்வான். அவன் யூனியனை அடக்குவான். அவங்களுக்கு என்ன பேசணுமோ, என்ன செய்யணுமோ, அதை செய்திட்டு நல்ல வழிக்குக் கொண்டாருவான். நீங்க உங்க சண்டையைப் போட்டு முடிச்சு, உங்க பர்சண்டேஜ் பாகப்பிரிவினை சரியா வந்த பிறகு, அவனை எங்கிட்ட

விட்டுடுங்க. இது டெம்பரரி அட்ஜெஸ்ட்மெண்டுதான். வாசுதேவமூர்த்தி எனக்கு வேணும். உங்களுக்கு ஒரு வருஷத்துக்கு அவனை கடன் கொடுக்கிறேன்.''

சென்னையிலிருந்து போன் வந்தது. ''பெட்டி, படுக்கை எடுத்துக்கிட்டு மாமனார் வீட்டுக்குப் போ. ஏன், என்னன்னு கேட்காத. உன்னை நேர பார்க்கிறபோது சொல்றேன்.'' - சித்தப்பா போன் வைத்துவிட்டார்.

வாசுதேவமூர்த்தி மனைவியோடு தன்னுடைய முக்கியமான விஷயங்களை வேனில் ஏற்றிக்கொண்டு, குடந்தையிலிருந்து நூறு கிலோ மீட்டர் தொலைவிலிருந்த ஊருக்குப் பயணப்பட்டான். சேத்தியாத்தோப்பில் நுழைந்து, அந்த சர்க்கரை ஆலையையும், சாராய ஆலையையும் கலந்த அந்த தொழிற்சாலையை இரவு நேரம் ஜகஜோதியாய் மின்னிக் கொண்டிருந்தது.

வாசுதேவமூர்த்தி ஜெனரல் மானேஜர் (தற்காலிகம்) என்கிற பதவியோடு கம்பெனிக்குள் நல்ல நாள் பார்த்து நுழைந்தான். கார் விட்டு இறங்கியதுமே, வாசலில் உள்ள பிள்ளையாரை வணங்கினான். பிறகு, நடு ஹாலில் வரவேற்ற மாமனாருக்கு நன்றி சொன்னான். அங்கிருந்து கிளம்பி, தொழிற்சாலையில் ஒரு மூலையில் உள்ள தொழிற்சங்க அலுவலகத்துக்கு நடந்து போனான். கதவு தட்டி உள்ளே போய் உட்கார்ந்து கொண்டான்.

''யாரேனும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இருந்தால், வரவழைக்கலாம். நான் அவர்களை அறிமுகப்படுத்திக் கொள்ள ஆவலாயிருக்கிறேன்'' என்று சொன்னான்.

தொழிற்சங்கத் தலைவர்கள் சற்று அதிர்ந்து போனார்கள். ''இதெல்லாம் கமால் வேலை, கண்ணா. இது மாதிரி நிறைய பேரைப் பார்த்திருக்கோம். வா, போய் பார்த்துட்டு வரலாம்'' - பத்து பேர் கிளம்பி வந்து நின்று, விறைப்பாய், முறைப்பாய் அவனைப் பார்த்தார்கள். அந்த பத்து பேரில் மூன்று, நான்கு உறுப்பினர்கள் பேச ஆவலாய் இருப்பதைப் புரிந்துகொண்டான். அவர்கள் லேசாய் முறைத்துப் பேசினபோது, அதை முக்கியமாய்க் கருதாமல் சாதாரணமாக எடுத்துக்கொண்டான். தொழிற்சாலையை சுற்றி வந்தான். என்ஜினியர்களிடம் விவரம் கேட்டான்.



அறைக்குப் போய் புள்ளி விவரங்களை அலசினான். அவன் கல்லூரியில் படித்த அவன் வகுப்பல்லாத வேறு ஓர் இளைஞனை அங்கு சந்திக்க நேர்ந்தது.

''அடிப்படையா, என்ன குறை இருக்கு, கம்பெனியில?''

''நிறைய இருக்குங்க, சார்.''

''சார்ன்னுல்லாம் கூப்பிட வேணாம். வாசுன்னே கூப்பிடு. அப்படித்தானே காலேஜ்ல கூப்பிட்டுக்கிட்டிருந்தே...''

''அதெப்படி, இப்ப கூப்பிட முடியுமா?''

''பரவாயில்லை. நான் உன்னை சாமிநாதன்னே கூப்பிடறேன். நீ என்னை வாசுன்னே கூப்பிடு. என்ன குறை?''

''காண்டீன்லேர்ந்து பல்வேறு விஷயங்கள் குறை.''

''அப்படியா, என்ன?''

''இது ஒரு காட்டு இடம். இங்க சாப்பாடு சரியா கிடைக்காது. காண்டீன் சாப்பாடும் சுமாரா இருந்தா, ஒரு மாதிரி வெறுத்துப் போகுது. காண்டீனைக் காண்ட்ராக்ட் விட்டுட்டாங்க. காண்ட்ராக்டர் எவ்வளவு மட்டமா சோறு போட்டு லாபம் பார்க்க முடியுமோ, பார்க்கிறான். அங்கங்கே முக்கியமானவங்களுக்கு வாய்க்கரிசி போட்டு அனுப்பிச்சிடறான். தொழிற்சாலையில அடிப்படையான விஷயம் மோசமான சாப்பாடு. போக்குவரத்து வசதியில்லாமை. என்னதான் நீங்க ட்ரை பண்ணினாலும், ஒரு அரை கிலோ மீட்டர் காலையில நீங்க லொங்கு, லொங்குன்னு நடந்து வரணும். மழை, வெயில்ங்கிற நாள் போது அப்படி வரதே டயர்டாயிடும். வந்தவுடனேயே உட்கார்ந்துக் கணும்னுதான் தோணுது. ஏன் வந்தவுடன் உட்காரறேன்னு கத்தறாங்க. என்னுடைய அபிப்ராயத்தில இந்த மாதிரி சின்ன, சின்ன ப்ராப்ளங்கள்தான் பெருசாவுது.''

''சரி, எத்தனை மணிக்கு சாப்பாடு போடறாங்க?''

''பன்னெண்டு மணிக்கு ஒரு ஷிப்டு. ராத்திரி ஒரு ஷிப்டு. சாயந்திரம் ஒரு ஷிப்டு.''

''பன்னெண்டு மணி ஷிப்டுக்கு நான் சாப்பிட வரேன். காண்டீன் எங்க இருக்கு?'' - விவரம் கேட்டுக் கொண்டார்.

பதினொன்றரை மணிக்கு காண்டீனுக்குள் நுழைந்தார். ''இலை போட்டு சோறு போடு'' என்றான். அவர் குழம்பு சாதம் சாப்பிடும் போதே, பனிரெண்டு மணி சங்கு ஊதி நூற்றுக்கணக்கான ஆட்கள் காண்டீனுக்குள் ஆரவாரமாக நுழைந்தார்கள். அவர் சாப்பிடுவது பார்த்து திகைத்தார்கள். சாம்பார், ரசம், மோர் எதுவும் சரியில்லை. உப்பு தூக்கலாக இருந்தது. கூட்டு வேகவில்லை. சிப்ஸ் நமத்து இருந்தது. கம்பெனி பத்து ரூபாய் செலவு பண்ணுகிறது. ஆனால், நாலு ரூபாய்க்குக் கூட இந்த சோறு அடங்கவில்லை.

''சாப்பாடு நல்லா இல்லீங்களே, தம்பி. ஏன் இவ்வளவு மோசமா போடுறீங்க? உங்களுக்கு என்ன பிரச்சினை?'' - வாசுதேவமூர்த்தி நோண்ட ஆரம்பித்தார்.

யூனியன் லீடர்கள் ''இந்த மாதிரி பல கமால் பார்த்திருக்கிறேன், கண்ணா. இவங்களெல்லாம் படம் காண்பிக்கிறதுக்குத்தான் வராங்க'' என்று உரத்துப் பேசினாலும், தொழிலாளர்களில் ஒரு குழுவினர் அவர் உள்ளே நுழைந்து நோண்டுவதை ஆவலோடு வேடிக்கை பார்த்தார்கள். ஏதோ விடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார்கள். தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

''நாளையிலிருந்து சாப்பாடு சரியாயில்லேன்னா, காண்ட்ராக்டை நாளான்னிக்குக் காலையில எடுத்துடுவேன். வேற ஆளைக் கொண்டு வந்து சமைக்க வைப்பேன்.''

''அது முடியாதுங்க. நான் ஸ்டே ஆர்டர் வாங்கிடுவேன்.''

''நான் ஸ்டே ஆர்டர் வாங்க மாட்டேன். கையை, காலை வெட்டிடுவேன். அடிதடி, ரகளைக்கு நான் அஞ்சறது கிடையாது. நீ சாப்பாடு சரியா போடறேன்னு சொல்லு. மத்த பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக்கலாம்.''

''ஒண்ணும் பேச முடியாதுங்க. நீங்க கொடுக்கிற காசுக்கு இவ்வளவுதான் போட முடியும்.''

''பத்து ரூபாய் கொடுக்கிறோமேய்யா...''



''பத்து ரூபாய் காசும் என்கிட்டே வரதில்லைங்கய்யா. என்கிட்ட வரபோது, ஆறு ரூபாய்தான் வரது. ஒரு இலைக்கு ரெண்டு ரூபாய் லாபம் கூட இல்லாமல், இத்தனை பெரிய விஷயம் செய்ய முடியாதுங்க...''

''என்னன்னு சொல்லு.''

''சொல்ல முடியாதுங்க. முடிஞ்சா நீங்களே கண்டுபிடிச்சுக்குங்க.''

இருபது நிமிடத்தில் கண்டுபிடிக்க முடிந்தது. இதில் மிகக் கேவலமான விஷயம், பத்து ரூபாய் சாப்பாட்டில் ஒரு ரூபாய் மாப்பிள்ளைக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. தினம், தினம் காசு கட்ட வேண்டியிருந்தது. இன்னும் ஆழ்ந்து விசாரித்துப் பார்க்க, அந்த காசு கட்டுவது அவனுடைய மனைவிக்குத் தெரியாது. அது ரகசிய செலவுக்கான காசாக அவன் வைத்துக் கொண்டிருந்தான்.

''சரி, நடந்தவரைக்கும் எல்லாத்தையும் மறந்துடுங்க. நாளை காலையிலேர்ந்து நீங்க யாருக்கும் எந்தக் காசும் தர வேணாம். நல்ல சாப்பாடு போடணும்னா உங்களுக்கு எவ்வளவு தரணும்?''

''விலைவாசி அதிகமாப் போச்சு. எட்டு ரூபாய் கொடுக்கச் சொல்லுங்க.'' - அவர் கல்யாண விருந்து போல் சாப்பாடு போடுவதாகச் சொன்னார்.

யூனியன் ஆட்களிடம் மாலையில் உட்கார்ந்து பேசினான்.

''ஒரு ரூபாய்க்கே மண்ணு சோறு போடுகிறீர்கள். அதைக் கேட்டால்; இரண்டு ரூபாய் என்று ஏற்றுகிறீர்களா..?'' என்று வாய்க்கு வந்தபடி பேசினார்கள்.

இன்னென்ன போடப்படும் என்று விவரித்தபோது மௌனமானார்கள். ஒரு ஊழியர் கையுயர்த்தி பேசுவதற்கு அனுமதி கேட்டார். ''பேசுங்கள்'' என்று சொன்னபோது,

''இப்படி தினம், தினம் கல்யாணம் விருந்து போல சாம்பார், ரசம், கறி, கூட்டு, பொறியல், அப்பளம் அப்படின்னு போடுவதைவிட, ஒரு சாம்பார் சாதம், ஒரு தயிர் சாதம்ன்னு போடுங்க. ஒரு கதம்ப சாதம், ஒரு ரசம் சாதம்ன்னு போடுங்க. காலையில் டிபனும் அதே இரண்டு

ரூபாய்க்கு இனமாகக் கொடுங்கள். காலையில் முக்கால் ரூபாய்க்கு டிபன் கொடுங்கள். ஒன்றேகால் ரூபாய்க்கு சோறு கொடுங்கள்.'' என்று சொல்ல, இதுவும் நல்ல திட்டமாகத் தெரிந்தது.

மறுபடியும் பேச வருவதாக சொல்லிவிட்டு, விடைபெற்றான்.

''ஒரு நம்பிக்கை வந்துடுச்சுங்கய்யா. நீங்க உள்ள புகுந்துட்டீங்க. உட்கார்ந்து நேரா, மூஞ்சியைப் பார்த்துப் பேசினீங்க. இங்க இருக்கிறவங்க கொஞ்சம் கறால், புறால்ன்னு கூச்சல் போட்டாலும், தப்பான வார்த்தைகள் பயன்படுத்தினாலும் அதை பெரிசு பண்ணாத பதில் சொன்னீங்க.''

''அட... நான் அரசியலில் இருந்தவன்ப்பா. வேகமா பேசற போது அரசியல்வாதி, தொழிற்சங்கவாதி இவங்களெல்லாம் ரெண்டு, மூணு தடிமனான வார்த்தைகளைப் பயன்படுத்துவாங்க. அதுக்கு அசந்தறக் கூடாது. இந்த கெட்ட வார்த்தை என்னை நோக்கி சொல்லப்பட்டதல்ல. அந்த விஷயம் நிச்சயமானதுன்னு சொல்றதுக்கு அவர் முயற்சி பண்றாரு. அப்படித்தானுங்களே...'' - கெட்ட வார்த்தை அதிகமாக சொன்னவரைப் பார்த்து சொல்ல, கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரித்தார்கள். அவரோடு நெருங்கிப் பழக ஆரம்பித்தார்கள்.

''நீ யாரு? நீ யார், எனக்கு வரத் துட்டை நிறுத்தறதுக்கு?'' - மாப்பிள்ளை நடுக்கூடத்தில் நின்று, வேட்டியை மடித்துக்கொண்டு கேட்டார்.

''ஜெனரல் மானேஜர் (தற்காலிகம்). நீ இல்லே அப்படின்னு சொல்லிட்டால். இந்த கம்பெனிக்கும், உனக்கும் சம்பந்தம் இல்லேன்னு சொல்லிட்டால், நான் வெறுமனே வீட்டுல விருந்து சோறு சாப்பிட்டுக்கிட்டு, என் பொண்டாட்டியோட சந்தோஷமாக இருப்பேன். உள்ளுக்குள்ளே வான்னு சொல்லிட்டால், எவனையும் கேள்வி கேட்பேன். உன்னையும் கேள்வி கேட்பேன். உன் மாமனாரையும் கேள்வி கேட்பேன்.''

''அந்த காண்ட்ராக்டர் சொல்றது பொய். எனக்கு எவனும் காசு கொடுக்கலை. நான் எந்த ரகசிய செலவும் வைச்சிக்கலை.''



''என் வேலை இத்தோட முடிஞ்சு போச்சுன்னு நான் விட்டுட்டேன். என்ன ரகசிய செலவு, எந்த இடத்துல ரகசிய செலவுன்னு நான் விசாரிக்கலை. அது வேற விசாரிச்சு சொல்லணுமா?'' - வாசுதேவமூர்த்தி பதிலுக்குப் பேசிய போது,

''என்ன, மிரட்டுகிறாயா?'' - அவர் முண்டாவை மடித்துக் கொண்டு அருகே வந்தார்.

''இப்படி வரதுக்கு என்ன அர்த்தம்? என்னை அடிக்கப் போறீங்களா? உங்களால என்னை அடிக்க முடியுமா? நான் யாருன்னு தெரியாது, உங்களுக்கு. நீங்க எப்படி இந்த வீட்டுக்கு மாப்பிள்ளையோ, அதே மாதிரி, நானும் இந்த வீட்டுக்கு மாப்பிள்ளை. உங்களுக்குப் பின்னாடி எப்படி உங்க குடும்பம் நிக்குதோ, அதே மாதிரி, எனக்குப் பின்னாடி என் குடும்பம் நிக்குது. என் மேல ரெண்டு அடி விழுந்துருச்சி, அப்படின்னா என் குடும்பம், என் பின்னால நிற்கிறவங்க, உங்களை சும்மா விடுவாங்களா? எனக்கு பின்னாடி யார் நிற்கிறாங்க, எத்தனை பேர் நிற்கிறாங்கன்னு உங்களுக்குத் தெரியாதா? நான் கணக்கு போடலை. மறுபடி சொல்றேன். எனக்கு இங்க வேலை செய்யறதுக்கு இஷ்டமில்லை. கூப்பிட்டு ஜெனரல் மானேஜர் (தற்காலிகம்)ன்னு எனக்கு ஒரு பதவி கொடுத்து என்னை சரி செய்யச் சொல்லியிருக்காங்க. நான் செய்ய ஆரம்பிச்சிட்டேன். இனி பின்னாடி என்னால பார்க்க முடியாது. பெருச்சாளியை தூக்கி வீசணும். இல்லை, கம்பெனி இழுத்து மூடும்படியா ஆயிடும். இல்லை, விற்கும்படியா ஆயிடும்.''

''உங்க சித்தப்பா பேர் சொல்லி மிரட்டப் பார்க்கிறியா?''

''இது வரைக்கும் எங்க சித்தப்பா பேரை நான் சொல்லலை.''

''உங்க சித்தப்பா ஒரு செல்லாக்காசு. இன்னைய தேதிக்கு அவர் ஒரு ஜீரோ. ஞாபகம் வைச்சுக்கோ.''

''என்னை எதுனா சொன்னா நான் தாங்கிக்கலாம். எங்க சித்தப்பாவரைச் சொன்னா, நான் தாங்கிக்கணும்ன்னு அவசியமில்லை. மறுபடியும் இது நான் கடைசி தடவையா

கொடுக்கிற எச்சரிக்கை. நீங்க வகை, தொகை தெரியாது பேசுறீங்க. அளவுக்கு அதிகமாக ஆடறீங்க. உங்களை இதுவரைக்கும் கேட்பார் இல்லாம இருந்துச்சு. ஆனால், இப்ப அப்படி இல்லை. நான் கேட்பேன். இன்னொரு தடவை என் சித்தப்பா பத்தி, என் குடும்பம் பத்தி பேசினால் என்னுடைய பதில் நடவடிக்கை ரொம்பக் கடுமையாக இருக்கும். என் சொந்த விவகாரத்துல நீங்க கை வச்சா மாதிரி, உங்க சொந்த விவகாரத்துல நான் கை வைப்பேன். நீங்க யாரோட தொடுப்பு வச்சிருக்கீங்க, எவளோட படுக்கிறீங்க, என்ன பண்றீங்கன்னு சகலத்தையும் வெளியே இழுத்து விட்டுடுவேன். இது செய்ய எனக்கு அரை நாள் போதும். எங்க நிக்கணுமோ, அங்க நிற்பீங்க. என்னை வீணா தூண்டி விடாதீங்க.''

தூரத்திலிருந்து பார்த்த கோமளவல்லிக்கு வாசுதேவ மூர்த்தியின் குரலும், அவன் பேச்சும், அவன் நிதானமும் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தன. ஒரு போக்கிரி மாப்பிள்ளையிடம் தன் வீடும், தன் அப்பாவும் தவித்து, வீட்டின் மூலச் சொத்தான தொழிற்சாலையும் மாட்டிக் கொண்டு சிக்கித் தவிப்பதை அவள் உணர்ந்திருந்தாள். ஆனால், தனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்று வெளியே சொல்லாமல், உள்ளுக்குள் குமைந்திருந்தாள். ஆனால், எல்லாவற்றையும் மீறி கடவுள் அருளால் தன் புருஷன் உள்ளே நுழைந்து, சக்தி உயர்த்தி சகலமும் ஒரு கட்டுக்குக் கொண்டு வர முயற்சிக்கின்ற வீரத்தைப் பார்க்கும்போது அவளுக்கு மனம் நெகிழ்ந்து போனது. ''வாடா, ராத்திரி வாடா... உன்னை எப்படி கொண்டாடுறேன்னு பாரு.'' - ஆனந்தமாய் இருந்தாள்.

இரவு மனைவிக்கு அருகே படுத்திருந்த வாசுதேவ மூர்த்திக்கு சந்தோஷப்படுகின்ற மனோநிலை இல்லாதிருந்தது. மனைவி இழுத்து அணைத்துக்கொண்ட போது, மெல்ல விடுவித்துக்கொண்டு ''நான் கொஞ்சம் டென்ஷன்ல இருக்கேன். என்னைக் கொஞ்சம் தனியா விடுறியா?'' என்று மிருதுவாகக் கேட்டான். பளிச்சென்று எல்லா வேகமும் கோமளவல்லிக்கு அடங்கிற்று.

''ஏன், எதுனா குழப்பமா?''



''ஒரு குழப்பம் இருக்கு.''

''என்னன்னு எங்கிட்ட சொல்லுங்களேன்...''

''இங்கே நடந்த கூத்து மொத்தமும் சித்தப்பாவுக்கு சொல்றதா, வேண்டாமா?''

''சொல்றதுதான் நல்லது.''

''அப்படிச் சொன்னால் வீட்டுக்கு வாடா. அங்கே என்னடா உனக்கு வேலை, என்று சித்தப்பா சொல்லி விடுவார். நான் விரட்டப்படுகிற இடத்தில் இருக்கிறேன் என்று சித்தப்பாவிற்குத் தெரிந்தால் அது சித்தப்பாவிற்குத் பிடிக்காது. நீ ஏன் அந்த சாக்கடையில கலக்கிறே... வா, நம்ம வீட்டுக்கு வந்து உட்கார்ந்து உன் வேலையைப் பார்த்துக் கொண்டு இரு, என்று மறுபடியும் அழைத்துக் கொண்டு விடுவார். அப்படி போனால், இந்த வீட்டை சரி செய்ய முடியாது. பிறகு, சித்தப்பாவோடு இருக்கிற ஜுரம் வேறு பற்றிக் கொள்ளும். சித்தப்பா நிலைமை சீனிவாசன் சொன்னது போலவே மிகவும் உக்கிரமாகிக் கொண்டிருக்கிறது. நேற்று மாலை குடந்தை கட்சி அலுவலகத்தின் மீது கத்திக் குத்து நடந்திருக்கிறது. சித்தப்பாவின் ஜீப்பை கல்லெறிந்து உடைத்திருக்கிறார்கள். உருட்டி விட்டிருக்கிறார்கள். தீ வைக்க முயற்சித்தபோது, தடுக்கப்பட்டு தாக்கப்பட்டிருக்கிறார்கள். பதினைந்து நிமிடம் குடந்தையில் அன்று இரவு ரணகளமாகக் காட்சியளித்திருக்கிறது. இது சித்தப்பாவுக்கு மோசமான நேரமா, அல்லது எனக்கா, தெரியவில்லை.''

''ரெண்டு பக்கமும் விட்டுட்டு, பேசாத மெட்ராஸ் போயிடலாமா? மெட்ராசுல அஞ்சாயிரம், ஆறாயிரம் கொடுத்து, ஒரு ஃப்ளாட்டுல தங்கி தினம் கபாலி கோயில் போய், பார்த்தசாரதி கோயில் போய்; பேசாத அங்கேயே குடித்தனம் பண்ணலாமா?''

''உன்னால பண்ண முடியுமா, கோமளவல்லி?''

''என்னால பண்ண முடியாது. நமக்குத் தெரிஞ்சவங்க ரெண்டு பேரையும் தவிக்கவிட்டுட்டு மயிலாப்பூருல போய் என்ன குடித்தனம் பண்றது? காசு வசதி இருக்குன்றதாலயே, எல்லாத்துலேர்ந்தும் தப்பிச்சுப் போக முடியுமா? எனக்கு

என்னமோ அது திருப்தியான வாழ்க்கையா இருக்கும்ன்னு தோணலை. தினம் காத்தாலயும், சாயந்திரமும் கும்ப கோணத்துக்கும், சேத்தியாதோப்புக்கும் போன் போட்டு மாசத்துக்குப் பதினைஞ்சாயிரம் ரூபாய் போன் பில்லா யிடும். ஆறாயிரம் ரூபாய் வாடகை, பதினைஞ்சாயிரம் ரூபாய் போன் பில்லு. இருப்தோராயிரம் ரூபாய் கூட செலவாகுமே தவிர. மனசுல ஒரு துளி நிம்மதி இருக்காது. நீங்க என்ன பண்ணலாம்ன்னு நினைக்கிறீங்க?''

''இங்க உட்கார்ந்து இதை சரி பண்ணலாம்ன்னு நினைக்கிறேன்.''

''பெரிய மாப்பிள்ளை ரொம்ப மிரட்டுறாரே...''

''ரொம்ப மிரட்டுனா மடக்கி. அடிச்சி உட்கார வைக்கலாம்ன்னு நினைக்கிறேன்.''

''உங்களால முடியுமா?''

''வேற வழியில்லேன்னா செய்துதான் ஆகணும்.''

''மறுபடியும் சீனிவாசன்கிட்டே போய் என்னன்னு கேட்டுட்டு வருவோமா?''

''சீனிவாசனை இங்க வரவழைக்கலாமான்னு பார்க்கிறேன்.''

''வருவாரான்னு தெரியலை...''

கோமளவல்லி கண்மூடி உட்கார்ந்திருந்தாள். மேலே போய், கை கால் அலம்பி, சாமி படத்திற்கு முன் கைகூப்பி சிறிது நேரம் இருந்தாள். மறுபடியும் வந்தாள்.

''இன்னும் ஒரு வாரம் பார்க்கலாம். ஒரு வாரத்துல எல்லாம் சரியாகும்ன்னு மனசுக்குப் படுது. அப்படி சரியானா, திருப்பதியில அங்கப் பிரதட்சணத்துக்கு வரேன்னு வேண்டிக்கிட்டிருக்கேன். நான் செய்யற வேண்டுதல் சரியான்னு கேட்டேன். ரொம்ப சந்தோஷம்ன்னு நம்ம ஜோசியர் சீனிவாசன் சொன்னது குறிப்பா தெரிஞ்சது. என்னடா, அந்த சீனிவாசன் ஏழுமலையானைக் கூப்பிட்டா, இவர் வந்து நிற்கிறாரே. அப்படின்னு ஒரு எண்ணம். ஆனால், இவர் பேரும் சீனிவாசன்தானே... தெய்வம் மனுஷ ரூபம்தானே... இன்னும் ஒரு தள்ளு தள்ளிப் பார்ப்போம்.''



இரவும் கணவனும், மனைவியும் வெறுமே அணைத்துக் கொண்டு தூங்கினார்கள்.

மறுநாள் காலை, பெரிய மாப்பிள்ளை ஆறேகால் வீட்டுக் கதவு தட்டினார். கோமளவல்லி வரவேற்றபோது, ''தயவு செய்து டிபன், காப்பி கொடுங்கம்மா. ராத்திரி ஒண்ணும் சாப்பிடலை'' என்று கெஞ்சலாய்ப் பேசினார். வாசுதேவமூர்த்தி அவசர, அவசரமாக எழுந்து முகம் துடைத்துக் கொண்டு, பின்பக்கம் போய் கை, கால் அலம்பி, உற்சாகமாக ஹாலுக்கு வந்து, பெரிய மாப்பிள்ளையைக் கைகுலுக்கி வரவேற்றான். உட்காரச் சொன்னான்.

''எனக்கு காப்பி மட்டும் கொடு. மாப்பிள்ளைக்கு டிபன் கொடு.''

கடகட, இட்டிலியும் மிளகாய்ப் பொடியும் தேங்காய்ச் சட்டினியும் மாப்பிள்ளைக்குப் பரிமாறப்பட்டன. வாசுதேவமூர்த்தி காப்பியை உறிஞ்சி காத்திருந்தான்.

''சரி, நீங்க உள்ள வந்துட்டீங்க. உங்களுக்குண்டான பங்கை நீங்க எடுத்துக்குங்க. என் பங்கு எதையும் பறிக்காதீங்க. என் பங்கைப் பறிச்சா, என்னால உயிர் வாழ முடியாது.''

''நீங்க சொல்றது எதுவும் விளங்கலை, மாப்பிள்ளை''

''எனக்கு மாசாந்தரம் இருபதாயிரம் ரூபாய், இருபத்தஞ்சாயிரம் ரூபாய் தனியே செலவு இருக்கு. அதை நான் வேறெங்கிருந்தும் எடுக்க முடியலை, எடுக்கிறதுக்கு பர்மிஷன் வாங்கவும் முடியாது.''

''என்னன்னு சொல்லுங்க.''

''இவங்க அக்கா என்கிட்டே சந்தோஷமா இல்லை. இவங்க அக்காகிட்டே நான் சந்தோஷமா இல்லை. ஆனால், நான் சந்தோஷமான இருக்கணும்ன்னுங்கிற பேராசை இருக்கு. அதனால, என் சந்தோஷத்துக்கு நான் தனியா ஒரு இடம் வைச்சிருக்கேன். அந்த இடத்துக்கு இருபத்தஞ்சாயிரம் ரூபாய் செலவாகும். இதை நீங்க பெரிசு படுத்தாத ஏற்பாடு பண்ணுங்க.''

''சரி, இதை நான் பெரிசு படுத்தலை. ஆனால், இருபத்தஞ்சாயிரம் ரூபாய் என் கையிலிருந்தா கொடுக்க முடியும். கம்பெனியிலிருந்தா தர முடியும்?''

''இந்த சர்க்கரை ஆலைக்கு தனியா ஒரு இருபத்தஞ்சாயிரம் ரூபாய் தரது ஒரு பெரிய விஷயமேயில்லை.''

''அடடா... இருபத்தஞ்சாயிரம் ரூபாய் காசு மதிப்பு சொல்லலை. என்ன கணக்குல தரது?''

''தரணும்ன்னா எதுனா தரலாம். எப்படியாவது தரலாம்.''

''ஆனால், சொல்லித்தானே ஆகணும். ஷேர் ஹோல்டர்லேர்ந்து, இங்க இருக்கிற அக்கவுண்டண்ட் வரைக்கும், எல்லாருக்கும் இந்த இருப்பஞ்சாயிரம் ரூபாய் இவருக்குக் கொடுக்கப்படுகிற காசுன்னு நீங்க கையெழுத்து போட்டு வாங்கித்தானே ஆகணும். உங்க மாமனாருக்கு சொல்லித்தானே ஆகணும். உங்க பொண்டாட்டிக்குத் தெரிஞ்சுதானே ஆகணும்.''

''என் பொண்டாட்டிக்கு நல்லா தெரியும். எங்க மாமனாருக்குத் தெரியுமா, தெரியாதாங்கிறதைப் பத்தி எனக்கு அக்கறை இல்லை.''

''சரி, இந்த விஷயத்தை ஏதோ ஒரு விதமா நான் தீர்த்து வைக்கிறேன். எனக்கு நீங்க என்ன உதவி பண்ணுவீங்க, அதைச் சொல்லுங்க.''

''உங்க நிர்வாகத்துல நான் தலையிடலை.''

''என் நிர்வாகம் இல்லை. கம்பெனி நிர்வாகத்துல நீங்க தலையிடாது இருக்கிறது நல்லது.''

''அப்போ எனக்கு இங்க பதவியே கிடையாதா? எனக்கு இந்த சொத்துல பங்கே கிடையாதா?''

''என்ன பதவி, என்ன பங்குங்கிறதைப் பத்தி பின்னாடி பேசுவோம். மூணு மாசம் கட்டாய விடுப்பு நீங்க எடுத்துக்கிட்டுப் போங்க. நான் ஒரு மாதிரி நிமிர்த்தி, நிக்க வைக்கிறேன். அப்புறம், ஒரு நல்ல இடமா பார்த்துத் தரேன்.''

''நீங்க என்னைக் கவுத்துவிட்டுட்டீங்கன்னா...''

''நீங்க என்னை நம்பித்தான் ஆகணும். நீங்க உள்ளுக்குள்ளே இருக்கிறபோதே, உங்களை என்னால் கவிழ்க்க முடியும். ஆனால், உங்களைக் கவிழ்க்கிறதுக்கு எனக்கு இஷ்டமில்லை. ஏன்னா, நீங்கள் நம்ம குடும்பத்துல



ஒருத்தர். நானாவது அந்நியம். நீங்க உங்க மாமனாருக்கு சொந்தக்காரர். அவருடைய அக்கா பிள்ளை. உங்களைப் போய் நான் என்னத்துக்கு கவிழ்க்கணும்?''

''அப்போ, நான் சிங்கப்பூர் போயிடறேன், மூணு மாசம். எனக்குக் கொஞ்சம் கூட காசு கொடுங்க.''

''கூடன்னா...''

''ஒரு அஞ்சு இலட்ச ரூபாய் கொடுங்க. மூணு மாசம் நான் சிங்கப்பூரில இருக்கேன்.''

''எங்கேயிருந்து கொடுக்கிறது? என்னன்னு கொடுக்கிறது? எனக்குப் புரியவேயில்லை...''

''நான் தொழிற்சாலை முன்னேற்றத்திற்காக டூர் போகப்போறேன். அதுகாக தொழிற்சாலையிலிருந்து எனக்கு அஞ்சு இலட்ச ரூபாய் கொடுக்கக் கூடாதா?''

''அக்காவோட போறீங்களா? அக்காவை விட்டுட்டுப் போறீங்களா..?'' - கோமளவல்லி கேட்டாள்.

''உங்க அக்காவோட சாவு வீட்டுக்குக் கூட போக மாட்டேன். எழவு கொண்டாடறதுக்குக் கூட, நான் ஒண்ணா சேர மாட்டேன்.'' - அந்த மாப்பிள்ளை ஆத்திரத்தோட கூவினான்.

, வாசுதேவமூர்த்தி மனைவியை அடக்கினான். ''குறுக்கே பேசாதே'' என்று எச்சரித்தான்.

''பொண்டாட்டி மேல இத்தனை கசப்பை வைச்சிக்கிட்டு, சொத்து மேல இவ்வளவு ஆசை வைச்சீங்கன்னா, எப்படிங்க சரியா வரும்? சொத்து வேணும்ன்னா பொண்டாட்டியை மனுஷியா நடத்துங்க. இல்லை, சொத்தும் வேணாம், பொண்டாட்டியும் வேணும்ன்னு தூக்கிப் போட்டுட்டுத் தனியா போங்க. நீங்க பண்றது நல்லாவா இருக்கு?''

''என் இடத்துல நின்னு பார்த்தீங்கன்னா புரியும். உங்களுக்கு ஒரு நல்ல பொண்டாட்டி வாய்ச்சிட்டா. அதனால அதேவிதமா, நானும் இருக்கணும், என் வீடும் இருக்கணுமன்னு தயவு செய்து நினைக்காதீங்க. என் வீட்டைப் பத்தி வெளியே சொன்னா, நாறும். முடிஞ்சா நீங்களே கண்டுபிடிச்சுக்குங்க.'' - மறுபடியும் அவர் உரத்த குரலில் பேசினார்.

வாசுதேவமூர்த்திக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை. இந்த சிக்கலை எப்படி விடுவிப்பது என்று புரிய வில்லை. ஐந்து லட்ச ரூபாய் இவரைத் தன் வழியில் இருந்து அகற்றிவிடலாம். தற்காலிகமாக நகர்த்திவிடலாம். அந்த தற்காலிக நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு தொழிற் சாலையைத் தூக்கி நிமிர்த்திவிடலாம். ஆனால், இந்த ஐந்து லட்ச ரூபாய் கொடுத்தால், இவர் நிச்சயமாக தான் தொடர்பு வைத்திருக்கிற கள்ளக் காதலியோடுதான் வெளியே போவாரே தவிர, தன் மனைவியை அழைத்துக்கொண்டு போகமாட்டார். அப்படி அவர் செய்வது, அதற்குக் காசு கொடுப்பது, இந்த விஷயத்தை அங்கீகரித்தது ஆகும். இந்த விஷயத்தை வாசுதேவமூர்த்தி அங்கீகரித்துவிட்டால், மற்றவர்கள் எதிர்த்து அதிகம் பேசமுடியாது. அவருடைய மனைவி அழுது, புலம்பும்படி நேரிடும். ''நான் ஒரு கட்டுல வைச்சிருந்தேன். அந்த ஆளை அவிழ்த்து விட்டுட்டீங்களே...'' என்று குறை சொன்னால், அதற்குப் பதில் சொல்ல முடியாது. இது சென்டிமெண்ட் கலந்த கம்பெனி விஷயம். அதே சமயம், இவன் எந்த ஊர் போவான் என்பதும், போய் என்ன செய்வான் என்பதும், அப்படி இவனை கம்பெனியை விட்டு, வெளியே போகச் சொல்லி அப்புறப்படுத்தினால், திரும்பி வரும்போது என்னவிதமாக வருவான் என்றும் சொல்வதற்கில்லை. உள்ளுக்குள்ளே எதிர்க்கட்சி ஆட்களைத் தூண்டிவிட்டுப் போகலாம். வாசுதேவமூர்த்தி எது சொன்னாலும் ஒத்துக்கொள்வாரே என்று அங்கங்கே புள்ளி வைத்துவிட்டுப் போகலாம். ராவோடு ராவாகக் குத்திக் கொன்றுவிடு என்று கூலியாட்களை ஏவிவிட்டுப் போகலாம். ''எனக்கு ஒன்றும் தெரியாதுங்களே... நான் ஊருக்குப் போயிட்டேனுங்களே...'' என்று கைவிரித்துவிடலாம். நினைக்க, நினைக்க வாசுதேவமூர்த்திக்கு வயிறு பிசைந்தது. சித்தப்பாவைமனம் அடிக்கடி நினைத்துக்கொண்டது.

'ஒரு சின்னத் தொழிற்சாலையை தரையில் தூக்கி நிற்க வைப்பதற்கே, இத்தனை கலவரமும், பயமும், யோசனையும் பண்ண வேண்டியிருக்கே... அவ்வளவு பெரிய கட்சியை, இவ்வளவு பெரிய தேசத்தைத் தோளில் தூக்கிக்கிட்டு அலையரீயே... உன் மனசுக்குள்ளே எத்தனை கலவரம் இருக்கும்? எத்தனை குழப்பம் இருக்கும்?



தூங்காத எத்தனை ராத்திரி நீ அலைஞ்சிருப்பே? கடவுளே, கடவுளே... என் சித்தப்பாவை நீ காப்பாற்று.' என்று கைகூப்பி வேண்டினான். மனம் சித்தப்பாவின் கால்களைப் பற்றிக்கொண்டு விம்மி அழுதது.

முகம் இருண்டு போய், தொலைதூரம் பார்த்துக் கொண்டிருக்கின்ற புருஷனைப் பார்த்து கோமளவல்லி கஷ்டப்பட்டாள். வருத்தப்பட்டாள். 'எங்க வீட்டு சாக்கடையில உன்னையும் இறக்கிட்டேனா...? எப்படி பூ மாதிரி இருந்தே..? காலாகாத்தால பட்டை போட்டுக்கிட்டு, இந்நேரத்துக்கு நீ சாரங்கபாணி கோயிலுக்குக் கிளம்பியிருப்பே... அதை விட்டுட்டு இங்கே கொண்டாந்து உன்னைக் கட்டிப் போட்டுட்டேனே... நான் மகாபாவி' - மனசுக்குள் அலுத்துக்கொண்டாள்.

ஆனால், பத்தாவது நிமிடம் வாசுதேவமூர்த்தி தெளிந்துவிட்டான். கத்தி உருவி யுத்தத்தில் இறங்கியாகிவிட்டது. இனி, பின்வாங்குவது என்ற பேச்சுக்கு இடமில்லை.

எண்ணித் துணிகக் கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

"இன்னும் ஒரு வாரத்தில் சொல்றேங்க... அநேகமா நீங்க ஊருக்குப் போகும்படியான ஏற்பாட்டை நான் பண்றேன். அதுவரைக்கும் நீங்க அமைதியா இருங்க. கம்பெனிக்குள்ள வரவேண்டாம். இன்னியிலேர்ந்தே உங்களுக்கு விடுப்பு ஆரம்பிச்சிடுச்சு. நான் பார்த்துக்கறேன். நான் வரேன் உங்க வீட்டுக்கு.''

''நான் எங்கே இருப்பேன்னு உங்களுக்குத் தெரியுமா?''

''சொல்லுங்க. அங்கே வரேன்.''

''அந்த இடத்துக்கு நீங்க வரலாமான்னு தெரியலையே...''

''எனக்கு ஒண்ணும் தயக்கம் இல்லைங்க. நீங்க எங்க கூப்பிட்டாலும் வருவேன். எல்லாம் மனுஷாள் இருக்க இடம்தானே... மரபு முன்ன, பின்ன இருக்கும். இருந்துட்டுப் போகும். அவங்களும் நல்லவங்கதானே...-

நான் அங்கேயே வந்து பார்க்கிறேன்.'' - வாசுதேவமூர்த்திக்கு அந்த இடத்தையும் ஒரு முறை பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல் இருந்தது.

அவர் `போனவுடன் கோமளவல்லி சீறினாள். ''எனக்குப் பிடிக்கலை, நீங்க பண்ணது.''

''என்ன?''

''நீங்க ஏன் அங்க போகணும்?''

''எங்க போகணும்?''

''எதுக்காக அவருடைய அசிங்கமான இடத்துக்கு நீங்க போறீங்க?''

''அந்த இடத்துக்குப் போனால்தான் அவனை சரியானபடி மடக்கிக் கொண்டாரலாம். அங்க போனாதான் துட்டு ஆசை காட்டி, அங்க இருக்கிறவங்களை பேச வைச்சு, இவரை மடக்கி உட்கார வைக்கலாம். உங்க அக்கா பக்கத்துல இவர் உட்கார்ந்தாக்க, கடுகடுன்னு கடுப்படிப்பான். சீறுவான். தேவையில்லாத சண்டை வரும். அவன் எந்த இடத்துல சந்தோஷமா இருக்கானோ, அந்த இடத்துல போய் அவனை சமாதானம் பண்றதுதான் நல்லது.''

''எனக்கு பயமா இருக்கு.''

''என்ன பயம்?''

''நீங்க அந்த மாதிரி இடத்துக்கெல்லாம் போனீங்கன்னா, உங்களையும் சுத்தி வளைச்சிப் போட்டுக்குவாங்க.. உங்களுக்கும் தனியா ஒரு வீடு ஏற்பர்டு பண்ணிடுவாங்க.''

''அடிப்பாவி... கல்யாணம் ஆகி இத்தனை வருஷம் பொறுத்து என்னைப் புரிஞ்சிக்கிட்டது இதானா? ஏன் ஒரு கேவலமான பொம்பளை மாதிரி பேசறே? எல்லா படிச்ச பொண்ணுங்களும் எல்லாக் கெட்டிக்கார பொண்ணுங்களும் இந்த ஒரு இடத்துல மக்கா இருக்கீங்க? ஏன் இத்தனை அசிங்கமா இருக்கீங்க? கோமளவல்லி, உள்ள போ. போய் வேலையைக் கவனி... இப்படி சத்தியம் கேட்கறதைவிட, உன் செருப்பெடுத்து நாலடி அடிச்சிடு. ரொம்ப திருப்தியா, ரொம்ப சந்தோஷமாயிடும். எனக்கும் நல்ல மரியாதையா இருக்கும். அடிச்சது பொண்டாட்டி தானேன்னு சந்தோஷப்பட்டுக்கலாம். ஆனால், சத்தியம்



கேட்டாக்க வாழ்நாள் முழுக்க வலிக்கும்டி. இந்த பேச்சை இத்தோட விடு. இதுக்கு மேல வளர்த்தே, நம்ம குடித்தனம் நல்லாயிருக்காது.''

''என் பயம் உங்களுக்கு ஏன் புரிய மாட்டேங்குது?''

''இந்த பயம் தப்பு. எங்க சித்தப்பாக்கிட்ட ஒரு நாள் கூட எங்க சித்தி இப்படி ஒரு வார்த்தை கேட்டதில்லை. எங்க சித்தப்பாவை இப்படி சந்தேகப்பட்டதில்லை. எங்க சித்தப்பா இன்னைய தேதி வரைக்கும் அந்த சந்தேகத்துக்கு ஏத்தபடி நடந்ததேயில்லை. என்னை மாதிரி அவர் கம்பெனி கூலியில்லை. இந்தியா முழுக்க சுத்தி வந்த பெரிய மனுஷன். ரம்பா, ஊர்வசியெல்லாம் அவர் காலின் கீழே பார்த்தவர். ஆனால், அவர் ஆடுனதே இல்லை. நான் அவர் பரம்பரை. என்னைப் பார்த்து இப்படி கேட்காதே. போ... நீ இப்படி கேட்டது எனக்கு ரொம்ப வருத்தம். ரொம்ப வேதனை. ஆயிரம் வேலைக்கு நடுவிலேயும், இந்த வேதனை என்னை அடி மனசிலே முள்ளாக் குத்திக்கிட்டிருக்கும். இன்னைக்கு முழிச்ச வேளை நல்லாயில்லை... போ'' - வாசுதேவமூர்த்தி அலுப்பும், கோபமாகப் பேசினான்.

கோமளவல்லி கண்களில் நீர் வழிய உள்ளே போய் உட்கார்ந்துகொண்டாள். என்றுமில்லாத திருநாளாய், அந்த வீட்டில் அன்று ஒரு சின்ன கசப்பு உருவாயிற்று. வாசுதேவமூர்த்தி குளித்து டிபன் சாப்பிட்டுவிட்டு, கம்பெனிக்குப் போனான். மறுபடியும் எல்லா இடங்களையும் சோதனை போட ஆரம்பித்தான்.

கரும்பு புரோக்கர்களெல்லாம் காசு கொடுத்திருந்தார்கள். எடையில் குளறுபடி செய்தார்கள். விவசாயிகளை ஏமாற்றுகின்ற ஒரு சூழ்ச்சி, ஒரு கும்பலே அங்கு செய்து கொண்டிருந்தது. ஈரப்பதம் பற்றி சான்று வழங்குகிறவர் காசு வாங்கிக்கொண்டு, அதிக ஈரப்பதம் இருப்பதாய்ச் சொன்னார். அந்த நஷ்டம் கம்பெனி தலையில் வந்து இடித்தது. கம்பெனியில் ஈரப்பதம் அளப்பதற்கு மிகச் சரியான கருவிகள் இருந்தும், அவர்கள் குரூரமான சாதாரணமான பழைய முறையைக் கையாண்டார்கள். எலக்ட்ரானிக் சிஸ்டத்தை ரிப்பேர் என்று ஓரம் போட்டு

வைத்திருந்தார்கள். இடைவிடாது ஃபர்னஸ் எரிய வேண்டும். ஃபர்னஸ் எரிவதற்கு கறுப்பு எண்ணெய் தேவையாக இருந்தது. அந்த கறுப்பு எண்ணெய் வாங்குவதிலும் ஊழல் இருந்தது. எல்லா இடத்திலும் மாப்பிள்ளைராயன் கைவைத்திருந்தான். இருபத்தைந்தாயிரம் அல்ல, நாற்பது, நாற்பத்தைந்தாயிரம் ரூபாய் கபளீகரம் செய்திருந்தான்.

நாலு இட்டிலி - ஒரு வடை, அல்லது இரண்டு பட்டை பொங்கல் - ஒரு வடை முக்கால் ரூபாய் என்று தீர்மானமாயிற்று. சாம்பாரும், சட்டினியும் அளவில்லாமல் தர ஒப்புக்கொள்ளப்பட்டது. ஒண்ணேகால் ரூபாய்க்கு சாம்பார் சாதம், மோர் சாதம், கதம்ப சாதம் அல்லது தயிர் சாதம், ரசம் சாதம் அல்லது வற்றல் குழம்பு சாதம் என்று மெனு தயாரிக்கப்பட்டது; குடிப்பதற்குப் பகல் நேரம் மோர் தர வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. அந்த மோருக்குக் காசு கிடையாது என்று சொல்லப்பட்டது. எட்டணாவுக்கு நல்ல டீ தரப்பட்டது. காண்ட்ராக்டர் கடன் கேட்டார். மாதாமாதம் கழித்துக் கொள்ளச் சொன்னார்; வேறு வழியில்லாமல் அவருக்கு ஒரு இலட்ச ரூபாய் கம்பெனி கடன் கொடுக்க முன்வந்தது. வட்டியில்லாத அந்தக் கடனை அவன் நாலு தவணையில் அடைக்க வேண்டும் என்று அவன் கையெழுத்திட்டான்.

திங்கட்கிழமையன்று கல்கண்டுபாத்தும், வடையும், பொங்கலும் பரிமாறினான். தொழிலாளர்கள் அந்த ருசியில் சொக்கிப் போனார்கள். தேங்காய்ச் சட்டினியை உள்ளங்கையில் வாங்கிக் கொண்டு, உறிஞ்சிக் குடித்தார்கள். சாம்பாரை சிறிய பாட்டில்களில் அடைத்துக் கொண்டு போய், பகல் நேரத்துக்கு நடுவே ருசியாக இருக்கிறது என்று குடித்தார்கள். அது போல பகல் சாப்பாடும் மிக நன்றாக இருந்தது. வெங்காயச் சாம்பார் சாதமும், கெட்டியான தயிர் சாதமும் மிக சுவையாக இருந்தன. தொட்டுக்கொள்ள கோசுக் கறியும், சிப்ஸுக்குப் பதிலாக பக்கோடாவும் தரப்பட்டன. தொழிலாளர்கள் வாயார மனமாரப் பாராட்டினார்கள். நேரே வந்து வாசுதேவமூர்த்தியிடம் கைகுலுக்கினார்கள். மறுநாள், கேசரியும், இட்டிலியும், வடையும் போடப்பட்டன. "இரண்டு நாள் ஸ்வீட் போட்டுட்டே



னுங்க. நாளையிலிருந்து ஸ்வீட் இருக்காது. ஆனால், வெள்ளிக்கிழமை, வெள்ளிக் கிழமை ஸ்வீட் போடுவேன்" என்று காண்ட்ராக்டர் விளம்பரப் பலகை மூலம் அறிவித்தான். இன்றைய பகல் சாப்பாடும் மிக நன்றாக இருந்தது. "மக்கள் நல்லாச் சாப்பிடுறாங்களா... கொஞ்சம் லஞ்ச் அவருக்கப்புறம் வேலை மெல்லத்தான் நடக்குது. என்ன பண்ணலாம்?"

"கொஞ்சம் பழக்கமாகட்டும். விரட்டாதீங்க. ஒரு வாரத்துக்கப்புறம் இது சரியாயிடும்" - வாசுதேவமூர்த்தி விட்டுப் பிடிக்கச் சொன்னான்.

கச்சா எண்ணெய்க்கு ஆள் மாற்றினான். நேரடியாய் பெரிய கம்பெனி கொண்டு வந்து கொடுக்க வேண்டுமென்றும் கட்டளையிட்டான். அவர்களுக்கு முன்பணம் கொடுத்தான். உபரி டேங்க் கட்டுவதற்காக ஏற்பாடுகள் செய்தான். கலால் வரி ஆட்களோடு உட்கார்ந்து பேசினான். அங்கேயும் கொஞ்சம் சிக்கல்கள் இருந்தன. கலால் வரியை ஏமாற்றுவதற்குக் கம்பெனி முயற்சிப்பதாய் ஒரு நோட்டீஸ் வந்திருந்தது. அந்த நோட்டீசிற்கு சரியான பதில் இதுவரை தரப்படவில்லை. உடனடியாய் ஒரு பதில் அரசதிகாரிகளுக்கு வாசுதேவமூர்த்தி எழுதினான். எந்தவிதமான குற்றமும் இனி ஏற்படாது என்றும், ஏற்பட்டதாய் நீங்கள் கருதும் குற்றத்தை உடனடியாய் நிவர்த்தி செய்ய முயற்சிப்பார்கள் என்றும். அதற்கு அரசதிகாரிகள் உதவ வேண்டும் என்றும் மிகப் பணிவாகக் கேட்டுக்கொண்டிருந்தான்.

ஒரு மாதிரி கம்பெனி என்கிற அந்த பெரிய தேரை, ஓரம் சாய்ந்திருந்த அந்த வாகனத்தை நடுத்தெருவுக்கு ஓடுமளவுக்குக் கொண்டு வர ஒரு மாதமாகியது. பெரிய மாப்பிள்ளையின் சிறிய வீட்டிற்கு ஒரு முறை போய் வந்தான். அவரை அது எந்த அளவிலும் அது பாதிக்கவில்லை. அவள் ஒரு சாதாரண பெண்மணி. குழைந்து, குழைந்து பேசத் தெரிந்த கெட்டிக்காரி. இந்த விதமாய், தன் மனைவி பேசவில்லை என்பதாலேயே அவன் தடம் மாறி இருக்கிறான். தவறு கோமளவல்லி அக்காவின் மீதும் இருக்கும் என்பது அவனுக்கு எளிதாகப் புரிந்துவிட்டது.

வாசுதேவமூர்த்தி அங்கு சில விதிமுறைகளைச் சொல்லி விட்டு, வீட்டுக்கு வந்துவிட்டான். கோமளவல்லியிடம் அந்த வீடு பற்றி விவரித்தான்.

கோமளவல்லி அருகே போய், அவன் தலையைத் தடவி, கன்னங்களில் முத்தமிட்டு, "நான் பேசினது முட்டாள்தனம். நீங்க யாருன்னு புரிஞ்சிக்காத பேசிட்டேன். மன்னிசிருங்க. இனிமே அப்படி பேசமாட்டேன்." என்று கட்டிக் கொண்டாள்.

"இப்படி ஒரு பயம் எல்லாப் பொம்பளைக்கும் தோணத்தான் தோணும். தப்பில்லை. உனக்குத் தோணியிருக்க வேணாம். அதான் எனக்கு வருத்தம்."

"

இப்படி ஒரு பயம் எல்லாப் பொம்பளைக்கும் தோணத்தான் தோணும். தப்பில்லை. உனக்குத் தோணியிருக்க வேணாம். அதான் எனக்கு வருத்தம்.

"

கரும்பு கொள்முதல் துவங்கிய போது, இரவு பகலாக வாசுதேவமூர்த்தி கம்பெனியிலேயே இருந்தான். ஒவ்வொரு லோடிலிருந்து கண்ணெதிரே கழி உருவச் சொல்லி, அது லேபுக்குப் போனதும் அதனுடைய ஈரப்பதம், மற்ற விஷயங்கள் என்ன என்பதை வாங்கிக் கொண்டான். அதனுடைய மறுதுண்டை உடனடியாக சென்னைக்கு அருகே இருக்கிற இன்னொரு தொழிற்சாலைக்கு அனுப்பி, அங்கே அவர்கள் என்ன ஈரப்பதம் சொல்கிறார்கள், சர்க்கரையின் அளவு என்ன என்றும் சோதனை செய்து பார்த்துக் கொண்டான். நாற்பத்தைந்து நாளில் கரும்பு வாங்குவது முடிந்துவிட்டது. கரும்பு விற்ற அத்தனை விவசாயிகளுக்கும் காசோலை மூலமாக பணம் பட்டுவாடா பண்ணச் சொன்னான். அந்தக் காசோலையை பெரிய கூரியர் மூலம் அனுப்பினான்.

"கம்பெனியிலிருந்து யாரும் காசோலையை எடுத்துக் கொண்டு போகக் கூடாது. அப்படிப் போவது தெரிந்தால், மிகக் கடுமையான தண்டனை தருவேன்" என்று எச்சரித்திருந்தான். தன்னால்தான் காசு கிடைக்கிறது என்கிற நினைப்பை விவசாயிகளுக்கு உருவாக்கி, அவர்களிடமிருந்து நூறு, இருநூறு என்று வாங்கிக்கொண்டு வருகின்ற அற்பத்தனத்தை கடுமையாகக் கண்டித்தான். மீறி செய்ய முயன்ற ஓர் ஆளை, ஒரு வாரம் வேலையிலிருந்து நீக்கி வைத்தான். "அடுத்த முறை கிரிமினல் கேஸ் போடுவேன்" என்று எச்சரித்தான். தொழிற்சங்கம் அவன் உதவிக்கு வரவில்லை.

"திருட்டுக் கேசுக்கெல்லாம் தொழிற்சங்கம் உதவிக்கு வராதுப்பா. அந்த ஆள் ஒழுங்கா சோறு போடறான். மோர் கொடுக்கிறான். டீ கொடுக்கிறான். நீ ஏமாத்தி துட்டு வாங்குறதுக்காக, எங்களை யூனியன்ல கூப்பிடாதே." என்று யூனியன் மறுத்துவிட்டது.

சர்க்கரைப் பாகு கொதிக்க வைக்கும் வேலை அதிகமாகியது. ஜெனரேட்டர் போதவில்லையென்று தெரிந்தது. சென்னையிலிருந்து உடனடியாக ஒரு ஜெனரேட்டர் தருவித்தான். அந்த ஜெனரேட்டர் மூலம் நிர்வாக அலுவலகத்துக்கு மின்சாரம் செலவழித்தான். அங்கு செலவழித்துக்கொண்டிருந்த மின்சாரத்தை கம்பெனிக்குத் திருப்பினான். எல்லா அடுப்புகளும் ஒரே நேரத்தில் சீராய் இயங்கத் துவங்கின. சர்க்கரை கையிருப்பு உயர்ந்தது. கரும்பு சர்க்கரையான பிறகு, கசடு சிறிது நாள் பெரிய, பெரிய கொள்கலன்களில் வெறுமே கிடக்கும். பத்திரப் படுத்தி வைக்கப்படும். அப்படி கிடக்கின்ற நாட்களில் வேலை அதிகம் இருக்காது. அப்போது ஒரு வாரம் விடுமுறைவிட்டு, மெயின்டனன்ஸ் என்று கம்பெனியில்

எரிகலன்களை, சிறிய அடுப்புகளை, பைப்புகளை, பீப்பாய்களை, தொழிற்சாலை முழுவதுமுள்ள எந்திரங்களைப் பழுதுபார்ப்பார்கள். இந்த முறை அந்த விடுமுறை 10 நாட்களாக உயர்த்தப்பட்டது. பல்வேறு விஷயங்கள் மாற்றப்பட்டன.

காண்டீன் அமைப்பு நவீனமாக்கப்பட்டது. இரவு ஷிப்டு முடிந்து போகும் தொழிலாளர்களுக்கு தங்குமிடம் கட்டப்பட்டது. டாய்லெட் வசதிகளும், குளிக்கின்ற வசதிகளும் செய்யப்பட்டன. தொழிற்சாலையைச் சுற்றிலும் பூச்செடிகள் நடப்பட்டன. சர்க்கரையினுடைய தரம் உயர்த்துவதற்கு என்ன செய்யலாம் என்று மும்முரமாக விவாதிக்கப்பட்ட்து. இன்னும் மூன்று கோடி ரூபாய் போடப்பட்டால் பல்வேறு சௌகரியங்கள் செய்யலாம் என்று சொல்லப்பட்டது. வங்கியில் அவர் கடன் கேட்டார்.

''ஜெனரல் மானேஜர் (தற்காலிகம்) என்ற பதவியை நம்பி, மூன்று கோடி ரூபாய் கடன் கொடுக்க முடியாது'' என்று வங்கி கைவிரித்தது.

''கம்பெனியை விரிவுபடுத்தப் போகிறோம்; காசு கொடுங்கள்; பங்கு வாங்குங்கள்'' என்று பெரிய விளம்பரம், ஒரு பக்க விளம்பரம் செய்தான். அவர் எதிர்பார்த்ததைவிட, அதிகமாக காசு வந்தது. திருமணமாகி இரண்டே வருடங்கள் ஆகியிருக்கின்ற மைத்துனனையும், அவன் மனைவியையும் கம்பெனிக்கு இழுத்து வந்து அதில் முழுமையாக ஈடுபட வைத்தான். பி.ஏ. படித்து முடித்த கடைசிப் பெண்ணையும் கம்பெனிக்கு வரச்சொன்னான்.

''இது உங்க கம்பெனி. உங்க இடம். வெளிய யாருக்கும் விட்டுட்டு வேடிக்கை பார்க்காதீங்க. வந்து வேலை செய்யுங்க. அம்மாடி, கம்பெனியில லா செக்ஷன்னு ஒண்ணு உண்டு. அது கடல். அங்க போய் உட்கார்ந்துக்க. ஒரு விஷயம் முழுக்கக் கத்துக்கிறதுக்கு எனக்குத் தெரிஞ்சு பத்து வருஷம் ஆகும். உட்கார்ந்தீன்னா, இருபத்தெட்டு வயசிலே முழுக்கக் கத்துக்கலாம். அப்போ நீயும் ஜெனரல் மானேஜர் ஆயிடலாம். நீ என் கூடயே இருந்துடலாம்.'' - மைத்துனியை வற்புறுத்தினான்.

மைத்துணன் மனைவியைப் பர்சனல் மானேஜரா்க இருக்கும்படி கேட்டுக்கொண்டான்.



கம்பெனியின் வளர்ச்சி பார்த்து மாமனார் சந்தோஷத்தில் திக்குமுக்காடிப் போனார். அவருடைய அறையில், நாலடிக்கு மூன்றடி சித்தப்பாவினுடைய குளோசப் பட்ம் வைக்கப்பட்டது. ''இவர் மனுஷனல்ல... தெய்வம். இந்தக் கம்பெனியைத் தூக்கி வைச்ச தெய்வம். நான் வாசுதேவமூர்த்தியை அனுப்பறேன். அவன் சரி பண்ணுவான். அவனை நம்பி சகலமும் ஒப்படைச்சிடு. அவன் பார்த்துக்குவான்னு என்கிட்ட குறி சொல்றாம்மாதிரி சொன்னாரே... நானும் கைகூப்பிக் கேட்டுட்டு வந்தேன். அடா... இன்னைக்கு நிமிர்ந்து நிக்கிறேன்னா, அவர்தான் காரணம். சித்தப்பாவின் படத்துக்குத் தினமும் வணங்கிவிட்டு, நாற்காலிக்குப் போவார்.

''கம்பெனி கைமாறிப் போச்சய்யா...''

''அப்படி சொல்லு. வ்ாசுதேவமூர்த்தி தற்காலிகம்ன்னு சும்மா போட்டிருக்கிறாரே தவிர, கம்பெனி தலைவருது. தலைவர் தான் சம்பாரிச்ச காசை, கம்பெனியில கொட்டி சரி பண்ணியிருக்காரு. சம்பந்திகிட்டேயிருந்து கம்பெனியை வாங்கிட்டாரு. அதனாலதான் இப்படி சாப்பாடு, இப்படி காப்பி. தொண்டருடைய வேதனை தெரிஞ்சவரு. தொழிலாளருடைய வேதனை தெரியாதா? கம்பெனி தலைவர் கிட்ட போனதுலதான் பொழைச்சுது'' என்று தொழிலாளர்கள் பேச, அதையே பத்திரிகைகள் கிசுகிசு என்று எழுத, ஆளும் கட்சி அதை ஒரு விஷயமாக எடுத்துக்கொண்டு, ''நீ காசை எங்கே கொட்டியிருக்கிறாய் என்று தெரியாதா? சர்க்கரை ஆலை வாங்கிவிட்ட கோமானே... உனக்கு எப்படி சர்க்கரை ஆலை கிடைத்தது? எங்கிருந்து காசு கிடைத்தது?'' என்று தெரு மேடைகளில் முழங்க, ஆனால், இந்தப் பேச்சு பங்கு மார்க்கெட்டில் உதவியது.

மிக ரகசியமாக, தலைவருடைய தலையீடு அதில் இருப்பதால், அந்த சர்க்கரை ஆலை வெகு நிச்சயம் உயர்ந்த இடத்தைப் பிடிக்குமென்றும், வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் நிலைக்கு ஒரு வருடத்தில் வந்துவிடுமென்றும், பேசப்பட்டு பங்குகளுடைய விலை அதிகரித்தது. கம்பெனியினுடைய கம்பீரம் அதிகரித்தது. அந்த வங்கி கடன் கொடுக்காவிட்டால் என்ன, நாங்கள் கடன் கொடுக்கிறோம் என்று இன்னொரு வங்கி வந்தது.

கடன் கொடுக்க முன்வந்த வங்கிக்கு, ஒட்டுமொத்தமாக கணக்கு மாற்றினான். ''இப்போது தேவையில்லை, கேட்கும்போது கொடுத்தால் போதும்.'' என்று புதிய வங்கியிடம் தெரிவித்தான். பழைய வங்கி காலில் விழுந்து கதறியது. புறக்கணித்தான்.

மூன்று மாதம் ஓய்வு வேண்டும் என்று கேட்ட பெரிய மாப்பிள்ளை, சென்னைக்குக் குடிபெயர்ந்துவிட்டான். அங்கு அவளை, ஊரறிய தனிக்குடித்தனம் வைத்துவிட்டான். மாதம் ஒரு இலட்ச ரூபாய் வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தவனை, மாதம் எழுபத்தைந்தாயிரம் ரூபாய் தருவதற்கு மாமனார் ஒப்புக்கொண்டார். இருப்பத்தைந்தாயிரம் ரூபாய் மகளுக்குக் கொடுத்தார். அவனைப் பற்றி மகளிடம் பேச முற்பட்டபோது, ''என்னை விட்டு அந்த பீடை போச்சே... அதைப் பற்றி பேசாதீங்க'' என்று ஒரே வார்த்தையில் அந்த உறவை உதாசீனம் செய்தாள்.

தொழிலாளர் - முதலாளி சந்திப்பு ஏற்படுத்துவதற்காக, ஒரு சாக்காய், அன்று மாமனாரின் பிறந்தநாள் தொழிற்சாலையில் கொண்டாடப்பட்டது. எல்லா தொழிலாளர்களுக்கும் ஆயிரம் ரூபாய் இலவசக் கூப்பன் வழங்கப்பட்டது. கூப்பனை எடுத்துக்கொண்டு போய், காஞ்சிபுரத்தில் குறிப்பிட்ட துணிக்கடையில் காண்பித்தால், ஆயிரம் ரூபாய்க்கு துணி எடுத்துக்கொள்ளலாம். மறுபடி முழு வேகத்தில் ஃபர்னஸ் வேலை துவங்குவதற்கு முன்பு, எல்லா ஷிப்டுகளையும் இணைத்து விருந்து போடப்பட்டது.

''விலைவாசி கட்டுபடி ஆகலைங்க. கொஞ்சம் சம்பளத்தை நீங்க கூட்டிக் கொடுக்கணும்.'' - கூட்டத்தில் பேசப்பட்டது. மாமனார் எழுந்து ''நிச்சயம் சம்பளம் கூட்டிக் கொடுக்கப் போகிறோம். என்ன என்பது விரைவிலேயே தெரியும்'' என்றும், சம்பளம் கூட்டிக் கொடுப்பதைவிட, சம்பளம் கூட்டிக்கொடுத்து அந்த தொகையை வீடு கட்ட நிலம் வாங்கலாம் என்றும் சொல்லப்பட்டது. வோட்டு எதற்கு என்று சொன்னால், அதற்கேற்ப நடக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

சேத்தியாதோப்பிற்கு அருகே ஒரு கிரவுண்ட் பதினைந்தாயிரம் ரூபாய். எதையாவது அடகு வைத்து



பதினைந்தாயிரம் ரூபாய் ஒரு தொழிலாளி கட்டினான் என்றால், உடனடியாக அவனுக்கு ஒரு கிரவுண்டு நிலம் ஒதுக்கப்படும். பிறகு, வீடு கட்டுவதற்குக் கடன் தரப்படும். கடன் சம்பளத்தில் பிடிக்கப்படும். இப்படி திட்டங்கள் தீட்டி தொழிலாளர்களுக்கு நடுவே பரப்பப்பட்டது. இதையெல்லாம் செய்ய வேண்டும், என்றால், உற்பத்தி அதிகரிக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டது.

'வெறும் சம்பளம் வாங்கி செலவழிக்கிறதைவிட, அதை சொத்தா மாத்துங்க'' என்று தொழிலாளர்க்ளிடையே பரப்பப்பட்டது.

''கம்பெனிக்குக் கடன்பட்ச் சொல்றே... பதினைஞ்சாயிரம் ரூபாய் காசு வாங்கி, அஞ்சு இலட்ச ரூபாய்க்கு கையெழுத்து வாங்கி, வாழ்நாள் முழுவதும் அடிமை சாசனம் எழுதச் சொல்றே...'' - ஒரு ஆள் தவறாகக் குதித்தபோது, வாசுதேவமூர்த்தி எழுந்து விளக்கினான்.

''கடன் வாங்கினாத்தான் இனிமே சொத்து வாங்க முடியும். கடன் வாங்காம, இனிமே சொத்து வாங்குறது என்பது இனிமே நடக்காத காரியம். கம்பெனி கடன் வாங்குது. தேசம் கடன் வாங்குது. பேங்க் கடன் வாங்குது. சேட் கூட கடன் வாங்கித்தான் வட்டிக்கு விடறான். நீங்க கடன் வாங்கினாத்தான் வீடு கட்ட முடியுமே தவிர, எங்கேயிருந்தும் கபக்குன்னு அஞ்சு இலட்ச ரூபாய் வானத்தைப் பொளந்து குதிச்சு நீங்க வீடு வாங்க முடியாது. அஞ்சு இலட்ச ரூபாய் கடன் இருக்கேங்கிறபோதுதான் ஓடி, ஓடி உழைக்கத் தோணும். உக்கிரமா வாழத் தோணும். இல்லைன்னா, வெறுமனே பட்டுத் துணியும், கோதுமை அல்வாவுமா தின்னு கழிச்சிடுவீங்க. யோசனை பண்ணிட்டு வாங்க'' என்று வாசுதேவமூர்த்தி சொல்லி, கூட்டத்தை முடிக்க, அன்று இரவு வாசுதேவமூர்த்தியோடு நூறு பேர் பின்னால் வந்து, வீட்டைச் சூழ்ந்துகொண்டார்கள்.

''என்னப்பா, திடீர்ன்னு இங்க வந்து நிற்கிறீங்க? ஒண்ணுமே புரியலையே...'' - வாசுதேவமூர்த்தி தலவரமானான்.

''நாங்க எல்லாரும் தலைவர் கட்சியில சேரப் போறோங்க.''

அட... நீங்க போய்ச் சேருங்கப்பா. அதுக்கும், எனக்கும் என்ன சம்பந்தம்?''

''நீங்கதாங்க முன்னாடி நின்னு சேர்த்து வைக்கணும்.''

''நான் அந்த விளையாட்டுக்கு வரவே மாட்டேன்.''

''இல்லைங்க. எங்களுக்காக நீங்க பண்ற பல காரியங்கள் எங்களுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. அஞ்சு இலட்ச ரூபாய் என்னைக்கு நான் சம்பாதிச்சு, என்னைக்கு நான் வீடு வாங்கறது? கம்பெனி கடன் கொடுத்தாத்தான் வாங்க முடியும். பதினைஞ்சாயிரம் ரூபாய் நாங்க முன் பணம் கட்டி, மிச்சக் காசை நாங்க போடறதுங்கிறது மிகப் பெரிய விஷயம். நீங்க சொல்றா மாதிரி, கடன் வாங்கி கமிட் பண்ணிக்கணும். அப்பதான் சொத்து சேரும். எதிர் காலம் நல்லாயிருக்கணும். அதே மாதிரி, அரசியலில் இந்தப் பக்கம்ன்னு நாம ஒரு சைடு எடுக்கணும். ஒரு முடிவுக்கு வரணும். ஒரு தலைவர் கீழே நின்னு, உறுதியா அவருக்காக வேலை செய்யணும்.''

''அய்யா, இது உங்க இஷ்டம். நான் சொல்லி, நீங்க சேர்ந்தாக இருக்கக் கூடாது. மத்தபடிக்கு நீங்க சேருவதில் எனக்கு ரொம்ப சந்தோஷம்.'' - கைகூப்பினான். குடந்தைக்குக் கடிதம் கொடுத்து அவர்கள் அனைவரையும் ஒரு ஞாயிற்றுக் கிழமை அங்கு அனுப்பி, கட்சியில் சேருவதற்கு ஏற்பாடு செய்தான். தொழிற்சாலை வாசலில் தலைவரின் கட்சிக் கொடி கம்பீரமாகப் பறந்தது.

அவர்கள் வந்து போன மறுநாள் காலை, கோமளவல்லி தலைசுற்றுகிறது என்று உட்கார்ந்துவிட்டாள். டாக்டரை அழைத்து வந்து பார்க்க, அவள் உண்டாகியிருப்பது தெரிந்தது. வீட்டுக்கும், தொழிற்சாலைக்கும் நடுவே பத்து நிமிட காரோட்டும் தொலைவு. கம்பெனி சரியாக நகர ஆரம்பித்ததால் அவனுக்கு வேலைகள் குறைவாக இருந்தன. கம்பெனியில் நடுவே வேலை குறைவு என்று தெரிந்ததும், ஆட்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று தெரிந்ததும், அவன் கார் எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்துவிடுவான். கோமளவல்லிக்கு அருகே உட்கார்ந்து கொண்டு குதூகலமாகப் பேசுவான். அவளை தொட்டுத் தழுவி முத்தமிட்டு சந்தோஷப்படுத்துவான். இருக்கிற



இடம், பிறந்த இடம். அருகே அர்ஜுனனைப் போலப் போர் செய்யத் தெரிந்த புருஷன். உத்தமன். மாமியார், மாமனார், நாத்தனார் என்று சிறிது கூட நடுங்காமல் தன் ஒருத்திக்கிடையே வளைய வந்த சந்தோஷம், கோமளவல்லியை உற்சாகமடைய வைத்தது. அவள் கரு அற்புதமாக வளர்ந்தது. நிறைசூலியாய், பேரழகியாய் வலம் வந்தாள்.

எல்லோரும் மதிக்கின்ற புருஷனை எனக்கு கால் பிடிச்சு விடேன், கை பிடிச்சு விடேன், தலைவாரி விடேன், நைட்டிக்குப் பட்டன் போட்டு விடேன் என்று ஏவினாள். புருஷன் கம்பெனிக்குப் போனதும் போனில் தொடர்பு கொண்டு, ''எவ்வளவு நேரம் வேலை இருக்கும்? அரை மணியிலே வந்துடுவியா?'' என்று கொஞ்சலாய்க் கேட்டாள்.

''சரி, ரெண்டு மணி நேரத்துல வேலையெல்லாம் முடிச்சிக்கிட்டு வீட்டுக்கு வந்துடு. மத்தியானம் உன் பக்கத்துல படுத்துக்கணும்ன்னு போலிருக்கு'' என்று கட்டளையிட்டாள்.

அவளுக்கு சேத்தியாதோப்பிலேயே தனியார் நர்சிங் ஹோமில் ஆண் குழந்தை பிறந்தது. ஆண் குழந்தை பிறந்த மூன்றாவது நாள் வாசுதேவமூர்த்தியின் சித்தப்பா வெட்டப்பட்டார். அதைத் தடுக்க முயன்ற மூன்று பேர்களில் ஒருவர் அங்கேயே பலியானார். இரண்டு தொண்டர்களின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது என்று செய்தி வந்தது. வாசுதேவமூர்த்தி அலறியடித்துக்கொண்டு குடந்தைக்கு ஓடினான். சித்தப்பாவின் வலது கையில் வெட்டு விழுந்திருந்தது.

''புள்ளை பிறந்திருக்கிறான்னாமே... கங்கிராஜுலேஷன்ஸ். வா...'' - சித்தப்பா இடது கையை நீட்டி, அவன் வலது கையைப் பற்றிக்கொண்டார். வாசுதேவமூர்த்தி அழத் தொடங்கினான்.

''போடா, மடையா... இதெல்லாம் சகஜம்டா... பட்டயத்தை எடுத்தவன் பட்டயத்தாலேயே சாவான். அரசியலில் நுழைந்தவன் அரசியலாலேயே சாவான். அப்படி செத்தாதாண்டா மரியாதை. நோய் வந்தா சாவறது? இப்படித்தான் சாவணும். வந்தவனுக்கு வெட்டத்

தெரியலை. அதைத் தவிர, சிங்கக் குட்டி மாதிரி, நடுவுல ஒருத்தன் புகுந்து அத்தனை குத்தையும் அவன் வாங்கிக்கிட்டான்.'' - அருகில் வைத்திருந்த தொண்டனின் படத்தைக் காட்டினார்.

''வாசுதேவமூர்த்தி, என்னால போகமுடியாது. நீ போ... எவ்வளவு வேணும்ன்னு கேட்டு, அவங்களுக்கு உண்டான அத்தனை வேலையும் செய். அவனுக்கு ரெண்டு பசங்க இருக்காங்க. சேத்தியா தோப்புல வேலை வாங்கித் தரமுடியுமான்னு பார். போ... போய் துக்கம் கேட்டுட்டு வந்து, என்கிட்ட பேசு. இங்க உட்கார்ந்துக்கிட்டு அழுவறதைவிட, எதுனா உருப்படியா செய்யலாம். போ... முதலில் அந்த வேலையைக் கவனி.''

வாசுதேவமூர்த்தி வீட்டுக்குப் போய் இறங்கின ஐந்தாவது நிமிடம் சவ ஊர்வலம் துவங்கியது. அவன் காடு வரை நடந்தே போனான். கொள்ளி போட்டு அழுகின்ற பிள்ளையை அணைத்துக்கொண்டான்.

''நான் இருக்கேன். தலைவர் இருக்காரு. முன்பை விட, உன் குடும்பம் சௌக்கியமா இருக்கும். உங்கப்பா தெய்வமா நின்னு, உங்க குடும்பத்தைக் காப்பாற்றுவார். அழுவறதை நிறுத்திட்டு ஆக வேண்டியதைப் பார். தலைவர் கட்சியில சேர்ந்துடு'' என்று காதோரம் கிசுகிசுத் தான்.

எந்தக் காரணம் கொண்டும் அந்தப் பையன் எதிர் கட்சிக்குப் போய்விடக் கூடாது என்று அவனுக்கு சுற்றி யுள்ளவர்கள் எச்சரித்திருந்தார்கள். அன்று இரவே கட்சி யில், அங்கத்தினராக சேர்ந்துவிட்டான். இரண்டு லட்ச ரூபாய் காசு இறந்தவரின் மனைவியின் பெயரில் பேங்கில் போடப்பட்டது.

''தம்பி, படிக்கட்டும். நீயும் உன் மாப்பிள்ளையும் அடுத்த மாசம் சேத்தியாதோப்புக்கு வந்துடுங்க. சர்க்கரை ஆலையில நான் வேலை வாங்கித் தரேன். அங்கேயே கோ-ஆப்பரேடிவ் சொசைட்டியில சேர்ந்து வீடு வாங்கி நல்லபடியா இருங்க. ஆனால், நீ கட்சியில சேர்றது முக்கியம்'' - உறவினர்களுக்கு நடுவே உரத்து சொல்லி விட்டு வந்தான்.



கட்சியில் அவன் மட்டுமல்லாது, அவன் உறவுகள் பல பேர் சேர்ந்ததாக உடன் வந்தவர்கள் சொன்னார்கள். மறுநாள் சித்தப்பாவோடு சென்னைக்குப் போய், அப்பல்லோ ஆஸ்பத்திரியில் இரண்டு நாள் தங்கி, சித்தப்பாவின் வெட்டுக் காயங்களுக்கு செய்யப்படும் வைத்தியங்களை மேற்பார்வை பார்த்தான்.

''பையனுக்கு என்ன பேர் வைக்கிறது, சித்தப்பா?'' - அவர் வலியைத் திசை திருப்ப பேச்சு கொடுத்தான்.

''உங்க அப்பா பேர் வைடா. அதுதான் மரியாதை. அப்புறமா கும்பகோணம் போய் சீனிவாசனைப் பார்த்து, நல்ல நம்பர் வர பேரா, நல்ல வைப்ரேஷன் வர பேரா ஒண்ணு செலக்ட் பண்ணி வை. அவன் கரெக்டா செய்து தருவான். அவன் சொன்னது எல்லாம், நூல் மாறாம நடந்துக்கிட்டு வருது. அடுத்த வருஷம் எப்படியும் ஆட்சியைப் பிடிச்சிடலாம்ன்னு நினைக்கிறேன்.''

''சீனிவாசன் சொன்ன உக்கிரமான இந்த கத்தி வெட்டோட முடிஞ்சி போச்சில்லையா, சித்தப்பா?''

''இல்லைடா... இதுதான் ஆரம்பம். என்னை எப்படியும் உள்ள தள்ளிடணும்ன்னு பார்க்கிறாங்க. ஜெயில் சோறு திங்க வைப்பேன்னு கட்சி ஆபீசுல எதிர்க் கட்சித் தலைவன் சபதம் பண்ணியிருக்கான். ஏதாவது பொம்பளை விவகாரத்துல மாட்டுவேனான்னுதான் ரொம்ப ட்ரை பண்றாங்க. யார், யாரையோ அனுப்பறாங்க. அரசியலே அசிங்கமா இருக்குடா... விட்டுடலாமான்னு தோணுது. அண்ணா, அண்ணான்னு பத்து பேர் முன்னாடி கூப்பிட்டுட்டு, ரூமுக்குள்ள வந்தவுடனேயே புடவையை அவிழ்த்துப் போட்டுட்டு, அண்ணா, நான் பார்க்கிறதுக்கு நல்லா இருக்கேனா, என்னை உபயோகப்படுத்திக்குங்க அண்ணா, அப்படின்னு கேட்கறா. அண்ணாங்கிற வார்த்தைக்கே மரியாதை இல்லாத போயிடுச்சுடா... இங்க வேணாம். சாயந்திரம் உங்க வீட்டுக்கு வரேன், உடுத்திக் கன்னு சொல்லி, அந்தப் பொம்பளையை உடுத்திக்க வைச்சு வெளியே போனதும், தலை மயிர் பிடிச்சு அடிக்கச் சொல்லிட்டேன். பெரிசானதும் நம்ம ஆளுங்க மடக்கிப் பிடிச்சு, நடு ரோட்டுல கன்னம், கன்னமா அடிச்சாங்க. அந்த

அடிச்சதனோட விளைவுதான் இந்த கத்தி வெட்டு. இது முடியற விஷயமா? நம்ம ஆளுங்களை ரொம்ப அமைதியா இருக்கணும்ன்னு திரும்பத் திரும்ப சொல்லிட்டிருக்கேன். என்ன பண்ணித் தொலைக்கப் போறாங்களோன்னு ஒரு கலவரம் இருக்கும். நீ எப்படிடா இருக்கே..? ஏகப்பட்ட தகராறு தொழிற்சாலையிலேன்னு கேள்விப்பட்டேன்.''

''தொண்ணூறு சதவீதம் சரி பண்ணிட்டேன். புள்ளையும், பொண்ணும், மாமனாரும் ஒத்துழைக்கிறாங்க. ஒரு மாப்பிள்ளை தப்பா இருந்தான். நிறைய காசு கொடுத்து ஒரு ஓரமா உட்கார வைச்சிட்டேன்.''

''வேலை வாங்கிக் கொடுன்னு எங்கிட்ட வரானே... என்னடா கூத்து இது?'' - சித்தப்பா சிரிப்போடு கேட்டார்.

''அந்தப் பக்கம் முழுக்க பாக்டரியை நீங்க வாங்கிட்டதாத்தான் நினைக்கிறாங்க. நான் உள்ளே நுழைஞ்சா, நீங்க நுழைஞ்சா மாதிரின்னு கணக்கு போட்டிருக்காங்க.''

''இது நல்லதில்லையே..?''

''நல்லதோ, கெட்டதோ அப்படி ஏற்பட்டு போச்சு. இனிமே மாத்த முடியாது. இல்லை, இல்லைன்னு சொன்னா ஆமா, ஆமான்னு அவன் புரிஞ்சிக்கிறான். பேசாத விட்டுடுங்க.

''மத்திய அமைச்சர் கேட்டாரு, நீங்க வாங்கிட்டீங்களான்னு. அய்யா, எனக்கும் அதுக்கும் பத்து பைசா சம்பந்தம் கூட இல்லைன்னு கற்பூரம் ஏத்தி அணைச்சப் பிறகுதான் நம்புனாரு. உன்னைப் பத்தி கேட்கறாங்கடா... எல்லாருக்கும் உன்னைப் பத்தி தெரிஞ்சிருக்கு.''

''எல்லாருக்கும்ன்னா என்னப்பா?''

''சி.பி.ஐ.யில விசாரிக்கிறாங்க, உன்னைப் பத்தி.''

''உங்ககூட இருக்கேனில்லையா? அதனுடைய பலன். வந்து விசாரிக்கட்டுமே...''

''வரமாட்டான். அவன் விசாரிச்சு நீ யாரு, உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்ன்னு எல்லாம் தெரிஞ்சிக்கிட்டான். சரி, கிளம்பு... உன் பொண்டாட்டி அங்கே தனியா இருப்பா. நான் உடம்பு சரியான பிறகு, வந்து உன் பிள்ளையைப் பார்க்கிறேன்''



தலைவர் வாசுதேவ்மூர்த்தியின் பிள்ளையைப் பார்க்க வந்தபோது, சேத்தியாதோப்பு கிடுகிடுத்துப்போனது. ஊர் முழுதும் கூடி அவரை வரவேற்றது. மாலை, மரியாதைகள் செய்தது. சித்தப்பா வீட்டில் பத்து நிமிடம்தான் தங்கியிருந்தார். அந்த பத்து நிமிடமும், வீட்டைச் சுற்றி ஏழாயிரம் பேர் அடைசலாய் நின்றிருந்தார்கள். சித்தப்பா தொழிற்சாலைக்கு வர மறுத்துவிட்டார். வாசல் வழியாகப் போய், அங்கே வெளியே உள்ள கொடிக்கம்பத்தில் கொடியேற்றிவிட்டு, ''எல்லாரும் நல்லாயிருங்க. கடுமையா உழைங்க. கட்சியில அங்கத்தினர்களை சேருங்க. தேசத்திற்காகப் பாடுபடணும்ன்னா தொழிற்சாலைக்குப் பாடுபடணும். வீட்டுக்கு உண்மையா இருக்கணும். இதெல்லாம் இருந்தாத்தான் தேசம் நல்லாயிருக்கும்.'' என்று பொதுவாகப் பேசிவிட்டு குடந்தைக்குத் திரும்பிவிட்டார். தலைவர் வெட்டுப்பட்டது அவருக்கு மிகப் பெரிய ஆதரவை கொடுத்திருக்கிறது என்பதை அந்தக் கூட்டம் பார்த்து உணர முடிந்தது.

சேத்தியாதோப்பு தொழிற்சாலை புகை கக்கி, சாராயம் வடிகட்டத் தொடங்கியது. பாட்டில் பாட்டிலாக, பீப்பாய் பீப்பாயாக், லாரி லாரியாக சாராயம் தகுந்த வரிவிதிப்பைச் செலுத்திவிட்டு வெளியேறத் தொடங்கின. திடீரெனத் தணிக்கை இரண்டு முறை நடந்தது. இரண்டு முறையும் ஒரு சிறு தவறு கூட கண்டுபிடிக்கமுடியவில்லை. பாராட்டிதழ் கொடுத்துவிட்டு தணிக்கை அதிகாரிகள் போனார்கள். கம்பெனியின் மீது நல்ல நம்பிக்கை வந்திருக்கின்றது என்று ரிப்போர்ட் எழுதினார்கள். நிர்வாகம் மாறியிருப்பதை சுட்டிக் காட்டினார்கள். வாசுதேவமூர்த்தி காரணம் என்று ஒரு வரியில் தகவல் சொன்னார்கள். ஜெனரல் மானேஜா (தற்காலிகம்) என்கிற பதவி மாற்றப்பட்டால்தான் பல்வேறு விஷயங்களுக்கு நல்லது என்று கம்பெனி ஆடிட்டர்கள் சொல்ல, மாமனார் வற்புறுத்தினார். வாசுதேவமூர்த்தி ஒப்புக்கொள்ளவில்லை.

''என்னுடைய இடம் கும்பகோணம். இந்த வேலை தற்காலிகம். நான் இங்கேயே இருக்கிறதுக்கு வரலை. இருக்கவும் முடியாது. உங்க புள்ளையும், மாட்டுப் பொண்ணும் மேல வந்து நின்னவுடனே, நான் துண்டை

உதறிப் போட்டுட்டு என் பிள்ளையையும், பொண்டாட்டியையும் கூட்டிக்கிட்டு கும்பகோணம் போயிடுவேன். எனக்கு என் வீடுதான் சொர்க்கம்.'' என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டான்.

கம்பெனியின் பங்குதாரரோடு வருடாந்திரக் கூட்டம் நடக்கின்ற அன்று, கூட்டத்திற்கு வந்தவர்களை வரவேற்று, வரவேற்புரை யாரோ நிகழ்த்த, யார், யார் வந்திருக்கிறார்கள் என்று பட்டியல் பார்த்தபோது, சென்னையிலிருந்து தொலைபேசியில் செய்தி வந்தது. சித்தப்பா கொலைக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டிருக்கிறார். சென்னைச் சிறையில் ஜாமீனில் வரமுடியாதபடி அடைக்கப்பட்டிருக்கிறார்.

பெரும் பணம் போட்டு, நிறைய ப்ங்குகள் வாங்கிய முக்கிய பங்குதாரர்களின் கூட்டத்தை விட்டுவிட்டு, பெற்ற தாயாரை இழந்தாலும் போக முடியாது. அது மிக மோசமான பேச்சுக்கு இடமாகும். கம்பெனியினுடைய நிலைமையைக் கேள்விக் குறியாக்கிவிடும். என்ன சமாதானம் சொன்னாலும் எடுபடாது. ஆகவே, மனம் முழுவதும் சென்னையில் சித்தப்பாவைச் சுற்றி இருந்தாலும் வாசுதேவமூர்த்தி பங்குதாரரின் கூட்டத்தை தொடர்ந்து நடத்தினான். அவர்கள் கேட்ட எல்லா கேள்விக்கும் பதில் சொன்னான். கேள்விகள் அனைத்தும் அவனை நோக்கியே கேட்கப்பட்டன. அதில் ஏற்றுமதி எப்போது என்ற கேள்விதான் பிரதானமாக இருந்தது. குறிப்பிட்ட தேதி சொல்லுங்கள் என்று வற்புறுத்தப்பட்டது.

இன்னும் பதினொரு மாதங்களுக்குள் முதல் ஏற்றுமதி துவங்கப்பட்டுவிடும் என்ற உத்தரவாதம் வாசுதேவமூர்த்தி கொடுத்தான். தர நிர்ணயத்தில் தேறிவிட்டதற்கான சான்றிதழைக் காட்டினான். கூட்டம் முடியும் நேரம், நான்கு மணிக்கு சகலரிடமும் விடைபெற்றுக் கொண்டு, நேரே வீட்டிற்குப் போய் துணிமணிகளைப் பெட்டியில் திணித்துக் கொண்டு கோமளவல்லியிடம் விடைபெற்று, குழந்தைக்கு முத்தம் கொடுத்துவிட்டு சென்னையை நோக்கிக் கிளம்பினான்.

குடந்தையிலுள்ள சீனிவாசன் என்கிற ஜோசியரை தலைவர் தலையில் கம்பியால் அடித்துக் கொன்று, கூவம்



ஆற்றில் வீசிவிட்டார் என்று கண்ணால் பார்த்த சாட்சியங்கள் சொன்னதால், அவரைக் கைது செய்திருப்பதாக போலீஸ் தெரிவித்தது.

''என்ன, சீனிவாசனைக் கொன்னுட்டாங்களா..?'' - ரெண்டாவது அதிர்ச்சி வாசுதேவமூர்த்தியை உறைய வைத்தது.

பத்திரிகைகள் சித்தப்பாவைக் கண்டபடி விமர்சனம் செய்து எழுதின. 'கொலைகாரா' என்று போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. கட்-அவுட்டுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. கொடிக்கம்பம் வெட்டப்பட்டு எரியூட்டப்பட்டது.

''அந்தத் தலைவன் மட்டுமல்ல, அந்தக் கரைத் துண்டு போட்ட அத்தனை பேரும் கொலைகாரங்கதான்'' என்று ஆளும் கட்சி உரத்துப் பேசியது.

வக்கீல் தன் செல்ஃபோனை சித்தப்பாவிடம் கொடுத்துவிட்டு வர, அங்கேயிருந்தபடி, வாசுதேவமூர்த்தியை சித்தப்பா தொடர்பு கொண்டார்.

''உன்னால மெட்ராசுல இருக்க முடியுமா, இல்லை, சேத்தியாதோப்பு போகணுமா?''

''மெட்ராசுல இருக்க முடியும், சித்தப்பா. என்னன்னு சொல்லுங்க.''

''நீ கூட இரு. ரொம்ப நெருக்கமா வலை பின்னியிருக்காங்க. என்னன்னு எனக்கே புரியலை. நான் சீனிவாசனை நேத்து பார்த்தேன். ஆனால், கொலை பண்ணலை. அவனைக் கொலை பண்ண வேண்டிய அவசியம் எனக்கில்லை. வேறு யாரோ, சீனிவாசனை என்னவோ பண்ணிட்டு என் தலையில போடறாங்க. கொஞ்சம் பார்த்துக் கண்டுபிடி. மத்திய மந்திரிக்குப் போன் பண்ணி சொன்னா, சில ஆளுங்களை அனுப்புவாரு. அவங்களை வைச்சிட்டு இது என்னன்னு பிடிச்சிடலாம்.'' - அவர் விஷயம் சொல்லிக்கொடுத்தார்.

மத்திய மந்திரிக்கு அதை அப்படியே தெரிவிக்க, மறுநாள் காலை, கர்நாடகாவிலிருந்து இரண்டு பேரும், கேரளாவிலிருந்து ஒருவருமாய் மூன்று இன்ஸ்பெக்டர்கள் மஃப்டியில் வந்து சல்யூட் அடித்தார்கள். தாங்கள் ரகசிய

போலீஸ்காரர்கள் என்றும், மத்திய சர்க்காரின் ஆணைக்கேற்ப, மாநில சர்க்காரில் சேர்ந்து தொழில் செய்வதாகவும், மத்திய சர்க்காருக்காக, மாநில சர்க்காரை வேவு பார்ப்பதாகவும், அந்த வேலைகளை அப்படியே விட்டுவிட்டு, இந்த விஷயத்தைத் துப்பறிவதற்காக அனுப்பப்பட்டதாக சொன்னார்கள். சான்றுகள் காட்டினார்கள்.

சீனிவாசனைக் கொன்று போட்டதாகச் சொன்னதாக சொல்லப்படும் கூவம் ஆற்றுக்கு அருகே போய், மூன்று பேரும் நோட்டமிட்டார்கள். அங்கே, மாநில போலீசார் பிணம் தேடும் வேலையை மேற்கொண்டிருந்தார்கள். உற்றுக் கவனித்த போது, அவர்கள் தேடவேயில்லை. தேடுவதாகப் பாவலா காட்டுகிறார்கள் என்பது புரிந்துபோயிற்று. "ஏன், ஏன்" என்று குடைந்தார்கள்.

"காலம் கடத்தறாங்கப்பா..." மலையாளி திடீரென்று கூவினார்.

"எதுக்காகக் காலம் கடத்தணும்?"

"இந்தத் தண்ணியில ஒரு பொணம் நாலு நாள் இருந்தால் ஒரு இழவும் தெரியாது. ஒரு அடையாளமும் தெரியாது. வெறும் எலும்புக் கூடா பத்து, பதினைஞ்சு விஷயங்கள் எடுத்து மூட்டை கட்டிக் கொடுக்கலாம். அவன்தான்னு சீனிவாசன்னு நீ நம்பத்தான் வேணும்."

"அப்போ, நீங்க சொல்றதுக்கு என்ன அர்த்தம்?"

"சீனிவாசன் இல்லாத வேற ஒரு ஆளை கொன்னு போட்டுட்டு, சீனிவாசனைக் கொன்னதா சொல்லலாம்."

"அப்ப, சீனிவாசன் சாகலைன்னு சொல்றீங்களா..?"

"அப்படியும் இருக்கலாம்."

"சீனிவாசன் எப்ப மெட்ராஸ் வந்தான். யார் பார்த்தாங்க? எப்ப பார்த்தாங்க? சீனிவாசன் கும்பகோணத்துல என்ன செய்துட்டிருந்தார், கடைசியா? யார் பார்த்தது?" கேள்விகள் எழுந்தன.

வாசுதேவமூர்த்தியோடு பயணப்பட்டார்கள்.

சீனிவாசனை முந்தைய கர்நாடக முதல்வர் வீட்டி விருந்து வந்து பார்த்தார்கள் என்று தெரிந்தது. அந்த கர்நாடக முதல்வருடைய அரசியல் எதிர்காலம் சீனிவாசன்



சொன்னது போல இருண்டு போயிற்று. அவருடைய வெளிச்சமான காலம் மறுபடியும் எப்போது வரும் என்று கேட்பதற்காக அவர்கள் வந்திருந்தார்கள் என்று அவர்களை சென்னையிலிருந்து கும்பகோணத்துக்குக் கூட்டி வந்த் டாக்சி டிரைவர் விவரித்தார்கள். அவர்கள் கன்னடத்தில் பேசிக் கொண்டிருந்தார்கள். இருந்தாலும், எனக்குப் புரிந்தது என்று தனக்குப் புரிந்ததைச் சொன்னான். அப்படி சென்னையில் அவர்கள் வந்து தங்கியபோது, ஆளும்கட்சி அமைச்சர் ஒருவர் எதற்கு கும்பகோணம் போகிறீர்கள் என்று கேட்க, கும்பகோணம் போவதற்கு சீனிவாசன் காரணம் என்று அவர்கள் சொல்ல, யார் சீனிவாசன் என்று அந்த அமைச்சர் கேட்க, இன்று தலைவர் பிரகாசமாகவும், வலுவானவராகவும், எதிரிகளால் வீழ்த்தப்படாமல் இருப்பதற்கு அந்த சீனிவாசனே காரணம். நாள் தவறாது அவன் பூஜை செய்துகொண்டிருக்கிறான். அவன் அவருக்கு மிகப் பெரிய வீடு ஒதுக்கியிருக்கிறார். மாதந்தோறும் பல லட்சக்கணக்கான காசு கொடுக்கிறார், என்றெல்லாம் பெரிதுபடுத்தி பேசியிருக்கிறார்கள்.

மைசூர் ஆட்கள் வந்து போனபிறகு, அந்த ஆளும் கட்சி அமைச்சர் சீனிவாசனைத் தரதரவென இழுத்துவரச் சொல்லியிருக்கிறார். சீனிவாசன் வர மறுக்க, முதுகில் அறைந்து, முகத்தில் குத்தி, பெரிய வேனில் கையும் காலும் கட்டப்பட்டு சென்னைக்கு அழைத்து வரப்பட்டிருக்கிறான். அவனுடைய அறையில் ரகளை நடந்திருக்றிது. தலைவருடைய படம் அங்கிருந்தது உடைக்கப்பட்டிருக்கிறது. கல்லாவில் வைத்திருந்த ஏழாயிரம் ரூபாயை வழித்து எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். போலீஸ்காரர்கள் பி.டி. டிரைவருக்கு நன்றி சொல்லி, அவனை கர்நாடகாவுக்குப் போய் தங்கியிருக்கும்படி அனுப்பிவிட்டு, தொடர்ந்து விசாரித்தார்கள்.

ஆளும்கட்சி அமைச்சரின் உறவினரைப் பிடித்தார்கள். "கல்யாணம் ஆன உங்க அக்காவை மூணு மாசம் வைச்சிருந்து ஒண்ணுமே பண்ணாத விட்டானில்லை. அவனைப் பத்தி சொல்லு" என்று கேட்டார்கள்.

அமைச்சரின் தம்பிக்கே அமைச்சரைப் பிடிக்காது என்ற உண்மையை அவன் சொல்ல, அமைச்சரின் தம்பியை

கவ்விக்கொண்டு போய் மகாபலிபுரத்தில் படுக்க வைத்தார்கள். மெல்ல மயக்க மருந்து கொடுத்து விசாரித்தார்கள். சகலத்துக்கும் வாசுதேவமூர்த்திதான் பணம் செலவழித்தான்.

''சம்பளப் பணம் வீட்டுக்குப் போயிருக்குமா, தெரியலையே...'' என்று இன்ஸ்பெக்டர்கள் கவலைப்பட்டபோது, தொண்டர்கள் மூலம் ஆளுக்குப் பத்தாயிரம் ரூபாய் வீட்டிற்குப் பணம் அனுப்பினான். ''உண்மையைப் பிடிச்சிடுங்க, நண்பர்களே... உங்களையே எங்கேயோ கொண்டு போய் வைக்கிறேன்'' என்று வாக்குறுதி கொடுத்தா்.

போலீஸ்காரர்கள் உற்சாகமானார்கள். மெட்ராசுக்குக் கொண்டு வந்த சீனிவாசனை, அமைச்சர் கட்டெல்லாம் அவிழ்த்துவிட்டு ரொம்ப ஆதூரமாப் பேசினாராம். ''போங்கடா... முண்டங்களா... இவரைக் கூட்டிக்கிட்டு வாங்கன்னா, இந்த மாதிரி பண்ணியிருக்கீங்களே... சார், இவங்களெல்லாம் முரடனுங்க சார். மடையனுங்க சார்.'' என்று சீனிவாசன் முன்பே அவர்களை அடித்து நொறுக்கினாராம். ''மன்னிப்பு கேட்டுக்கறேன், சார்'' என்று கால் தொட்டு வணங்கினாராம்.

''நீங்கதானா எல்லாமும். நீங்கதான பெரியவருக்கு ஜோசியம். நீங்கதான் தினம் பூஜை பண்றீங்களா..? எனக்குப் பண்ணக் கூடாதா? பெரியவரை அழிக்கிறதுக்கு எனக்கு உதவி செய்யுங்க. நான் லட்சம், லட்சமாத் தரேன்.'' என்று நேரடியாகப் பேசினாராம்.

''போடா பொறுக்கி. உனக்கு சாவற வேளை வந்துடுச்சிடா...'' என்று சீனிவாசன் உரக்க சொல்ல, அவனை உற்றுப் பார்த்துவிட்டு, ''மூன்று நாள் யோசனை பண்ணு. என் பக்கம் வரலை, நீ மேல் பக்கம்தான் போகணும்'' என்று வானம் காண்பித்தாராம். சீனிவாசன் மூன்று நாள் வெறும் நீர் மட்டுமே அருந்தி உயிரோடு இருந்திருக்கிறான்.

''எனக்கு வேளை வந்துடுச்சு, எனக்கு வேளை வந்துடுச்சு. நான் போற வேளை வந்துடுச்சு.'' என்று சந்தோஷமாகக் கூவியிருக்கிறான். பைத்தியம் போல் நடந்துகொண்டிருக்கிறான். தினமும் மிரட்டப்பட்டிருக்



கிறான். தினமும் அடிக்கப்பட்டிருக்கிறான். அவனை வேறு ஒரு ஜோசியன் வந்து பார்த்துவிட்டு, ''இவன் மந்திரமும் தெரிந்தவனல்ல, தந்திரமும் தெரிந்தவனல்ல; ஜோசியக்காரன் மட்டுமே. தவறான தகவல் கொடுத்திருக்கிறார்கள்'' என்று சொல்ல, அமைச்சர் நொந்துபோனாராம்.

''இவனை விட்டுட்டா சந்தி சிரிக்க வைச்சுடுவான். கொண்டு போய் தலையில ஒரு தட்டு தட்டி, கூவத்துல போட்டுடு.'' என்று சொல்லியிருக்கிறார். அவர்கள் கொண்டு போய் இருக்கிறார்கள். இதற்குப் பிறகு என்ன நடந்தது என்று தெரியவில்லை. யார் கொண்டு போனார்கள் என்பது தெரியவில்லை. கொண்டு போனவர்களை எப்படி தேடுவது என்று புரியவில்லை. ஒரு போலீஸ்காரர் திடீரென்று ஒரு தந்திரம் செய்தார். அமைச்சருக்கு நேரடியாக செல்போனில் தொடர்பு கொண்டார்.

''நீ எவனை கொலை பண்ண அனுப்பிச்சியோ, அவன் பத்து லட்சரூபாய்க்கு உன்னைக் காட்டிக் கொடுக்க எங்க பக்கம் சேர்ந்துட்டான். உன்னைக் காட்டிக் கொடுக்காம இருக்கணும்ன்னா, முப்பது லட்ச ரூபாய் தரணும். உடனே ஏற்பாடு பண்ணு'' என்று போன் வைத்துவிட்டார்.

மற்ற இரண்டு பேரும் அமைச்சர் எங்கே இருக்கிறாரோ, அங்கே போய் நின்றுகொண்டார்கள். அமைச்சர் உடனே கார் ஏறி, சிந்தாதிரிப்பேட்டைக்குப் போய், ஒரு குறிப்பிட்ட ஆளைத் தேட, அமைச்சர் யாரைத் தேடுகிறார் என்று கண்டுகொண்டார்கள். அமைச்சர் தேடுகிறவர் இல்லை என்றதும், மறுபடியும் அமைச்சர் வேகமாக வீடு திரும்பிவிட்டார்.

அமைச்சர் தேடுகிறவர் யார் என்பதைப் புரிந்து கொண்டு, அவன் கூலிப்படை ஆள் என்பதைப் புரிந்து கொண்டு, அவனுக்காகப் போலீசார் காத்துக் கொண்டிருந்தார்கள். போலீசார் காத்துக் கொண்டிருக்கும்போதே அவனுக்காக அமைச்சரின் ஆட்களும் காத்துக்கொண்டிருப்பது தெரிந்தது. அவன் விவரம் தெரியாமல் வீட்டு வாசலில் இறங்கியதும், அமைச்சரின் ஆட்களே அவனை சரமாரியாகத் தாக்க, அவன் தப்பித்துக்கொண்டு ஓட, அவனைத்

தொடர முடியாமல் அந்தக் கூட்டம் விட்டுவிட்டது. போலீசார் அவனைப் பின்தொடர்ந்தார்கள். அவன் உடம்பெல்லாம் வெட்டுக் காயங்களுடன் தவித்துக் கொண்டிருக்கும்போது, அவனை வாரி டாக்சியில் போட்டுக்கொண்டு, தனியார் மருத்துவமனைக்குப் போய் கட்டு போட்டார்கள். முதலுதவி செய்தார்கள்.

நடுநிசியில் வாசுதேவமூர்த்தி முன்னால் கொண்டு போய் நிறுத்தினார்கள். வாசுதேவமூர்த்தியைப் பார்த்ததும் அவன் திகைத்துப் போய் கதறத் தொடங்கினான்.

''என்ன நடந்ததுன்னு சொல்லு. உன்னைத் தப்பிக்க ஏற்பாடு பண்றேன். இல்லேன்னா, உன்னை நான் கொல்லவே வேணாம். அமைச்சர் ஆளுங்க உன்னை ஊர் பூரா சல்லடை போட்டு தேடிக்கிட்டிருக்காங்க. உன் குடும்பத்துல பல பேருக்கு அடி. உன் வீடு சர்வ நாசம். உன்னைக் கொலை பண்ணாத ஓய மாட்டாங்க. என்ன நடந்ததுன்னு சொல்லு.'' - வாசுதேவமூர்த்தி அவன் தொடர்ந்து நடந்ததைச் சொன்னான்,

சீனிவாசனைக் கூவத்துக்கு அழைத்துப் போகும் போது, வயிறு கலங்குகிறது, வெளிக்கு வருகிறது என்று சொன்னானாம். லாரியிலேயே ஒண்ணுக்கு போனானாம். நாற்றம் தாங்க முடியவில்லையாம். வேனை நிறுத்த வைத்து, அவனை பல்கலைகழகத்தில் ஒரு புதரோரம் உட்கார வைத்தார்களாம். ஆமணக்கு செடியைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தவன் திடீரென்று காணாமல் போனானாம். எந்தப் பக்கம் போனான் என்றே தெரியவில்லையாம். இரவில் பல இடங்களில் டார்ச் அடித்து தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லையாம். அவனை விட்டுவிட்டோம் என்பது தெரிந்தால், அமைச்சர் கொன்றுவிடுவார் என்று யோசித்து அவர்களில் சீனிவாசன் உயரமே இருந்த ஒரு ஆளை, இன்னொருவன் கண் ஜாடை காட்ட அவனைக் கூட்டிக் கொண்டு போய், கூவம் ஆற்றங்கரையில் நிற்க வைத்து, ஓங்கி மண்டையில் அடித்து, தூக்கி கூவத்தில் போட்டு வந்துவிட்டார்களாம்.

உடனடியா பாடியைத் தேடச் சொல்லாதீங்க. அப்படித் தேடினா எங்க கைரேகைத் தடமோ, நாங்க



சண்டை போட்டதினுடைய ரத்தக் காயமோ அவன் சட்டையில இருக்கலாம். ஒரு ஆறு, ஏழு நாள் கழிச்சு பாடி கிடைச்சா மாதிரி பண்ணாக்க, எங்களுக்கு ஒரு ஆபத்தும் வராது என்று அமைச்சரிடம் சொல்ல, அமைச்சர் அவ்விதமே அதிகாரிகளிடம் சொல்ல, தேடுதல் பணி நிதானமாகத் தொடர்ந்து வருகிறதாம். சீனிவாசன் எங்கே என்று கேட்டபோது, தெரியாது. பார்க்கவேயில்லை என்று அவன் சத்தியம் செய்தான்.

அவனைத் தனிக்காரில் கேரளாவிற்கு அனுப்பினான். கேரளாவில் நுழைந்ததும், அவன் ரகசியப் போலீசாரால் கைது செய்யப்பட்டு தனிச் சிறையில் அடைக்கப்பட்டான்.

சீனிவாசன் கொலை செய்யப்படவில்லை என்பது தெரிந்தால், உடனே இந்த வழக்கு தூள் தூளாக உடைந்து விடும். சீனிவாசன் கிடைக்கவில்லையென்றால் மக்கள் மனதிலிருந்து சந்தேகம் நீங்காது. என்ன சொன்னாலும் செல்லுபடியாகாது. இன்னொரு புதுக்கதை விடுகிறார்கள் என்றுதான் மக்கள் நினைப்பார்கள். ஆளும் கட்சி அதை சாதகமாகப் பேசுவார்கள். உடனே சீனிவாசனைத் தேடும் படலம் தொடங்கியது.

சிறையில் சித்தப்பாவைச் சந்தித்து சகலமும் வாசு தேவமூர்த்தி சொல்ல, சித்தப்பா அமைதியாகக் கேட்டுக் கொண்டார்.

''சீனிவாசன் கிட்டத்திட்ட இந்த மாதிரி ஒரு விஷயம் பேசினான். சின்ன மீனை வைச்சி, பெரிய மீனை பிடிக்கப் போறாங்க. அப்ப என்ன ஆகும்? சின்ன மீனும் சாகும். பெரிய மீனும் சாகும்ன்னு சொன்னான். எனக்கு ஏகப்பட்ட டென்ஷன். பேசறதை நேரடியாப் பேசு. அப்படின்னு சொன்னேன். உனக்கு பீரியட் நல்லாயில்லேன்னான். அதைத்தான் மூணு வருஷமா சொல்லிக்கிட்டிருக்கியேன்னேன். இன்னும் ரெண்டு, மூணு நாளிலே மோசம், மோசமா விஷயங்கள் நடக்கப் போகுதுன்னு சொன்னான். சரி, நடந்துட்டுப் போகுதுன்னு சொன்னேன். வாசுதேவமூர்த்தி யைக் கூப்பிட்டு பக்கத்துல வைச்சிக்கோன்னு சொன்னான். அவனை நீதானேடா தள்ளி வைன்னு சொன்னே... இப்ப மறுபடியும் கூப்பிட்டு வைச்சிக்கோன்னா, என்னடா இது

விளையாட்டான்னு சத்தம் போட்டேன். எதுவும் பேசலை. மகாலட்சுமி யாத்திரா சர்வீஸ் எங்கிருக்குன்னு கேட்டான். எனக்குத் தெரியலை, விசாரிச்சுப் போ. வேணும்ன்னா வண்டி தரேன்னு சொன்னேன். எனக்கு வண்டியும் வேணாம், ஒண்ணும் வேணாம்ன்னு இறங்கிப் போயிட்டான். இதுதான் நான் கடைசியாப் பார்த்தது.''

''மகாலட்சுமி யாத்திரா சர்வீஸ். அப்படின்னா என்ன? அடடே... அவன் காசிக்கு குரூப், குரூப்பா ஆளுங்க கூட்டிக்கிட்டுப் போறவங்க.''

''அப்படியா? அங்க போனானான்னு விசாரி.''

போலீஸ்காரர்கள் மகாலட்சுமி யாத்திரா சர்வீஸ் போனார்கள். சீனிவாசன் படத்தைக் காட்டி, ''வந்தாரா'' என்று விசாரித்தார்கள். அங்கு வந்தார் என்றும், பணம் பத்தாயிரம் ரூபாய் குடந்தைக்குப் போய் எடுத்து வருவதாக சொன்னார் என்றும், காசியிலிருந்து திரும்பி வராது போனால், அந்தக் காசை கொடுத்துவிடுவீர்களா என்று கேட்டதாகவும் சொன்னார்கள். திரும்பி வராம அங்கேயே தங்கிடுவீங்களான்னு எங்க ஆள் ஒருத்தன் விளையாட்டாய்க் கேட்டான். காசிக்குப் போயிட்டு திரும்பி வருகிறவன் பாவி. அங்கேயே இருக்கிறவன் ஞானின்னு சொன்னார். பேப்பர் பார்த்ததும்தான் அவரை அடிச்சி, கொலை பண்ணிட்டாங்கன்னு தெரிஞ்சுது. மேற்கொண்டு விவரம் தெரிவிக்காமல், வாசுதேவமூர்த்தியிடம் வந்தனர்.

வாசுதேவமூர்த்தி சித்தப்பாவிடம் விஷயம் சொல்ல, சித்தப்பா ''போய்ப் பாரு'' என்று ஒரே வார்த்தையில் டெலிபோனில் முடித்துக்கொண்டார். வாசுதேவமூர்த்தி மூன்று ஆட்களுடன் காசிக்குக் கிளம்பினான். ஹோட்டலில் தங்கினான். அந்தப் பெரிய சாதுக்கள் இறங்கிய காவி உடை ஜன சமுத்திரத்தில் சீனிவாசனைத் தேடினான். இது எளிதான காரியமாக இல்லை. மூன்று போலீஸ்காரர்களும், வாசுதேவமூர்த்தியும் தனித்தனியாக நான்கு நாட்கள் அலைந்த பிறகு, ஒரு போலீஸ்காரர் பதட்டத்துடன் அவர்களைத் தேடிக் கொண்டு வந்தார். கங்கைக் கரை வழியே அவன் வடக்கு நோக்கிப் போய்க் கொண்டிருப்பதாகச் சொன்னார்.



ஒரு டாக்சி பிடித்து கங்கை வழியே போய், ஒரு குறிப்பிட்ட இடத்தில் காத்துக் கொண்டிருந்த போது, தோளில் குச்சி வைத்து, குச்சியில் துணி மூட்டை கட்டி, நடந்து வருவது தெரிந்தது. அந்த நடையே சீனிவாசன் என்று காட்டிக் கொடுத்தது.

அவன் தாண்டும் வரை மௌனமாக இருந்துவிட்டு, அவன் தாண்டியவுடன் ''சீனிவாசா'' என்று ஆதுரத்துடன் வாசுதேவமூர்த்தி கூப்பிட்டான். சீனிவாசன் திரும்பிப் பார்த்தான், வாசுதேவமூர்த்தியின் எதிரே வந்து வெறித்துப் பார்த்தான் உதடு பிதுக்கினான். மறுபடியும் போவதற்கு முயற்சி செய்கிற போது, ஒரு போலீஸ்காரர் அவனைத் தடுத்தார். அவனைத் தடுக்க வேண்டாமென்று வாசுதேவமூர்த்தி சைகை காட்டினான்.

''நீ போயிட்டேன்னு வைச்சுக்கோ, சித்தப்பாவுக்கு ஜெயில் நிச்சயம். அவர் வாழ்க்கை முடிஞ்சு போச்சு. சித்தப்பாவை யாராலும் காப்பாத்த முடியாது. நீ செத்துட்டதா தமிழ்நாடு முழுக்க நம்பிக்கிட்டிருக்கு. ஒரு அப்பாவி ஜோசியனை அடிச்சிக் கொன்னாரு, அப்படின்னு ஊர் முழுக்க போஸ்டர் ஒட்டியிருக்காங்க. மெட்ராசுக்கு வந்து இல்லை, நான் உயிரோட இருக்கேன்னு ஒரு வார்த்தை சொல்லிட்டு, எங்க வேணும்ன்னாலும் போ. இதுக்கப்பறும் உன் இஷ்டம்.'' - வாசுதேவமூர்த்தி சொல்லிவிட்டு காருக்குள் ஏறி உட்கார்ந்துகொண்டான்.

சீனிவாசன் சிறிது நேரம் நின்று விட்டு, மறுபடியும் வடக்கு நோக்கி நடக்கத் தொடங்கினான். ''அடிச்சி இழுத்து வரட்டுங்களா..?'' - கர்நாடகப் போலீஸ்காரர் பரபரத்தார்.

வாசுதேவமூர்த்தி அவரை கையமர்த்தினான். ''இந்த உலகத்துல தர்ம, நியாயம்ன்னு ஒண்ணு இருந்தா, இந்த சீனிவாசன் போகக் கூடாது. எங்க சித்தப்பா ஒரு உத்தமரான மனுசனா இருந்தா, இந்த சீனிவாசன் என் கண்ணை விட்டு நகரக் கூடாது. தெய்வமே... இது உன் மேல ஆணை.'' என்று உரக்கக் கூவினான். அது அங்கிருப்பவருக்குத் தவிர, வேறு யாருக்கும் கேட்டிருக்காது.

நூறடி தொலைவு போய்விட்ட சீனிவாசன் சட்டென்று நின்றான். திரும்பினான். வேகமாய் கார் நோக்கி வந்தான்.

முன்பக்க கதவு திறந்து ஏறிக்கொண்டான். "எங்க வேணா கூட்டிக்கிட்டுப் போங்க'' என்று வெறுப்பாகச் சொன்னான். கார் அவனைச் சுமந்து கொண்டு டெல்லிக்குப் போயிற்று. டெல்லியில் விமானம் ஏறி, சென்னைக்கு வந்து இறங்கினார்கள்.

சென்னையில் இறங்கிவிட்டு, அப்படியே சேத்தியா தோப்புக்குத் திரும்பியது. சேத்தியாதோப்பில் தன் வீட்டில் பலமான காவலில் சீனிவாசனை வைத்துவிட்டு, வாசுதேவமூர்த்தி சென்னைக்கு வந்தான். சீனிவாசனின் போட்டோவை சித்தப்பாவுக்குக் காட்டினான். எங்கே கண்டுபிடித்தோம் என்பதை விவரமாகச் சொன்னான். சித்தப்பா வாசுதேவமூர்த்தியைத் தழுவிக் கொண்டார்.

''தெய்வம் இருக்குடா... உன் ரூபத்துல இருக்கு.'' என்று அவன் தோளில் சாய்ந்துகொண்டார். வாசுதேவமூர்த்தி அவர் முதுகைத் தட்டிக்கொடுத்தான்.

மூன்று நாளைக்குப் பிறகு ஜாமீன் மனுவைப் புதுப்பிக்க சித்தப்பா கோர்ட்டுக்கு வந்த போது, ஆயிரம் தொண்டர்கள் புடை சூழ, சீனிவாசனை கொண்டு வந்தார்கள். கோர்ட்டில் ஆஜர் படுத்தினார்கள். கும்பகோணத்தின் முக்கியமான மனிதர்களை வரவழைத்து, இதுதான் சீனிவாசன் என்று சாட்சி சொல்லச் சொன்னார்கள். சீனிவாசன் தான் எப்படி தப்பித்தேன் என்பதை கோர்ட்டுக்குச் சொன்னான். யார் தன்னை கடத்தி வந்தது என்று அடையாளம் காட்டினான். ஆளும் கட்சி மந்திரி கைது செய்யப்பட்டார். சித்தப்பா விடுதலை செய்யப்பட்டார்.

டெல்லிக்குப் போய் மத்திய அரசுக்கும், மத்திய மந்திரிக்கும், அந்த போலீஸ்காரர்களுக்கும் நன்றி சொன்னார். ''நீயேன் தமிழ்நாடு பாலிடிக்ஸ் மட்டும் கான்சன்ட்ரேட் பண்றே? குண்டு சட்டியில ஏன் குதிரை ஓட்டுற? டில்லிக்கு வா. இங்க இரு. இந்த இடத்தைப் பலப்படுத்து. தமிழ்நாடு உனக்கு தானா கிடைக்கும். அப்படி கிடைச்சா கூட, அங்க நிற்காதே. இங்கே வந்துடு.''

இந்தியாவில் பல மாகாணங்களில் தேர்தல் வர, தமிழ்நாட்டுக்கும் வர தமிழ்நாடு ஆளும்கட்சி படுதோல்வி அடைந்தது. சித்தப்பாவின் கட்சி வெற்றி பெற்றது.



சித்தப்பா முதல்வராகவில்லை. அவருடைய உற்ற தோழரை முதல்வராக்கிவிட்டு, தனக்கு கட்சிப் பணி என்று சொல்லி, டெல்லிக்குப் போய்விட்டார். டெல்லியிலும் மந்திரி சபையிலும் பழைய பதவி ஏற்கவில்லை. யார், யார் எந்தெந்த மந்திரி என்று தீர்மானம் செய்கின்ற உச்ச இடத்தில் இருந்தார். தமிழ்நாட்டில் அதுவரை ஆளும் கட்சியாக இருந்த எதிர்க் கட்சியை சர்வநாசம் செய்ய பல்வேறு விதமான தந்திரங்களைப் பிரயோகித்தார். சொத்துக் கணக்கு காட்டியவருக்கே மந்திரி பதவி என்றார். பழைய மந்திரிகளின் சொத்துக் கணக்கை வெளியே எடுத்து பத்திரிகைகளில் அம்பலப்படுத்தினார்.

ஒழுக்கக் கேடுகளைக் கதை, கதையாகச் சொல்ல வைத்தார். அந்த மூன்று இன்ஸ்பெக்டர்களுக்கும் பதவி உயர்வு அளித்து, டெல்லியிலும், மகாராஷ்டிரத்திலும், சென்னையிலும் நல்ல இடத்தில் வேலை கொடுத்து கௌரவித்தார். அவருக்கு உதவி செய்த மத்திய மந்திரியை நிதி மந்திரி ஆக்கினார். சீனிவாசனுக்கு ஹரித்துவாரத்தில் தோட்டத்தோடு கூடிய வீடு வாங்கிக் கொடுத்தார்.

''இன்னும் ஒரு வருஷம் வரைக்கும் சேத்தியாத் தோப்பிலிருந்து பார்த்துக்க. பிறகு, புள்ளைகிட்டேயும் பொண்ணுகிட்டயும் ஃபாக்டரியைக் கொடுத்துட்டு நீ பாட்டுக்குக் கும்பகோணத்துக்கு வா. அங்க வேலை இருக்கு.''

உலக நாடுகளின் எந்தத் தலைவர்கள் வந்தாலும், அவர்கள் ஜனாதிபதியை முதலாவதாகவும், பிரதமரை இரண்டாவதாகவும், நிதியமைச்சரை மூன்றாவதாகவும், இராணுவ அமைச்சரை நான்காவதாகவும், ஐந்தாவதாக சித்தப்பாவையும் பார்த்து வணங்கினார்கள். சித்தப்பாவை மிக ஸ்நேகமா அணைத்துக்கொண்டார்கள். தினசரி டெல்லியிலிருந்து ஒளிபரப்பப்படும் எல்லா டி.வி. நிகழ்ச்சிகளிலும் சித்தப்பாவை சரியாகக் காண்பித்தார்கள்.

வாசுதேவமூர்த்தி தவழ்ந்து ஓடுகின்ற பிள்ளையோடு குடந்தைக்கு வந்ததும், மிகுந்த சந்தோஷமடைந்தான். ''அப்பா... இதுதான் என் இடம். இதுதான் என் வீடு. போறும்ப்பா. என்னால இதுக்கு மேல வேலை செய்ய முடியாது'' என்று கூவினான்.

''இந்தா... இனிமே என்னை சம்பாதிக்க எல்லாம் சொல்லாதே. இருக்கிறதை வைச்சிக்கின்னு சாப்பிடத்தான் எனக்குப் பிடிக்குது. என்னால வேலை செய்ய முடியாது.'' என்று மனைவியோடு செல்லமாகக் கோபப்பட்டான்,

''உன்னை ஒண்ணுமே சொல்லலைப்பா... உன் இஷ்டத்துக்கு இரு. நீ செய்த வரைக்கும் போதும். நீ யாருன்னு எல்லாருக்கும் காண்பிச்சிட்டே... உன் சாமர்த்தியத்தை தெரியாதவன் யாருமேயில்லை. நீதான் சித்தப்பாவினுடைய வெற்றிக்கே காரணம்ன்னு, கட்சியிலிருக்கிற அடிமட்டத் தொண்டன் வரைக்கும் தெரியும். தனியா, எவனோ கதைகூட எழுதிட்டான், போ... எனக்கும் நீ லொங்கு, லொங்குன்னு, வேலைக்குப் போறது பிடிக்கலை. முன்ன மாதிரி மறுபடியும் கோயில், குளம்ன்னு சுத்திட்டு, மத்தியானம் ஒரு பெருக்கு வக்கீல்கிட்டயோ, ஆடிட்டர்கிட்டேயோ உட்கார்ந்துட்டு சாயந்திரம் மறுபடியும் கோயில், குளம்ன்னு போயிட்டு, பேப்பர் படிச்சிக்கிட்டு, டி.வி. பார்த்துக்கிட்டு உட்கார்ந்திருப்போம். குழந்தைகளை வளர்க்கிறதே முக்கியமான வேலையா செய்வோம்.''

சர்க்கரை ஆலையின் கணிசமான பங்குகள் அவருக்கு வந்து சேர்ந்தன. மாமனார் தன் சொத்துக்களைப் பிரித்துக் கொடுக்கும்போது, சர்க்கரை ஆலையை முழுமையாக மகனுக்கும், மகளுக்கும் கொடுத்துவிட்டு, கும்பகோணத்தைச் சுற்றியுள்ள நிலபுலன்களை கோமளவல்லிக்கும், வாசுதேவமூர்த்திக்கும் எழுதி வைத்தார்.

சித்தப்பா சென்னையிலுள்ள சொத்துக்களையெல்லாம் பிள்ளை கையில் கொடுத்துவிட்டு, தஞ்சை, குடந்தையிலுள்ள சொத்துக்களைத் தன் பெயருள்ள ட்ரெஸ்டுக்கு எழுதி, வாசுதேவமூர்த்தியை அதன் தனிப்பட்ட உரிமையாளராக்கினார். மரக்கடைக்காரர் வீடும் ட்ரெஸ்டுக்கு சொந்தமாயிற்று. அந்த மரக்கடைக்காரர் வீட்டை என்ன பண்ணுவது, மெடிக்கல் காலேஜ் எப்போது வரும் என்று சித்தப்பாவிடம் கேட்க நினைத்திருந்து அது மறந்து போயிற்று. அணைக்கரையில் சித்தப்பா இறக்கிவிட்ட பிறகுதான் ஞாபகம் வந்தது.



போலீஸ்காரனோடு டீக்கடை பெஞ்சில் உட்கார்ந்து டீ குடித்து, சூடான டீ வயிற்றில் போய் ஒரு சுறுசுறுப்பை ஏற்படுத்த ''கொஞ்சம் கூட வாங்க. இங்க யாரையாவது எழுப்பி, வண்டி பிடிச்சு கும்பகோணம் போகணும்.'' என்று சொல்ல, சென்னையிலிருந்து ஒரு போலீஸ் ஜீப் அணைக்கரை தாண்டி வருவது தெரிந்தது. போலீஸ்காரர் கைகாட்டி நிறுத்தினார்.

போலீஸ் ஜீப்பில். ஒரு உதவி கமிஷனரும், அவரது மனைவியும் இருந்தார்கள். ''யாரது?'' என்று கடுகடுப்புடன் இறங்கிய உதவி கமிஷனர், வாசுதேவமூர்த்தியைப் பார்த்ததும் கைகூப்பினார்.

''நான் கும்பகோணம்தான் அய்யா, போறேன். வாங்க...'' என்று வாசுதேவமூர்த்தியை முன்பக்கம் ஏற்றி, தான் பின்பக்கம் அமர்ந்துகொண்டார்.

''மெட்ராசுலேர்ந்து கும்பகோணத்துக்கு ட்ரான்ஃபர் ஆயிடுச்சுங்கய்யா. வேலைக்கு ஒத்துக்கிறதுக்காக கிளம்பி வந்தேன். எல்லையிலேயே உங்களைப் பார்த்தது ரொம்ப சந்தோஷங்கய்யா. கும்பகோணம்ன்னு சொன்னவுடனேயே உங்க பேர்தான் சொன்னாங்க. நீங்கதான் கும்பகோணம். கும்பகோணம்தான் நீங்க. அவரைப் போய் முதல்ல பாருன்னாங்க. இந்த மாதிரி உங்களைப் பார்ப்பேன்னு நினைக்கவேயில்லைங்க. தலைவர் ரொம்ப எளிமையானவருன்னா, அவரைவிட, நீங்க ரொம்ப எளிமையானவரா இருக்கீங்கய்யா.'' என்று பாராட்டிப் புகழ்ந்தார். குடும்பம் பற்றிச் சொன்னார்.

''அய்யா, பசங்க ரெண்டு இருக்குங்க. பள்ளிக்கூடத்துல சேர்க்கிறதுக்கு உதவி பண்ணுங்க. போலீஸ்காரங்க சொன்னா, கேட்பாங்க. இருந்தாலும் நீங்க ஒரு வார்த்தை சொன்னீங்கன்னா, தாமதம் இல்லாத கிடைக்குங்க. மெட்ராசுல இங்கிலீஷ் மீடியத்துல படிச்ச புள்ளைங்க, கும்பகோணத்துல என்னப் பண்ணப் போறாங்கன்னு தெரியலை. கும்பகோணத்துல எத்தனை பள்ளிக்கூடம் இருக்குங்கய்யா?'' - அவர் விசாரிக்க, வாசுதேவமூர்த்தி சிந்திக்கத் துவங்கினான்.

''பாப்புலேஷன் அதிகமான அளவுக்குப் பள்ளிக்கூடங்கள் அதிகமாகலைங்க. நம்முருல நிறைய பள்ளிக்கூடம் தேவைங்க.''

''அய்யா, தலைவரு மெடிக்கல் காலேஜ் கட்ட ஆசைப்பட்டதா சொன்னாங்க.''

''எதுக்குங்க மெடிக்கல் காலேஜ்? அடிப்படை பள்ளிக்கூடப் படிப்பு வேணுங்க. அங்கே போய் ஒரு கிளாஸ்ல அறுபது, எழுபது பேர் திணிச்சிப்புட்டு, மெடிக்கல் காலேஜுல பத்து, பதினைஞ்சு பேருக்கு வகுப்பு நடத்தறது நியாயங்களா..?''

''இன்னொரு மெடிக்கல் காலேஜ்...' ''என்னத்துக்குங்க... தஞ்சாவூரில இருக்கு, சிதம்பரத்துல இருக்கு, திருச்சில இருக்கு, மதுரையில இருக்கு, மெட்ராசுல இருக்கு. எனக்கு கும்பகோணத்துல ரொம்ப நல்ல பள்ளிக்கூடம் ஒண்ணு வேணும்ங்க. ஒரு வகுப்புக்கு இருபது பேருக்கு மேல போகக் கூடாதுங்க. அப்படி ஒரு பள்ளிக்கூடம் ஊட்டியிலதான் இருக்கணுங்களா?''

''மெட்ராசுல இல்லையா?''

''மெட்ராசுல கூட இருக்காமாதிரி தெரியலைங்க. கும்பகோணத்துல ஏன் இல்லை?''

''ரொம்பப் பிரமாதமான பள்ளிக்கூடம் பார்த்துப் பார்த்து, தனித்தனியா ஒவ்வொரு மாணவனுக்கும் ரொம்ப சீரா சொல்லித் தர பள்ளிக்கூடம் ஏன் இல்லை?''

''ஏன் ஒவ்வொரு பள்ளிக்கூடமும் கார்ப்பரேஷன் பள்ளிக்கூடம் மாதிரி மாறிக்கிட்டிருக்கு? ஒரு வகுப்புல ஐம்பது, அறுபது பேர்ன்னு போட்டு திணிச்சி படிச்சானா, படிக்கலையா, நல்லவனா, கெட்டவனான்னு எதுவுமே தெரியாத ஏன் வளர்க்கிறோம்? இந்தப் படிப்புக்கு என்ன லாபம்? யாருடைய அப்பா, அம்மா கெட்டிக்காரங்களா இருக்காங்களோ, அந்தப் பசங்க மட்டும் பொழைச்சிக்கிறான். மத்தவங்களெல்லாம் தோற்றுப் போறான்.''

''அப்படியில்லைங்க... ஒரு விவசாயி பையனுக்கு குறியா ஒரு வாத்தியார் சொல்லிக் கொடுத்தாக்க, அவன் ரொம்ப சுலபமா என்ஜினியரிங் காலேஜ் போயிடுவான். அப்படி ஆற்றலோடு கூடிய ஒரு பள்ளிக்கூடம் கும்பகோணத்துல இருந்தா தப்புங்களா? இது கொடைக்கானலில், ஊட்டியில், பெங்களூரில், டெல்லியில் பணக்காரங்க பசங்க படிக்கிற இடமாத்தான் இருக்கணுங்



களா? இராணுவப் பள்ளிக்கூடம் இருக்குங்களே... அந்த மாதிரி ஒரு நல்ல பள்ளிக்கூடம் ஆரம்பிக்கக் கூடாதா? ஹாஸ்டலோடு சேர்ந்த பள்ளிக்கூடம் ஒண்ணு கும்பகோணத்துல ஆரம்பிக்கணுங்க. அது முக்கியம்னு எனக்குப்படுது. தி பெஸ்ட் ஸ்கூல்ன்னு சொல்லணும். எந்த சிபாரிசும் இல்லாத, பரீட்சை எழுதச் சொல்லி, எந்தப் பையன் நல்லா படிக்கிறானோ, அவனைக் கொண்டாந்து சேர்க்கணும். ஒரு கிளாஸ்ல இருபது பசங்களுக்கு மேலே இருக்கக் கூடாது. ஒரு வாத்தியார்கிட்ட தெள்ளத் தெளிவாப் படிக்கணும். ஒவ்வொரு மாணவனைப் பத்தியும் அந்த வாத்தியாருக்குத் தெள்ளத் தெளிவாத் தெரியணும். ஒரு ஸ்பெஷல் ஸ்கூலுங்க, நான் சொல்றது. அப்படி இருக்கக் கூடாதா?'' - அவர் பேசிக் கொண்டே போக, வாசுதேவமூர்த்திக்கு மனம் விரிந்தது.

கும்பகோணத்திற்குள் நுழைந்ததும், காவிரி ஆற்றங்கரையில் இறங்கிக் கொள்கிறேன் என்று சொல்லி வண்டியை நிறுத்தச் சொன்னார். இறங்கினார். உதவி கமிஷனருக்கு நல்வரவு சொன்னார்.

மரக்கடையார் வீட்டு பக்கத்து நிலங்களையும் வாங்கினால் முப்பது, முப்பத்திரண்டு க்ரவுண்டுகள் தேறும். இங்கே கல்கோட்டை மாதிரி கட்டடம் எழுப்பி அகலமான வகுப்புகள் ஏற்பாடு செய்து உள்ளே கண்ணுக்குக் குளுமையாய் நீல நிற வர்ணமடித்து, மின்விசிறிகள் போட்டு ஒரு தனிப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்க வேண்டும். அடிப்படையை பலமாக்க வேண்டும். குமாஸ்தாக்களை உருவாக்குகிற பள்ளிக்கூடமாக இல்லாமல் குணவான்களை உருவாக்கும் பள்ளிக்கூடமாக ஆக்க வேண்டும்.

படிப்பு என்பது ஜீவநதி. ஒரு நல்ல ஜீவநதிக்கு அருகே ஜீவநதியின் போக்கிலேயே ஒரு கால்வாய் இருப்பது நல்லது. அந்த தனித்த கால்வாயால் பாசனம் இன்னும் செழிப்பாகும். இன்னும் பரவலாகும். பயிருக்கு இடைவிடாத நீர் கிடைக்கும். என் பிள்ளைகள் யாரேனும் பெரியாளாகி இந்த சொத்துக்களைக் கட்டிக்காத்து மருத்துவக் கல்லூரி திறக்கட்டும். பொறியியற்கல்லூரி திறக்கட்டும். அங்கே வெற்று ஆளாகப் போய் நிற்காமல், விவரம் தெரியாதவனாய் நுழையாமல் விவேகமுள்ள இளைஞர்களை இங்கிருந்து அனுப்ப வேண்டும்.

ஊட்டியிலும், கொடைக்கானலிலும் மட்டும்தானா உயர்ரக பள்ளிக்கூடம், கும்பகோணத்தில் கூடாதா...

வரும்: வர்வைப்பேன்.

வாழ்க்கை ஒரு ஜீவநதி. அது ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். மரணம் வரையிலும் ஏதாவது புதிது, புதிதாய் செய்துகொண்டேயிருக்க வேண்டும். செய்கின்ற யோக்கிய தையைக் கடவுள் கொடுத்திருக்கிறானே... அதற்குண்டான பலமும், சூழ்நிலையும் தந்திருக்கிறானே... அதற்கு நன்றி. யாருக்கும் கிடைக்காத சுகபோக வாழ்க்கை எனக்கும் கிடைத்திருக்கிறது. இது மற்றவர்களுக்கும் உதவியாக வேண்டும்.

வாசுதேவமூர்த்தி வீடு நோக்கித் திரும்பினார்.

''என்னங்க, நடந்து போறீங்க?'' - ஒரு கைவண்டிக் காரன் மார்க்கெட் திருப்பத்தில் அடையாளங்கண்டு கேட்டான்.

''வீட்டுக்குப் போறேன்யா'' - வாசுதேவமூர்த்தி மரியாதையாகப் பதில் சொன்னார்.

''நான் வேணா பேச்சுத் துணைக்கு வரட்டுமா?''

''வாங்களேன்...'' - நடந்து போன வாசுதேவமூர்த்தி நின்றார்.

வண்டிக்காரன் லுங்கியை உதறிக் கட்டிக்கொண்டு அவருக்கு அருகாக நடந்தான்.

''மறுபடியும் எலெக்ஷன் வருதாம்ல... யார் ஜெயிப்பாங்க?'' - உரக்கக் கேட்டான்.

''வேற யாரு... நம்ம தலைவருதான் ஜெயிப்பாரு..''

வாசுதேவமூர்த்தி சொன்னவுடன் வண்டிக்காரன் வாய்விட்டு சிரித்தான். அந்த விடியல் வேளையில் அவனுடைய உற்சாகச் சிரிப்பு அவருக்கும் சிரிப்பைக் கொடுத்தது.

- முற்றும் -

Owned, Published, Edited and Printed by SP. Ramu, Published at 286/2, Triplicane High Road, Chennai-600 005. Printed at Sri Parameswari Printers & Binders, 9, Swami Achari Street, Pudupakkam, Chennai -14. Editor: SP.Ramu, Phone: 8572163, 8570773.